# கவிதை உள்ளம்

அ.மு.ப

Aykan

491

# கவிதை உள்ளம்

அ. மு. பரமசிவானந்தம்

வள்ளியம்மாள் கல்வி அறம் சென்னை-30

தமிழ்க்கலைப் பதிப்பகம்
தமிழ்க்கலை இல்லம்
சென்னை-30

முதற் பதிப்பு—1941
இரண்டாம் பதிப்பு—1975
மூன்றும் பதிப்பு—1978

உரிமைப் பதிப்பு

[மத்திய அரசு வழங்கிய சலுகை விலைத்தாளில்
அச்சிடப் பெற்றது]

விலை ரூபாய் ஐந்து

அச்சிட்டோர் :
மெட்ரோபாலிடன் பிரிண்டர்ஸ், சென்னை-2.

# முன்னுரை

என் இளமைக் காலம் இயற்கையோடு இயைந்தது. பாலாற்றங் கரையில் பசுமை நிறைந்த சோலையில் என் பிஞ்சுமனம் பறந்தோடிய காலம் அது. என் உள்ளம் அந்த இயற்கை நலத்தோடு ஒன்றிய இளமைக் காலத்தில்—பத்தாம் வயதிலேயே என்னை அறியாமல் உள்ளத்தில் கவிதைப் பெருக்கெடுத்தது. அந்தக் காலத்திலேயே—நான் வாலாஜாபாத்து இந்து மத பாடசாலையில் படித்துக் கொண்டிருந்த நாளில்—திரு. வா. தி. மாசிலாமணி முதலியார் அவர்கள், பள்ளிக்குப் பார்வையாளர்கள் வரின் என்னை வரவேற்புக் கவிதைப் பாடச் சொல்வார்கள். எனவே கவிதை என்னை ஆடலிலே—இளமை விளையாடலிலே மணங் கொண்டது; மணம் பெற வைத்தது.

பின் காஞ்சிபுரத்தில் ஆண்டர்சன் பள்ளியில் தமிழாசிரியனாகப் பணியாற்றிய காலத்தில்—அரசியலில் பங்கு கொண்ட அந்தக் காலத்தில்—செங்கற்பட்டு மாவட்டக் கழகத்தில் உறுப்பினனாக இருந்து தொண்டாற்றிய காலத்தில், 'தமிழ்க்கலை' என்ற திங்கள் இதழைத் தொடங்கி நடத்தினேன். திங்கள் தோறும், தலையங்கமும் கவிதை ஒன்றும் எழுதி வெளியிட்டேன். எனவே அக்காலத்தில் என் கவிதைகள் பல அச்சேறி வெளிவந்தன. அதற்கு முன்பே 'பாரதி வாழ்வு' போன்ற சிறுபிரபந்த நூல்களும் வேறு சில தனிப் பாடல்களும் சித்தாந்தம், சிவநேசன், பித்தன் போன்ற இதழ்களில் வெளிவந்தன. ஆயினும் அவற்றுள் ஒன்றிரண்டு தவிர்த்துப் பெரும்பாலான எங்குள்ளன என அறியேன்.

இளமையில் எழுதின கவிதைகளும் இடைக்காலத்து எழுதின கவிதைகளும் இவ்வாறு நிற்க, தமிழ்க் கலையில் வெளியிட்டவற்றை மட்டும் தொகுத்து வெளியிடும் வாய்ப்பு 1941ல் நேர்ந்தது.

என்னைப் பெற்று வளர்த்துப் பெரியவனுக்கி வைத்த அன்னை வள்ளியம்மாளும், என்னை வளர்த்து காஞ்சியிலே உடனிருந்து வாழ வைத்த பெரிய அன்னை மீனுட்சி அம்மாளும் 1941—ஜனவரியிலும் அக்டோபரிலும் ஒருவர்பின் ஒருவராக மறைந்தனர். அக்காலங்களில் என் கவிதைகளைத் தொகுத்து கவிதை உள்ளம் I. கவிதை உள்ளம் II என வெளியிட்டேன். அக்காலத்துடன் என் கவிதை உள்ளம் ஓரளவு ஓய்வு பெற்றது எனலாம். பின்பு எவ்வெப் போதே சிற்சில சமயங்களில் கவிதை எழுவது உண்டு. ஆண்டு தோறும் தணிகை முருகனுக்கு ஒரு பாமாலை சாத்தும் வழக்கமும் இருந்தது.

1944ல் நான் சென்னையில் வாழ்க்கை தொடங்கிய பிறகு அதிகமாகக் கவிதைகள் எழுதவில்லை. வேறு பல நூல்கள் எழுதினேன் என்றாலும் கவிதைகளை எழுதவோ. எழுதியவற்றை வெளிக் கொணரவோ முயலவில்லை. எனவே பலருக்கு நான் இளமையில் கவிதை உள்ளம் பெற்ற நிலை தெரிய வழியில்லை.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு பச்சையப்பன் கல்லூரியில் தமிழ் முதுகலை வகுப்பில் பைந்தமிழ் பயின்ற என் அருமை நலம் தோய்ந்த பழைய மாணவர்களுள் சிலர் என் நூல்களைப் பற்றி ஆராய்ந்து கருத்தரங்கு நடத்த வேண்டும் என முயன்றனர். அவருள் ஒருவரான திரு. கணேச நம்பி அவர்கள் என் பாடல்களைத் தொட விரும்பினர். அப்போதுதான் நான் பாடிய பழம் பாடல்களைத் தேட முயன்றேன். கிடைத்தவற்றை அவரிடம்

தந்தேன். அவரே இந்நூலில் பாடல்கள் பகுத்துள்ள வகையில் அவற்றை வரிசைப் படுத்தினார். பின் தமிழ் பற்றிய கவிதைகளைத் தன் கருத்தரங்கக் கட்டுரைக்குக் கருவாகக் கொண்டார். பிறவற்றைப் பற்றியும் எழுதி வைத்துள்ளதாகவும் கூறினார். (வாய்ப்பு நேருமேல் அவற்றைத் தொகுத்துப் பிறகு வெளியிட நினைக்கிறேன்.) அவர் தம் கருத்தரங்கக் கட்டுரையே அறிமுகமாக இந்நூலின் முதலில் அமைந்துள்ளது.

எங்கோ அசாம் மாநிலத்தில் பணியாற்றும் அன்பர் ஒருவர் என் கவிபாடும் திறத்தை எப்படியோ அறிந்து, என் கையாலேயே எழுதிய கவிதையைக் கேட்டார். அவர் கடிதமும் நூலின் 24ம் பக்கத்தில் உள்ளது. அவருக்குப் பதிலாக 'மனிதனாக வாழ' என்ற கவிதையை எழுதி அனுப்பினேன். பின்னும் சில கவிதைகள் இயற்றியுள்ளேன். எனினும் அனைத்தையும் தொகுத்து வைக்கவில்லையாதலால், இந்நூலில் ஒரு பகுதியே இடம் பெற்றுள்ளது. பிறவும் கிடைப்பின் பின் வெளியிட நினைக்கிறேன். சிறப்பாகத் 'தணிகை அந்தாதி' (100 பாடல்)' தணிகைப் பதிகம்', 'தணிகை முருகன் தண்ணருள் வேட்டல்' முதலியன தற்போது கிடைக்கவில்லை. இவையும் பிறவும் கிடைப்பின் பின்னர் வெளிவரும்.

கருத்தரங்கத்தில் என் கவிதைகள் பற்றிக் கேட்ட அறிஞரும் பிறரும் அவற்றைத் தொகுத்த வெளியிட வேண்டுமெனவற்புறுத்தியதாலேயே இந்நூல் வெளிவருகின்றது. இவற்றுள் பெரும்பாலான இன்றைக்கு முப்பதாண்டுகளுக்கு முன் எழுதியவை. என் முந்திய நாட்களை எண்ணிப் பார்க்க இவை எனக்கு உதவுகின்றன. அன்று நான் கண்ட கனவுகளுள் சில நனவாக நின்றாலும், பல இன்னும்

கனவாகவே உள்ளன என்பதைப் பயில்வார் உணர்வர்.

இந்நூலைக் கொணரக் காரணமாயிருந்த அனைவருக்கும் என் நன்றியினைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். 'கவிதை உள்ளம்' என்ற முன்னைய பெயராலேயே இந்நூலையும் அமைத்துள் ளேன். கவிதை உள்ளமே கவி உள்ளத்தைக் காட்ட வல்லது. அவ்வுள்ளத்து முகிழ்ந்த உணர்வுகள் வழி வழியாக வரும் கவிஞர் உள்ளங்களில் நிலைத்து வையத்தை வாழ வைப்பன. அந்த வகையில் இக் 'கவிதை உள்ளம்' அமையும் என்ற உணர்வில் இந்நூலைத் தமிழ் மக்கள் முன் வைக்கின்றேன். ஏற்று 'நலன் உளதேல் காண்க' எனவேண்டி அனைவருக்கும் வணக்கம் கூறி அமைகின்றேன்.

தமிழ்க்கலை இல்லம்
சென்னை 30. 1-12-75

பணிவுள்ள
**அ. மு பரமசிவானந்தம்**

## பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| **அறிமுகம்** | | 9 |
| **க** | **சிறுபிரபந்தங்கள்** | |
| 1. | வெள்ளம் விடு தூது | 25 |
| 2. | வளி விடுதூது | 34 |
| 3. | பாரதி வாழ்வு | 42 |
| **உ** | **தமிழ்** | |
| 4. | தமிழன்னை | 55 |
| 5. | தமிழன்னை திருப்பள்ளி எழுச்சி | 58 |
| 6. | எனது வேட்கை | 61 |
| 7. | வாழி இசையே நீடுழி | 63 |
| 8. | குயிற் பத்து | 65 |
| 9. | குயிலே நீ கூவாய் | 68 |
| 10. | வள்ளுவரை உள்ளிடுவீர் | 69 |
| **ங** | **சமயம்** | |
| 11. | அன்னையின் அடிமலர் அணிகுவாய் நெஞ்சே | 72 |
| 12. | வாழ்க இயேசு நாமம் | 76 |
| 13. | பொய் வணக்கம் போக்குவீர் | 79 |
| 14. | மரணத்தின் மாட்சி | 82 |
| 15. | இன்பக் கோயில் துன்பப் பீடம் | 85 |
| 16. | சோதனையும் சாதனையும் | 88 |
| 17. | அன்னையின் அருள் நலம் | 90 |
| 18. | சைவ இளைஞர்களுக்கு வேண்டுகோள் | 94 |
| **ச** | **காதல்** | |
| 19. | தெய்வீகக் காதல் | 96 |
| 20. | கடலும் காதலும் | 99 |
| 21. | கிள்ளைவிடு தூது | 101 |

பக்கம்

22. உருவெளித் தோற்றம் 104
23. முத்தமே முத்தம் 106
24. வருவதும் போவதும் 108
25. கனவுநினை உரைத்தல் 113

ரு இயற்கை

26. இயற்கை இறைவன் 115
27. அழகே காட்சி 117
28. காலைக் கதிரவன் 120
29. மாலையும் மகிழ்ச்சியும் 122
30. இயற்கை அன்னையின் இன்மதி கொளுத்து 125
31. காலத் தேவா! காக்க வாவா! 127
32. ஓ! ஓ! தென்னை உயர் மரமே 132

சா சமுதாயம்

33. சேரவாரும் 134
34. புத்தாண்டு வாழ்த்து 136
35. நமக்குள் பிணக்கேன் 138
36. பந்தயக் கொடுமை 141
37. தொழிலாளர் துயர் துடைப்பீர் 143
38. வளர்க! 145
39. பொங்குக! 148
40. மனிதன் வாழ 149
41. மனிதனுக வாழ 152
42. திருத்தொண்டர் அண்ணு 156

எ முருகன்

43. முருகன் என் முதல்வன் 158

# அறிமுகம்

## அ. மு. ப. வின் கவிதைகள்*

இரா. ஆா. கணேசநம்பி, எம். ஏ.

" உள்ளத்தில் உண்மைஒளி உண்டாயின்
வாக்கினிலே ஒளியுண் டாகும்
வெள்ளத்தின் பெருக்கைப்போல் கலைப்பெருக்கும்
கவிப்பெருக்கும் மேவு மாயின்
பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெல்லாம்
விழிபெற்றுப் பதவி கொள்வார்
தெள்ளுற்ற தமிழமுதின் சுவைகண்டார்
இங்கமரர் சிறப்புக் கண்டார் "

என்ற தெள்ளுதமிழ்ப் புலவர் பாரதியின் கவிதை, கவிதை எங்ஙனம் உருப்பெறுகிறது, உலகுக்கு என்ன பலன் நல்குகிறது என்பவற்றைத் தெள்ளத் தெளிவாக விளங்கும் உள்ளம் கவர் கவிதையாகும்.

உள்ளத்தில் உண்மை ஒளி பெற்று, வாக்கினிலே ஒளி உண்டாகி வெள்ளத்தின் பெருக்கைப்போல் கவிப் பெருக்கு மேவிய காரணத்தால் ஆசிரியர் அ. மு. ப. அவர்கள் அழகு தமிழில் அரிய பல கவிதைகளைக் கற்பவர் மனம் களிநடமிடு வகையில் படைத்துக் கொடுத்துள்ளார்கள்.

கவிஞர் அ. மு. ப. புனைந்து வழங்கியுள்ள கவிதைகளைத் தமிழ், சமயம், காதல், இயற்கை, பொது என்ற தலைப்புக்

* 10—3—74-ல் பச்சையப்பன் கல்லூரியின் கருத்தரங்கில் வாசிக்கப் பெற்றது.

களில் கண்டு திளேக்கலாம். இன்று ஈண்டு ஆசிரியரின் கவிதைகளுள் தமிழ் என்ற தலைப்பில் அமைந்துள்ள கவிதைகளின் கவி நலனைத் துய்த்து மகிழ்வோமாக,

பேராசிரியர் அ. மு. ப. அவர்களின் கவிதைப் படைப்பில் 'பாரதி வாழ்வு' என்ற படைப்பு 'தமிழகச் சிறப்பு' முதல் 'இறுதி நாட்கள்' என்பதீருக ஒன்பது தலைப்புக்களை யுடையதாய் நாற்பத்து மூன்று விருத்தப்பாக்களைப் பெற்று மிளிர்கின்றது. இச்சிறு நூல் கலி விருத்தம், தரவு கொச்சகம், அறுசீர், எண்சீர் விருத்தங்களைக் கொண்டது. 14-9-1936 இல் வெளியிடப் பெற்றுள்ளது.

இந்நூலின் வழி ஆசிரியர் அ. மு. ப. அமரகவி பாரதியிடம் எத்தகைய ஈடுபாட்டைக் கொண்டுள்ளார் என்பது விளங்குகின்றது.

" .........இன் தமிழ்க் கவிஞன்
தாயினு மினியன் தனையனென் றிரங்தோர்
தாங்குவன் உண்மையிற் றிளேப்போன்
தீயினுங் கொடிய பவமகற் றிடுவோன்"

என்று பண்பு நலனைப் பாராட்டுகின்றதனுலும்,

' இருபதாம் நூற்ருண் டின்தமிழ்க் கவியாம்
இன்பநல் லூற்றுமா மென்றே
ஒருவரோ பல்லோர் உளத்தமைத் தேத்தும்
உத்தமன்'

என்று பின்னர்க் குறிப்பிடுவதனுலும் அது பளிச்சிடுகிறது.

வெள்ளையர் இந்தியாவை ஆண்டுகொண்டிருந்த காலத்தில் இந்தியா சுதந்திரம் பெறவேண்டும் என்று உரைத்து, சுதந்திர முழுக்கம் செய்து மன்னு உலகத்தில் மன்னுதல் குறித்துத் தம் புகழ் நிறுவிச் சென்ற பாரதியின் வாழ்க்கையினை வீறுடன் விளம்பியிருக்கின்ருர் கவிஞர் அ. மு. ப. என்ருல் அவருடைய நெஞ்சுரம் போற்றற்குரியது அன்ரே!

மேலும் தாமியற்றிய நூலின் இறுதியடியில்,

" வாழி நற்றூய வாழ்வுமே இங்கு
மக்களும் சுதந்திரம் பெற்றே "

என்று 1936 ஆம் ஆண்டிலேயே உறுதியாக முழங்கியிருக்கிறார். முன்னுரையாகத் தமிழ் நாட்டின் பெருமையை,

" மூவேந்தர் அரசுசெய முத்தமிழாம்
மொழிவளர முகிழ்க்கும் உண்மைப்
பாவேந்தர் பண்முடைமுதல் பலவளங்கள்
கண்டுவந்த பாடல் கேட்டால்
பூமேவு மலரோனும் புன்மையினல்
தான்படைத்து புவன மாக்கள்
தாமாய்வர்இது மாயா தெனநாணித்
தலைகுனியும் தன்மைத் தாமே "

என்று குறிப்பிடுகின்ற நிலையிலும்,

" மலரவன் செய்த மண்ணேடு மண்ணுய்
மாய்ந்திடு உடலழிந் தாலும்
அலர்த்திடு தன்மை ஆய்ந்திடு கவியின்
அழகுடன் ஆன்மநன் நேயம்
உலகிடை இந்த நாட்டிடை என்றும்
உலவுவ துண்மையீ துண்மை
நலமுடை யவனும் நம்மிடை யிருப்பன்
ஞாலமே அழியினும் மெய்யே "

என்று இறவாத கவிதைகளைப் பாடிய பாரதியார் வாழ்ந்து முடிந்த நிலையைக் குறிப்பிடுகின்ற நிலையிலும் உள்ள பாடல்கள் குமரகுருபரப் பெருந்தகையின்,

"கலைமகள் வாழ்க்கை முகத்த தெனினும்
மலரவன் வண்டமிழோர்க் கொவ்வான்
—மலரவன்செய்
வெற்றுடம்பு மாய்வனபோல் மாயா புகழ்கொண்டு
மற்றிவர் செய்யும் உடம்பு "

என்கிற நீதிநெறி விளக்கத்தின் பாடலை நினைவுறுத்தி நிற்கின்றன.

நற்சின்ன சாமி மைந்தன்', 'இந்த
விரிந்திடு புவன முய்ய வீரமே சிறந்து ஓங்க
அறந்தழைத் தருள் கொழிக்க ஆண்டவன் அருள் நிலைக்க'
தீமையும் பழியும் பறந்திட '
வந்தவ தரித்தான் நம்மை வாழ்விக்க வந்த மெய்ம்மைச்
சுந்தரநாதன் சொற்பேர் சுப்பிரமணியன்'

என்று தோற்றத்தைச் சாற்றியிருப்பது போற்றத்தகுவதாய் உள்ளது.

' கவிபுனை திறத்தைக் கண்ட கற்றறி புலவர் பல்லோர்
நவின்றிடு கூட்ட மொன்றில் நன்றெனப் புவி யிசைக்க
உவகையின் கரையை நண்ணி உயர்ந்திடு பாரதிப் பேர்
அவன்தமக் களித்தார் '

என்று பாரதி என்ற பட்டத்தைப் பாரறிய அவர் பெற்றதைப் பாராட்டிச் சொல்லுவதும் பாங்குற அமைந்துள்ளது.

'அழகிய மாசென்னை நகர்' சென்றதும் 'விரிந்த தமிழ்ப் பத்திரிகை' யாம் 'நீண்டதொரு ஆயுளுடை நேர் சுதேச மித்திர'னின் துணையாசிரியராயிருப்பதையும் குறிப்பிட்டுப் பின்னர் எழிற்புதுவைப் பதியடைந்து,

' மதுவெனவே மனங்களிக்கும் மாண்கவிகள் மாநிலத்து
இதுஇதுவே நிகர்க்குமென யியற்றியிசை யியற்றி
யிட்டான்''

என்று கவிதைகள் இயற்றிப் புகழ்பெற்று வாழ்ந்ததையும் ஆசிரியர் அழகுபெறக் கூறுகின்றார்.

தீமையே யற்ற மனிதனுகச் செந்தமிழ்க் கவிஞன் புதுவைப் பெருநகரில் தங்கினார் என்று கூறும் அ. மு. ப. அவர்கள் கவிஞனுக்கு அடைக்கலம் தந்த அந் நகரை,

கருங்கடற் றிரைகள் கணக்கிலா தனவாய்க்
காண்டொறு மின்பமே அளிக்கும்
பெரும்பயன் பெறுநற் புதுவைமா நகரின்
பேரெழில் கூறிடின் அடங்கா '

என்று செம்மையாகப் பாடுகின்றார்கள்.

| | |
|---|---|
| அழகியமா சென்னை நகர் | 30 |
| உயர்ந்திடு சென்னை | 37 |
| புதுவை நன்னகர் | 37 |
| புதுவைத் தூநகர் | 35 |
| இன்பநிறை மெய்க்காசித் தனிப்பதி | 26 |
| தன்னிலுயர் திருநெல்வேலிப் பதி | 27 |
| மதுரையெனும் வியன் பதி | 29 |
| பாண்டி உயர்ந்த நாடு | 7 |

என்று இக்கவிதை நூலில் நாட்டின் நற்பதிகளைச் சொல்லும் போது முன்னே பின்னே அருமையான அடைச்சொல்லோ சொற்களோ பெய்து கூறியிருப்பது கற்பவர் நெஞ்சைத் தொடக்கூடியதாக உள்ளது.

நாட்டிற்கு நல்லது போற்றிப் பாடிய பைந்தமிழ்ச் சாரதியாம் பாரதி வாழ்வைப் படம்பிடித்துக் காட்டும் இந் நூலில் ஆசிரியர் 'நல்' என்ற அருமைச் சொல்லினை, பாரதத் தாய் நன்னாடு (4) எட்டையநற்புரம் (11) நற்பாண்டி (9) நற்சின்னசாமி மைந்தன், நற்றுணைத்தலைவன் (30) நற் புதுவைமாநகர் (34) சொந்தநற்பதி (36) மெலிந்த நல்யாக்கை (37) இன்பநல் ஊற்று (41) ஆன்மநல் நேயம் (62) வாழிநல்தூய வாழ்வுமே (43) என்று இவ்வாறு பல முறை எடுத்தாள்வது இவர்தம் நல்லுள்ளத்தினை நன்கு வெளிப்படுத்கின்றது.

‘ காமேவு பலதலங்கள் காணரியு அற்புதங்கள்
கலந்து நின்ற
நாமேவு பாரதத்தாய் நன்ஞடு இதன் பெழிமை
நவிலற் பாற்ரே ’

“ சொல்லாலே உயர்ந்திடுநற் பாண்டிவளப்
பழம்பெருமை சொல்லொ ணுதே ”
‘ புதுவைமா நகரின் பெரெழில் கூறிடின் அடங்கா ’

என்று வருகின்ற பகுதிகள், ‘இப்பொழுது எம்மஞேரால் இயம்பிடற் பாற்ரே’ என்ற கவிச்சக்கரவர்த்தி கம்பனின் சொற்ருெடரையும் அமைப்பையும் நினைவூட்டுகின்றன. ‘அக்காலத்தவன் புரிந்த’ என்ற பாடலில் ஆசெதுகை அமைந்துள்ளது.

(அக்காலத்தவன் புரிந்த.........
எக்காலும் மறவாமல்.........
இக்காய மழிந்தாலும்............
மெய்க்கானவழி பலவும்.........)

புத்தம் புதுவகைக் கவிதைகள் மெத்தவும் பாடி வளர்த்த தேசியக்கவி பாரதியைப் போற்றிக் கவிதை நூல் யாத்த ஆசிரியர் வான்புகழ் வள்ளுவரைப் பற்றி ‘வள்ளுவரை உள்ளிடுவீர்’ என்ற தலைப்பில் கவிதை புனைந்துள்ளார். அதில் தமிழ் மாந்தரை விளித்து,

‘............உங்கள்
கேண்மைமிகு புலவன் உலகிலே ஒருபுலவன்—அவனே
உவமை ஒருவரின்றி ஓங்கிநின்ருன் ;

என்று வள்ளுவரைப் பாராட்டுவதோ டமையாது அவர் வழங்கிய குறள் மக்களை வையத்துள் வாழ்வாங்கு வாழவைக்கிறது என்றும் அதன் செம்மை நலம் முழுதும் செப்பரிது என்றும் கூறுகிருர்.

# அறிமுகம்

திருவள்ளுவர் திருநாள் அமைத்துப் புகழ்பேசுங்கள் என்று கூறும் ஆசிரியர்,

> ' உலகெலாம் அவன் பெருமை ஓர்ந்து
> உயர்ந்திடு நிலையில் நாம் ஊமையராய்
> நிலவிடல் நீதியன்றே ' என்று கூறி

அன்றே தம் கவிதைத் திறத்தால் தமிழரினத்திற்கு விழிப்புணர்ச்சியூட்டியிருக்கின்ருர். வள்ளுவனுக்கு விழாவெடுப்பதால் தமிழ்மொழி வாழ்வடையும் என்று கூறும் ஆசிரியர் 'உங்கள் குழந்தைகள் இளமொழி' குறளெனவே நிலவிடச் செய்திடுவீர் என்றும் வேண்டியுள்ளார்.

இருபதாம் நூற்ருண்டின் தொடக்க காலத்தில் மறைந்த மகாகவி பாரதியையும் 20 நூற்ருண்டுகட்கு முன் வாழ்ந்த தெள்ளுதமிழ் வள்ளுவனையும் கவிபுனைந்து பாராட்டியுள்ள ஆசிரியர், 'வற்ரு வளத்தால் வாழ்விக்க வரலா றறியா வகை ஆண்டே வண்மைத் தமிழர் உளநிறைந்த' பேறிஞர் அண்ணு அவர்கள் முதலமைச்சராகத் திகழ்ந்த காலத்தில் அவ்வருங் குணச் செம்மலை வாழ்த்திப் பாடியிருக்கின்ருர். காஞ்சியிலும் கவிஞர் சென்னையிலும் உள்ள 'பச்சையப்பர்' அறிஞர் அண்ணு அவர்கட்குக் கல்வியளித்தது என்று நினைவு கூரும் ஆசிரியர், 'எல்லாக் கலையும் நிறைவுறவே இயங்கும் கலைப் பெட்டகமாக' அண்ணு அவர்கள் விளங்கினுர்கள் என்றும் 'தண்ணென் குணமும் தமிழ் நலத்தே தன்னைத் தோய்த்த தனிப்பண்பும் தளரா உளமும் பெற்று' இத்தமிழின் வளத் திற்காகவே வாழ்ந்திட்டார்கள் என்றும், 'கற்ருரும் கல்லா தாரும் உற்ருராகப் போற்றிவாழ்ந்தனர்'என்றும்,'மாற்ருேர் என்பாரும் மறைவில் அவர்தம் புகழ்பாடி மனத்தால் போற்றி வாழ்ந்தன'ரென்றும். 'இன்னுேர் இனியார் என்னுது எல்லோரையுமே இனிதேற்று, இன்சொல் இயம்பி இன்முகத்தால் இயைவ புரிந்தே இடர் களைந்தார்' என்றும், அரிய

தமிழின் நிலை உயர்திய அண்ணு அவர்களைப் பற்றிக் கூறி யுள்ளார் ஆசிரியர். மேலும்,

‘ பண்ணுல் இசையால் பாநலத்தால்
பல்லோர் உன்னைப் பாராட்டப்
பரவுதமிழ் போல் என்றென்றும்
பல்கு புகழால் வாழியவே ’

என்று அழகாக வாழ்த்தி முடித்திருக்கின்ருர். செயற்கருஞ் செயல்கள் செய்திட்ட பேரறிஞர் அண்ணு அவர்களைத் ‘திருத்தொண்டர் அண்ணு’ எனும் தலைப்பில் மூன்று பாடல் கள் பாடியுள்ளார்.

“ காரோங்கும் தமிழகத்தில் கவிஞேங்கும்
வளம்பெருக்கிக் கற்ருேர் வாழும்
சீரோங்கும் எம்காஞ்சிச் செல்வமென வந்தவனே...
பாரோங்கு தொண்டதனுல் பகலவனின்
இதயத்தைப் பற்றி யின்று
பேரோங்கு தமிழகத்தின் முதலமைச்சராய்ப்
பிடுங்கிடுநல் பெரிய அண்ணுல் ”

என்று குறிப்பிடும்போது காஞ்சியின் சிறப்பையும் தொண் டினுல் முதலமைச்சராய் விளங்கிட்டார் என்ற தன்மையை யும் சுட்டுகின்ருர். பேசரிய திருத் தொண்டால் பெரியரான திருத்தொண்டர் அண்ணு என்று குறிப்பிடும் அ.மு.ப.

‘ இளமையிலே தமிழ்த்தொண்டு இளமையிலே
கலைத்தொண்டு இனிய வாழ்க்கை
வளமையெலாம் தொண்டாலே வரல்வேண்டும்
எனக்காட்டி வாழ்ந்த அண்ணுல் ’

என்று எடுத்து மொழிகிருர்.

செந்தமிழ் மொழியால் வளர்ந்து தமிழை வளர்த்து சான்ருேர்களைப் பாராட்டும் ஆசிரியர் அவர்கள் முன்னைப்

பழமைக்குப் பழமையாய்ப் பின்னைப் புதுமைக்குப் புதுமை யாய் நின்றிலங்கு தமிழன்னையின் பெருமையைச் சில தலைப் புக்களின் வழி பாராட்டியுள்ளார்.

ஆசிரியர் இயற்றியுள்ள தமிழன்னை எனும் கவிதைத் தலைப்பு பதினன்கு இனிய பாக்களை யுடையது.

‘ உலகுக் கொருநூல் உயர்ந்திடு நற்குறள்
உண்டாக்கினு ளவள் யார்?—என்றும்
நிலவும் இளமைசேர் நேர்மை நலம்எறை
நித்திலம் போன்றவள் தாய் ’

‘ உயர் உய்வுக் கதிகாரி, உத்தமி, பொற்கொடி’ என்றெல் லாம் தமிழன்னையைப் பாராட்டுகின்றார்.

சேரன் செங்குட்டுவன் ஆரிய நாட்டினரின் ஆணவத்தை அடக்கி அவர் தலையிற் கல் ஏற்றி வந்தது, மகனை முறை செய்தது ஆகிய செய்திகளைக் கூறி, ‘ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்’ என்ற சீரிய மொழி தமிழ் மொழியின் வழி வந்ததன்றே என்றும்,

‘ தாமின் புறுவ துலகின் புறக்கண்டு
சாந்த முறுவ ரென்றே—அவர்
நாமின்று வாழ்ந்திட நாடி உரைத்திட்ட
நல்லுரை வாய்மை யன்றே’

என்றும் அரிய பொருள் நூல் வழி ஆக்கிய செல்வத்தினுல் சக மெலாம் போற்றிடத் தாழ்வின்றி வாழ்ந்தனள் என்றும் போற்றியுள்ளார்.

மாணிக்கவாசகர், தொண்டரடிப்பொடி யாழ்வார் அமரகவி பாரதி ஆகியோர் திருப்பள்ளியெழுச்சி பாடியமை போல் அ.மு.ப. அவர்கள் தமிழன்னைக்குத் திருப்பள்ளி யெழுச்சி பாடியுள்ளார்கள்.

அலகினில் ஆதியும் அந்தமு மில்லா
அருந்தமிழே உன தழகதே அழகு ’

'தென்மதுரை நகர் சீர்பெருந் தகைத்தாய்
தெரிந்திடு தலைச்சங்கந் தனிலிருந் தாயே'

'விற்பனர் நற்றவர் மற்றவர் யாரும்
விரும்பிடும் இன்தமிழ் விருந்தெனு மமுதே
அற்புதம் அற்புதம் நின்மொழிப் பெருமை'

'எக்குலத் தாரெனும் வேற்றுமை யின்றி
எம்மதத் தாரினும் இரண்டெடென லின்றி
மிக்குடை ஒற்றுமை வழிதனைக் காட்டி
மேன்மைத் தமிழர்கள் என உணர்த்திட்டாய்'

'மன்னவர் மற்றவர் மாற்ற மொன்றின்றி
மண்ணின்மேல் சமமென வந்துனைப் பணிந்தோம்
உன்னருள் விழியுடன் கண்டெமைப் புரக்க
ஓங்குமென் தமிழன்னை உடனெழுந் தருளே'

என வரும் அடிகள் நெஞ்சத்தைத் தொடுகின்றன.

தமிழ் பெற்றுள்ள இலக்கிய இலக்கணங்களையெல்லாம் கூறி,

'ஒப்புனக் கொருமொழி யில்லையீ துண்மை
உத்தமியே பள்ளி எழுத்தரு ளாயே'

என்றும் உயர்தமிழ், இன்தமிழ், நற்றமிழ், அருந்தமிழ், தண்டமிழ், பைந்தமிழ், உயிர்த்தமிழ், தமிழன்னை, அருளுரு, உத்தமி என்றும் அழகு பெறத் தன்நேரில்லா அன்னைத் தமிழைப் பாராட்டியுள்ளார்.

பத்து அறுசீர் விருத்தங்களால் அமைந்த குயிற்பத்துள் தமிழின் பெருமையைக் குயிலின் வாயிலாகக் கூவ வைக்கின்றார் ஆசிரியர்.

'வித்தகச் சோழரும் சேரர் வியன்நிலைப் பாண்டியர் யாரும்
ஒத்து வளர்த்த தமிழே ஓங்கி வளர்ந்திடக் கூவாய்'

எனக்கூறும் ஆசிரியர் முத்தமிழ் சுவைத்து, வள்ளுவன் பெருமையையும் செஞ்சிலம்பு இசைத்திடு சேரன் புகழையும் செப்பிச் சிறப்புப் பெறு என்று கூறி,

' வேண்டும் பொருளைப் பெறுவாய்
  வேண்டியே பெற்றனர் பல்லோர்
ஈண்டும் பெறுபவர் உண்டு
  இன்தமிழ்ப் பாட்டிசைத் திங்கே
கூண்டிலடை படா தெங்கும்
  கூவித் திரிந்திடு குயிலே
ஆண்டவன் பாதமும் பெற்றே
  ஆனந்த முற்றிடக் கூவாய் '

என்று குயிலை ஏவல் கொள்கிறார். மேலும்,

' தோன்றிய காலம் அறியாத்
  தூய்மைத் தமிழ்தனை ஓதின்
யாண்டும் புகழ்பெற்று வாழ்வாய்
  யாதினுக்கும் அஞ்சல் வேண்டா '

என்று குயிலினை அஞ்சற்க என அறிவுறுத்துகின்றார். 'குயிலே நீ கூவாய்' என்ற தலைப்பில் பின்னர் எழுதிய (1972) - பாடல்களிலும் தமிழின் பெருமையை அழகுநலம் கனிய எடுத்தோதியுள்ளார்.

' எனது வேட்கை' எனும் தலைப்பில்
' எப்பதவி கொடுத்தாலும் ஏது நன்மை வந்தாலும்
.........................
அவை வேண்டா ஆனால் எந்தாய் உந்தன்
பூமலராம் தமிழ்ப்பாதம் போற்றல் செய்யும்
பொற்றொழிலே நற்றொழிலாய்ப் போற்று வேனே '

என்று கூறுகிறார்.

'எங்குமுன தின்னெழிலே இனிமையாக
இயைந்திருந்த அந்நாளேயாக இந்நாள்
மங்களமாய்க் கண்டிடவே வேட்கைகொண்டு
மண்மீதில் வாழ்கின்றேன்'

என்று தனது வேட்கையை வெளியிட்டிருக்கின்றார். மேலும்,

'உன்வளர்ச்சி உள்ளுவதே எந்தன் இன்பம்
உன்புகழைப் பாடுவதே எந்தன் வேட்கை
மன்னவனும் அடிபணிந்து போற்றச் செய்து
மண்ணுலகில் உன்பெருமை நிலவ வைப்போம்
உன்இனிமை கேட்பதுவே உவகை எந்தாய்
உயர்விதன்மேல் உண்டேயோ உலகை எல்லாம்
உன்மயமாய் ஆக்குமொரு நன்னுள் இங்கு
உற்றிடுதல் காணுவதே உளத்து வேட்கை'

என்று அமைந்த உணர்ச்சிக் கவிதை கற்பவர் உளத்திற்கு உவகையும் பூரிப்பும் ஊட்டி நிற்கிறது.

'நமக்குள் பிணக்கேன்' என்னும் தலைப்பில்
'அருமைத் தமிழ் மக்களே—நாமே
அன்னைத் தமிழினுக்கு ஆக்க மாவோம்'

என்று அழகாய்த் தொடங்கித் தமிழர் அனைவரும் ஒரே இனத்தார், சாதிகள் நமக்கில்லை, ஆதியில் நாம் ஒன்றே, அக்காலத்தில் சமண, சாக்கிய, சைவசமயத்தார் தமிழை ஓதி ஒன்றிநின்றார் என்று பல கருத்துக்களை அடுக்கிவைக்கின்றார் ஆசிரியர்.

'இடையினில் யார் யாரோ—இங்கே
ஏறிநமைப் பிரித்துக் கூறு செய்தார்'

என்றும் அவர்கள் தமிழரை ஆட்டிவைக்கப் படைத்ததுதான் சாதியும் சடங்குகளும் என்றும், அதனால்

" அருமைத் தமிழர்களே—நீங்கள்
அன்னைக் கொடிநிழற்கீழ் அமர்ந்திருப்பீர்"

நம் குலமும் குடியும் கும்பிடு கடவுளும் ஒன்று, ஆகையால் 'கூடி மகிழ்ந்திடுவீர் கூடு மின்பம்' என்றும் கூறி, இறுதியாக,

' வாழ்கவே நற்றமிழர்—நாளும்
வளம்பெறு இன்பத்தில் வாழியவே'

என்று வாழ்த்துக் கூறி முடிக்கின்றார்.

தமிழைப் பற்றிக் கூறும் பாடல்களில் கடைசியாகக் காண இருப்பது 'வருவதும் போவதும்' என்ற தலைப்பில் அமைந்த பாடல் பற்றியது ஆகும்.

தமிழின் மேன்மையைக் கூறத் தமிழைத் தலைவி ஆக்குகிறார். அந்நிய மொழியை அடுத்து ஒரு பெண்ணுக் உருவகித்துத் தன்னை விரும்பாத் தமிழ் மகனை—தமிழையே காதலியாக விரும்பும் தலைமகனை அவள் (அந்நிய மொழியாகிய பெண்) தானே வலியவந்து விரும்புவதாகப் படைத்து மொழிந்துள்ளார். படித்துத் துய்க்கவேண்டிய அருமைப் பாட லிது.

இப்பாடலைப் படிக்கும் போது நம் மனத்தில் கம்பர் படைத்த சூர்ப்பணகை காட்சி தருகின்றாள். பாடலோட்டம் பாரதியை நினைவூட்டி நிற்கின்றது.

' நான் ஓர் வடஜாதி நாட்டிலெனைப் போன்றவரைக்
காணக் கொடுத்துவைப்பார் காசினியி லுண்டேயோ?'

என்று அவளை அவள் வாயிலாகவே அறிமுகம் செய்து வைக்கின்றார் ஆசிரியர்.

ஒரு பெண்ணே வலிய வந்து ஆடவனிடம் தன்னை விரும்பி ஏற்றுக் கொள் என்று வேண்டுவதும்,

' ஆசை அழகா ஆண்களிலே தோளழகா
நேசம் மிகுந்தாய் நிறைந்த பொறையுடையாய்

என் அழகைக் கண்டு இளகமன மில்லைகொல்லோ
உன் அருகே என்றும் உற்றகதை உரைப்பேன்
கண்ணாளா என்பேர் கண்ணாட்டி தானாகும்'

என்று தன்னைப்பற்றித் தான் கூறிக்கொள்வதும் நகைப்பினை நல்குகிறது.

வலிய, தன்மேல் சாயவந்த அவளிடமிருந்து ஒதுங்கி அலறிநின்ற ஆடவனிடம்,

'கோபம் ஏன் கொண்டீர் கொண்டால் எனைப் பலனும்
வேகமாய் மிக்கிடும்நீர் வேண்டியதைச் செய்திடுவேன்
வீட்டிற்குப் பொட்டிட்டு வேலை பலசெய்து
வாட்டம் அகற்றி வளர்ப்பேன் பணிப்பெண்ணாய்,
கண்ணாளா என்னைக் கலியாணம் செய்தக்கால்
எண்ணாத தேசம் எல்லாமும் சுற்றிடலாம்
என்னைப் பலரறிவார் யானறிவேன் அவர்பேச்சு
உன்னை உடனழைத்து உற்றநலம் பற்றிடுவேன்'

என்று பலவாறு பசப்பியதையும் பகர்கின்றார். இவ்வாறு கெஞ்சியவளை,

'நீ வாழவேண்டின் நீங்கு உடன்எனையே
போவாய் வெளியே பொல்லாங்கு தேடாத
நின்றால் உயிரிழப்பாய் நில்லாது ஓடிவிடு'

என அவளை விரும்பா அவ்வாடவன் எச்சரிக்கின்றான்.

"கணத்தே உன்மதத்தைக்
கட்டுகின்றேன் என்அண்ணன்
மனத்தே உனைநினைத்தால் மாள்வாய்நீ
இக்கணத்தே, கூப்பிடுவேன்"

என்று அவள் கூக்குரலிட்டதையும் அவள் அண்ணன் வந்ததனையும் கூறுகின்றார். அதே நேரத்தில் மாயப் பொய்க்காரி இவ்வாடவனின் சோதரரை முன்பே காயப்படுத்திக் கட்டி வைத்திட்ட தன்மையையும் அவ்வாடவனுக்கு உணர்த்த அவன் சொந்தச் செயல் மறந்த சோதரர்களைப் பார்த்து,

## அறிமுகம்

" உங்கள் பழம் பெருமை உன்னி அப் பேய் விட்டு
நங்கள் இடம்வந்து நல்லவராய் மாறீரோ"

என்று கேட்க அதற்கு இணங்கி ஓரிருவர் உற்று அவனைச் சேர மற்றவர்கள் குலம் கெடுத்த கோடரிக்காம்புகளாய் நின்றிட்ட தன்மையையும் அவ்வாடவன் வாயால் நவில்கின்றார். பொய்க்காரியின் அண்ணனும் அவன் உடன் வந்தவரும் ஆயுதம் பலவும் ஏந்தியிருந்தும் அவர்கள் தமிழ்க்காதலனின் முன் நின்று போர்புரிய மாட்டாமல், நண்ணி உடன் வந்தவரை நட்டாற்றிடை விட்டுத் தப்பி ஓடிவிட்டனர். பின்னர் கைவிடப்பட்ட சோதரக்கட்கு நல்லறிவு புகட்டி அனுப்பி வைத்துவிட்டுத் தன் தலைவியை நாடித் தலைவன் சென்று தலைவியோடு ஆனந்தத் தழுந்தினன் என்று கவிதையை முடிக்கின்றார்.

நூற்று நாற்பது அடிகொண்ட இந்நிலைமண்டில ஆசிரியப்பா அருமையாகத் தமிழுணர்வு ஊட்டுவதாக அமைந்துள்ளது எனின் மிகையாகாது.

மேலும் இப் பாடல் தமிழை மறந்து பிறமொழி மோகத்தில் சிக்கக் கூடாது என்றும், சிக்கினால் அவதியுற நேரிடும் என்றும் அறிவுறுத்துகின்றது.

'கவிஞன் பிறக்கிறான்; ஆக்கப்படுவதில்லை' என்ற பொருண்மொழிக்கேற்ப நனி சிறந்த கவிதைகள் இயற்றியருளும் ஆசிரியர் தலைசிறந்த கவிஞராகத் திகழ்கிறார். சொல்லழகும் பொருளழகும் பொதுள, கற்பனை யூட்டமும் நடையோட்டமும் பொலிய, கவின் மிக்கு விளங்கும் ஆசிரியர் தம் கவிதைகள் காலத்தை வென்று வாழத்தக்கன எனின், அஃது உண்மை யுரையாய்த் திகழும் என்பது ஒருதலை.

வாழ்க கவிஞர் தமிழ்க் காதல்!
வளர்க அவர்தம் தமிழ்த் தொண்டு!

*Satnam Singh Hitkari*

I.R.S.

Commissioner of Income-Tax

SHILLONG (Assam)

*Date* 31-7-72

My dear and respected Shri Paramasivanandam Saheb,

I am one of your thousands of admirers. You are a great educationist, having been responsible for the moulding of the destiny of so many young boys and girls who today occupy positions of high responsibility in all walks of life. Your interests are very wide including religion. history etc. Again, you have greatly enriched the Tamil literature with youre poems, essays, fiction, travelogue etc. May God bless you with long life and with still more power to your pen in the service of the country and Tamil/ Just as a matter of hobby I collect the original handwritings of great poets and writers. I would therefore request you to favour me with any two of your Tamil poems, written in your own hand, preferably on your letter head, and autographed and dated at the end. These poems may be new ones or the old ones, published or unpublished, which ever you may like to write down. My only wish is to have something written in your hand. It will really be an honour for me to possess these poems. I do hope you will be able to spare some time for this and accede to my request.

Thanking you in anticipation and with respectful regards,

Yours sincerely,

(Sd.) S. S. HITKARI

*இக் கடிதத்துக்குப் பதிலாக*

*அனுப்பிய பாடல்—'மனிதனுக வாழ்'*

# வெள்ளம் விடு தூது

சீரோங்கி நிற்குமெங்கள் செல்வச் சிவபெருமான்
பேரோங்கு நற்சடையிற் பேசரிய—ஏரோங்கு

கங்கையெனப் பேர்பூண்டு காரார் பொருப்புமிசை
மங்கையென வந்திடுநல் மாநீரே—பொங்கி

புவியில் இழிந்தோடப் பொற்புடனே வெள்ளக்
கவியின் உளமனைத்தும் காண்போய்—அவியாத

நல்லொளியை வீசுமுயர் நற்கதிரோன் தன்கிரணப்
பொன்னொளியால் பூமியினின் றேயெழுந்து—
மின்னலிடை

மேகமெனச் செல்வாய்நீ மேகமாய்ச் செல்வதன்முன்
ஏகவுரு வென்பதுபோ லெங்கும்—போகாத

மாய உருவாகி மாலாகி நன்மேகம்
ஆய உருவுகொண்டு ஆள்வாய்நீ!—தோயாத

வானம் படர்ந்து வளர்நிறமே வெண்மையென
தானம் அறிந்ததன்பின் தான்காத்துக்—காணக்

கரியநிறங் கொண்டு கவின்பொருந்த மின்னி
அரிய இடியொலியொன் றாக்கி—நிரல்நிரையாய்

வானவில் லென்றொன்று வளைத்து அதில்பயின்ற
மோனநிற மேழும் மூழ்குவித்து—மாநிலத்தில்

நின்ற மனிதரெல்லாம் நேர்மை மழைஎமக்குப்
பொன்றா வகையளித்துப் போற்றிடுவாய்—என்றோத

தூரலாய் மாவீழ்தாய்த் தூங்காப் பெருமழையாய்ச்
சாரலாய் வந்து தழைத்துமிகு—ஓரிரவில்

நினைத்தற் கரிய நெடுமழையைப் பெய்து
மனத்திற்கு ஓகையளி மாமழையே!—புனத்தயலும்

புள்ளிரியுஞ் சோலையிலும் பூங்கமல வாவியிலும்
உள்ளும் உயர்ந்திடுசெந் நெல்வயலும்—விள்ளரிய

இன்பம் நிறைத்து இனிமை நலங்காண
துன்பம் அகலத் துயர்நீக்கி—மன்பதைகள்

வாழ்வுபெறரேும் யாமென்று வாழ்த்திப்
பணிந்தேத்தும்

சூழ்புவியைக் காத்திடுநற் றூரநீரே!—ஏழ்கடலும்

வற்றி மழையாக வந்து உலகமெலாம்
சுற்றிப் பெருவெள்ளம் தோற்றுவிப்பாய்-முற்றறிஞர்

'கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே
எடுப்பதூஉம் எல்லாம் மழை'யே—அடுத்துரைத்த

சொல்லேமெய் யாமென்னத் தொல்லுலகில் நீர்வளமும்
நல்ல பயிருமுடன் காட்டுவித்து—மல்லல்

வளமுற்ற நாடதனை வந்துபெரு வெள்ளமென
அளவற் றழித்தகன்று ஆழ்த்திக்—குளமெல்லாம்

அன்னம் புகலிடமாய் ஆக்குவித்து எவ்விடத்தும்
இன்னங் களையுங் கிளர்மழையே!—உன்பெருமை

நன்றாய்ந் தறிந்து நலமுரைத்தார் வள்ளுவனார்
ஒன்றாலே யல்ல ஒருபத்தால்—பொன்றாத

'நீரின் றமையா தூலகெனின் யார்யார்க்கும்
வானின் றமையா தொழுக்'கென்ற—சீரியதோர்

இன்பங் கனிந்த எழில்பெறுநற் சொல்லாலே
வன்பின் செயலகற்றி வாழ்த்துபெற்றாய்!-உன்புகழை

ஓதற் குரித்தாமோ ஓங்கிவரு நற்புனலே
சீதத் தினிமைதருந் தெண்ணீரே—போதமிகு

தண்டமிழ்சேர் நற்குடகு தன்னில் உதித்தபெரு
மண்டலம் தான்புகழ்மா காவேரி—கண்டிடுவோர்

உந்தன்வெள் ளப்பெருக்கை ஓர்ந்து மகிழ்வாரே
கந்தன் றனைஒருநாள் கைத்தலத்தால்—உந்தியநற்

பொற்சரவ ணத்தினிடைப் பொற்புடனே
தாங்கினின்றாய்

நற்பெருமை சேர்ஞான சம்பந்தன்—பொற்பார்

கவிகள் பதினொன்று காரணத்தால் பாடி
புவியிற் புகழ்ச்சைவம் பொங்க—அவியாத

வையைப் பெருக்காக வந்தவுந்தன் மத்தியிலே
பொய்யை அகல்விக்கப் போட்டவுடன்—ஓய்யென்று

தக்க தமிழ்ப்பெருமை தானேயாய் நீயறிந்தாய்
மிக்க அதன்நலத்தை மேவினாய்—பக்கமதில்

அப்பதிக மேந்தி அருந்தமிழின் நற்பெருமை
எப்புவியும் கண்டு இனிக்குவண்ணம்—ஒப்பரிய

நற்செயலால் முன்னேற்றி நல்ஏ டகமடைந்து
விற்பனனாய் நின்றிட்ட மேநீரே!—கற்பமெலாம்

நின்றாயே நீணிலத்தில் நீயன்றோ மக்களுயிர்
பொன்றாமற் காக்தளிக்கும் புண்ணியவன்—நன்றான

மெய்த்தூய்மை செய்துஉடன் மேலான இன்பநலம்
உய்த்து உயர்விப்பாய் ஓநீரே!—உய்த்தாலும்

ஏனோநீ அன்றுள்ள எங்கள் பழந்தமிழின்
தேனாய் விளங்கியதென் னாடழித்தாய்—கோனான

சோழன் கரிகாலன் தோன்றிச் சிறப்புறச்செய்
வாழ்கா விரிப்பட் டினத்தையன்று—பாழாகச்

செய்திட்டாய் அச்செயலால் செம்மைத்
தமிழ்க்கலைகள்
பெய்திட்டாய் உன்வயிற்றிற் பெற்றிட்டாய்—
உய்வரிய

தமிழின் நலங்கண்டாய் சற்றெம்மை நோக்கி
அமிழ்தம் அளித்துக்காத் தாக்குவாய்—
குமிழ்நிறைந்து

மாகரைகள் பொங்கி வழிந்து பெருக்கெடுத்து
மாகரையின் மாமரங்கள் மாள்வித்து—ஏகாந்த

நீரின் உருவாக்கி நீசென்றால் உன்பெயர்க்கு
நீர்மைஎனப் பொருள்கொள் நீர்மையோ—சீரான

பெருவெள்ளந் தன்னிலே பெண்கள் கலந்துபெயும்
திருவின் விளக்கெல்லாம் செம்பொட்டோ—
உருவனையார்

மாலை உனக்கணிவார் மட்டற்ற இன்பத்தால்
சோலை வயற்புறத்தில் சோறுண்டு—மேலாய
காதலர்க ளோடு களிப்புக் கடல்குளித்துப்
பூதலத்தில் போயிடுவர் பொற்புடனே—நீதான்
சுழிகள் கிளப்பிடுவாய் சூழலிலே யுற்றால்
விழிகள் பிதுங்கிடவே வெல்வாய்—கழிகளிலே
தங்கிப் பலஉயிர்கள் தண்ணீர்த்தா கம்போக்க
இங்கிதமாய் நின்று இசைவிப்பாய்—பொங்கரிய
பாலாற்று வெள்ளமெனப் பார்மீதில் இத்தலைநாள்
மேலாற்றி வந்திடுநல் மேனீரே!—காலாற்றி
இவ்விடத்தில் நின்று எனதுஉரை கேட்டதற்பின்
எவ்விடத்தும் ஏகிடுவாய் ஏர்நீரே—உய்வரிய
நற்றொண்டை நாட்டை நலஞ்சிறந்த நாடாக்க
உற்பத்தி யான உயர்ஆறே!—வெற்பினர்சேர்

நந்திப் பெருமலையில் நாடிடவே தோன்றியுடன்
உந்தி விளையாடி உற்றிட்டு—சொந்தமென

மைசூரில் வாழும் மகிபர் தடுத்துன்னின்
மெய்மீது வாரு மிகுநீரைக்—கைசெய்து

கட்டி வயற்கனுப்பிக் காணரிய நற்பயனை
மட்டுக் கடங்காது மல்குவித்து—விட்டு உனைப்

போவென்பார் பாலைபோல் பொங்குநீ ரற்றபின்பே
வாவென்ற மற்றவர்க்கு வாய்க்காலால்—சாலமிகு

நீரளிக்கும் தன்மைபெற்று நேரியநற் பாலாறே!
சீர்புகழ எம்மாற் றிறமாமோ—பேரான

இத்தகைய பாலாற்றின் ஏத்தரிய வெள்ளமென
உய்த்துஇவண் நிற்கும் உயர்புனலே—வித்தகமாய்

வழியைமிக அடைத்தாய் வல்லாரே யானால்
விழிவைத்து நோக்கி விளித்து—கழியாத

செல்வ வளம்பலவும் செம்மைப் பயன்நிறைவும்
நல்ல நிலையினிலே நல்குவிப்பாய்—பல்விதமாய்ப்

பூக்கள் இருமருங்கும் பொழிய அதையேற்று
மீக்கொள் மரமடித்து மேவுகின்றாய்—நோக்கரிய

உந்தன்மேல் வேகமதில் உற்றவர்வீ டுற்றவரே
அன்றித் திரும்பிஇவண் யாரறிவார்—பொன்றலிலா

கச்சிப் பதிமருங்கில் காணப் பலபேர்கள்
இச்சிக்க வந்த எழில்நீரே—மெச்சிடுநற்

காதலவன் தன்கரத்தைக் காதலியும் பற்றியுடன்
ஏதமிலை என்றுனையே யேத்துவதும்—கோதகன்ற

இளமை எழிற்சிறுவர் 'எந்தாய்இந் நீர்கலத்தின்
வளமை வழுத்துரைப்பாய்' யென்றே—மடமையுடன்

சிலை தனைப்பிடித்துச் சிங்கார மாய்க்கேட்க
சாலப் பலஉரைக்கும் தாயருடன்—மேலான

மக்கள் பலரும் மகிழ்வாய்நல் லாருடனே
மிக்க நலம்வேண்டி மேவிடுவார்—துக்கநிறை

தீய மனதுக்கும் தீம்புனலே உன்செய்கை
தாயின் பரிவாகத் தண்மைதரும்—மேயவர்கள்

உந்தன் நலம்கண்டார் உற்று உனைப்பிரிய
சிந்தையி லுமெண்ணுர்கள் தேர்ந்துரைப்பர்—பந்தமறு

நற்றவஞ்செய் நல்லார்போல் நாடிஒன்றுந் தேடாமல்
உற்றதொரு மேலாம் உயர்நிலையைப்—பெற்று

விரைவாகச் செல்லும் வியன்நலஞ்சார் வெண்புனலே
உறவாக நான்உரைக்கும் ஓர்மொழிகேள்—கரைகாணு

உன்னைப் புகழும் உயர்வுடைய புலவரிலே
என்னை ஒருவனுய் எண்ணுதே—மன்னியதோர்

நற்புகழைப் பாடுமுயர் நாவலர்போல் நானுன்னைப்
பொற்புடனே பாடேனே யாயிடினும்—அற்புதமாய்

விந்தைச் சுழல்கிளப்பி வேகமாய்ச் செல்லுமொரு
நந்தம் பாலாற்றின் நளிர்புனலே!—இந்தநிலை

தன்னிலே சென்றதன்பின் தாண்டிஒரு காதவழி
உன்னினுல் ஓங்கிடுநற் பொற்கோயில்—பன்னிடுவேன்

அக்கோயில் செல்வதன்முன் அண்டிஉனை வேகவதி
மிக்காய்க் கலப்பாள்நீ மேன்மைபெற்று—
தொக்கொன்ருய்ச்

சில்தூரம் சென்றபின்னர் தேர்ந்துஅவ ளூர்கடந்து
முன்னின்ற சிவபுரத்தை முன்னியே—பொன்னியெனப்

பொன்கொழித்துச் செல்வாய் புகுந்தெம்மூர்க்
கால்வாயில்
மின்னிக் கலந்து மிளிர்வுறுவாய்—தன்னிகரில்

வேகத்தே செல்வாய் விளம்புவேன் இப்பொருளை
நீகருத்தே நிற்க நிறுத்துவாய்—போக

சிவபுரத்தைத் தாண்டிச் சென்றவுடன் என்னூர்
சிவபுரம தாகச் சிவனும்—பவநீக்கும்

வெண்மை நிறம்பூண்ட மிக்கான மண்டபமொன்
றுண்மை உனக்குதெற்காய் ஓங்கிநிற்கும்—கண்ணுன

அம்மண் டபத்தை அடுத்தோங்கும் அங்கநகர்
இம்மென் பதன்முன்னே ஏகுவாய்—நம்முடைய

நற்கடம்பன் தாதை நவில்வா ருளப்பொருளாய்
சொற்கடந்த தூயோனுய்த் தோன்றிடுவன்—
அற்புதஞ்சேர்

அம்பலவன் தங்கும் அழகார் திருக்கோயில்
இம்பருல கென்ன எதிர்காண்பாய்—செம்பவள

மேனியனுர் கோயிலின்பின் மேவுமென தில்லிருந்து
தானினைந்து நிற்குமெந்தன் தாயாளுள்—தூநினைவால்

எந்தன் சுகம்காண இன்பம் அடைந்திடுவாள்
துன்பம் அகற்றினைச் சோபிப்பாள்—அன்புளத்தில்

ஓர்மகனுய் நின்றஎந்தன் உயர்வேதன் வாழ்வாகச்
சீர்புவியில் வாழ்ந்திடுநற் செல்வமவள்—பேரான

செல்வம் எனக்கெனவே சேர்க்கநத்தன் இன்பமெலாம்
ஒல்லாவே என்று ஒதுக்கினவள்—எவ்வாறும்

நான்மகிழ்ந்தால் தான்மகிழ்வாள் நன்மனத்தில்
வாழ்வுற்று
தேன்இனிக்கும் தீஞ்சொல்லைச் செப்பிடுவாள்—மாறுன

ஒன்றார் தமக்கிளையா உள்ளத்த ளாய்நின்று
என்றும் என்னுயிர்க்கு இன்பமளி—பொன்றன

நற்கருணை கொள்வாள் நலஞ்சிறந்து என்னைவளர்த்
துற்றவனாய்ப் போற்ற உறுதிசெய்தாள்—
பெற்றவளே

தானாய் இருந்தாலும் தந்தைபோல் கல்விநலம்
வேண அளித்தென்னை வித்தகனாய்—நானிலத்தே

எல்லாரும் போற்ற எழிலுடைய னாக்கினாள்
பொல்லாங்கைப் போக்கிக் குருவானாள்—நல்லாளாய்

ஐந்து பெருங்குரவர் ஆனாளே யாய்நின்ற
விஞ்சு நலமளிக்கும் மேதக்காள்—எஞ்சாத

நற்றாய்நல் லம்பலவன் நற்கோயிற் பொற்கரைமேல்
உற்றுஎனைக் காண உன்னுவாள்—அற்புதஞ்சேர்

பாலாற்று வெள்ளமே! பண்பார் அவள்தனக்கு
வேலாயு தன்பாதம் வேண்டிஇவண்—மால்நீக்கி

வாழ்கின்றே னென்றும் வழியூர்க்குக் காணாமல்
ஆழ்கின்றே னென்று மறிவிப்பாய்—சூழ்கின்ற

சுற்றத்தார்க் கெல்லாம்நீ சொல்லிடுவாய் என்நலத்தை
மற்றென்றன் மாலன்னை மாண்புடையாள்—
பெற்றவள்போல்

நேசம்என் பால்கொண்டு நேர்மை நலம்பலவும்
பாசம் அகலாமல் பற்றிவைப்பாள்—ஆசையுடன்

காஞ்சித் திருத்தலத்தே காத்துஎனைப் போற்றியவள்
வாஞ்சனைசேர் உள்ளத்தில் வாழவைப்பாள்—
தீஞ்சுவைசார்

அவட்கும் நவம்பகர்வாய் அம்பலவன் கப்பால்
தவக்கமொன் றின்றித் தழைத்து—சுகத்துள்ளேன்

பாலாற்று நற்புனிலே பகர்வாயென் சுற்றமெலாம்
மேலாக யானிங்கே மேவினேன்—கோலநிறை

நல்லின்பங் கொள்வாய் நற்ருய் பயனளிப்பாள்
அல்லும் பகலும் அறிவன்யான்—நில்லாது

ஓடிப் புகன்ருல் உடனே உனைச்சேர
நாடிஒரு சேயாற்று நங்கையவள்—கூடிடுவாள்

அன்னவளோ டுற்று அழியாத இன்பமுடன்
பொன்கதிரோன் ருேன்று புகழ்க்கடலுள்—
மன்னிநலம்

சேர்ந்தே கலந்து தெவிட்டாத இன்பமதில்
சார்ந்தே மகிழ்வாய் தழைத்து.*

* 1939ல் பாலாற்று வெள்ளப் பெருக்கின் நலம்கண்டு அன்னைக்குத் தூதாக அனுப்பிப் பாடியது.

# வளி விடு தூது

எங்கும் நிறைந்து இளநலமாய் வாழ்வுற்றுப்
பொங்கிப் பரந்துள்ள பொன்வளியே-மங்காத

உந்தன் செயலெல்லாம் ஒப்பார் செயலென்று
எந்தன் மனம்உரைக்க எண்ணுதே-பொன்றலிலா

வாழ்க்கை அமைக்கும் வளர்வளியே உன்பெருமை
ஆர்க்கு எடுத்துரைக்க ஆவதுவே-போக்காகச்

செய்கை பலசெய்வாய் செல்வநலம் பெய்வாய்நீ
உய்ய உயிர்ப்பாகி ஓங்கிநிற்பாய்-மெய்வழியில்

உள்ள முறைகளெல்லாம் உன்செயலாய் உள்ளதுவால்
மெள்ள நுழைந்தகன்று மேவிநின்றாய்-தெள்ளாத

தீஞ்சுவைசேர் இன்பமிகு தென்றலென வந்திடுவாய்
வாஞ்சனைசேர் காதலர்க்கு வாழ்வளிப்பாய்-
ஆங்காலை

உன்னை மறவார் உனது துணைமறவார்
பொன்னனைய மாதர் புறக்கணியார்-இன்னும்கேள்!

தென்றலாய் வந்தநீ செம்மை நலமீந்து
ஒன்றும் பெரும்புயலாய் ஓங்கிடுவாய்- அந்தநிலை

தன்னில் எவரும் தகைக்கமன மற்றிடுவார்
உன்னில் உயர்ந்தவரு முண்டேயோ?-மின்னலுடை

மேகஞ் செலுந்திசையை மீட்டுத் திருப்பியெங்கும்
போகம் பொழியமழை பெய்விப்பாய்-நீகருதில்

எப்பொருளும் மாணும் எவரும் பலனடைவர்
ஒப்புனக்கு உள்ளார்யார் ஓதிடுவாய்-கற்பகமே

வாழ்நாளில் நீ இன்றேல் வளம்பெற்று வாழ்வதெங்கே
ஆழ்கலியன் றோஎங்கும் ஆழ்ந்துநிற்கும்-பாழான

வெட்ட வெளியினிலே விளையாடு நின்செய்கை
மட்டுக் கடங்காத மாண்பாகும்-துட்டர்களைச்

சூறையெனக் கொன்றிடுவாய் தூய்மை உளங்களிலே
பேறை அடைவித்துப் பேசுவிப்பாய்- ஆர்உளத்தும்

உன்னை நிறுத்தி உயர்ந்தசிவ ஞானிஎன
எண்ணப் படுவார் இது உண்மை-கண்ணுன

இன்பச் சிறுகாற்றாய் எண்ணுக் கொடுமையுடை
துன்பம் மிகுவேனிற் சூடிடத்தும்- அன்புற்று

தோன்றி மகிழ்வளிக்கும் தூய்மை நிறைவளியே!
ஆய்ந்துஇவண் யானுரைக்கும் அம்மொழிகேள்-
பாய்ந்தெங்கும்

நீயின்றேல் நீரில்லை நீயின்றேல் நீணிலமும்
நீயின்றேல் எப்பொருளும் நில்லாது-நீயின்றேல்

வையகத்தில் வாழும் வளஞ்சால் உயிரெல்லாம்
ஓய்வென்று நில்லாது ஓய்ந்துவிடும்-பொய்யில்லை

உன்னை அடைந்தவரே ஓங்கு முயிர்கொண்டோர்
உன்னைப் பிரிந்தவரே ஓ! இழந்தோர்-உன்னை

ஒரு கணமும் நீங்க ஒருவழியும் உண்டோ
தருகணத்தே தாரணியைச் சாய்ப்பாய்-
மறுகணத்துப்

பாரும் நடுங்கப் பருங்காற்றாய் மாறிட்டு
யாரும் அறிய மரமுறிப்பாய்-சீரியநல்

பாதைகளி லெல்லாம் பரியக் கிளைநிரப்பி
வாதை அளிக்கவல்ல மாமாயம்- நீசெய்வாய்

அச்செய்கை வஞ்சகர்கள் அண்டி இருக்கையிலே
உச்ச நலமறிய ஒண்ணுமெனும்-நிச்சயமாம்

மெய்ம்மை உபதேச மேவுவிக்கும் ஆதலினுல்
உய்யும் வழிபலவும் ஊக்கிடுவாய்-செய்கையெலாம்

ஆராயின் உண்மை அருளும் பலநலங்கள்
பேராம் விளைந்திடநான் பெற்றிட்டேன்-நேராக

நீநின்ருல் உன்னெதிராய் நிற்பார் உளரேயோ
போவென்ருல் தூசாய்ப் புகுந்திடுவார்-
ஆஉரைக்கின்

உன்பெருமை எந்நாவின் ஒன்றிற் கடங்காது
என்னென்று யானுரைப்பேன் இன்காற்றே-
பொன்னுலகில்

கற்பகப்பூஞ் சோலையென்றுங் காமதேனு
வென்றுரைக்கும்
அற்புதங்கள் பற்பலவாய் ஆயிடினும்-
உற்பவிக்கும்

உந்தன் செயலின்றேல் உற்றபயன் என்னுகும்
என்றென்றும் நீயகன்ருல் ஏகிவிடும்-பொன்றலிலா

ஏகன் பதம்வேண்டி இன்பத் தவநிலையை
மோகம் எனக்கொண்ட முனிவரரும்—ஏகாந்த
நன்னிலையை எய்துதற்கு நாடிஉனைக் கட்டிடுவார்
அந்நிலையே ஆனந்த மாகிடுவார்-எந்நிலையும்
உந்தன் துணையின்றேல் ஓராது என்பதையும்
மைந்தன் இவணறிந்தே னுதலினுல்-சொந்தமென
உன்னை அருகழைத்து உற்ற மொழிவிளம்பி
பொன்னை நிகர்த்தநலம் பேசிடுவேன்-மண்ணுலகில்
உன்னுற்றல் கண்டு உயர்ந்துதவி செய்யாத
என்னுற்றல் யானறிந்தேன் என்ருலும்-என்னுலே
ஆகும்பா மாலைதனை அள்ளி வழங்கிடுவேன்
வேகும் துயர்நீக்க வேண்டுகின்றேன்-போகுமுறை

எல்லாம் அறிந்டுவாய் என்றஉயர் காரணத்தால்
நல்லா றெனத்தெளிந்து நாடிட்டேன்-நில்லாது

ஓடிச் சுழலும் உயர்காற்றே சற்றிருந்து
நாடும் மொழிகேட்டு நாடிடுவாய்-வாடுகின்றேன்

எந்தன் தலைவன் எழிலார் முருகேசன்
கந்தன் எனவந்த காவலவன்-சிந்தையிலே

இன்ப நலந்தருவன் என்றும் எனைப்பிரியன்
அன்பின் உருவான அண்ணலவன்-துன்பமெலாம்

நீக்கி உடனிருந்து நேர்மை நலம்பலவும்
ஆக்கி அருள்புரியும் ஆண்டகையாம்-போக்கில்லா

யாவர்க்கும் போக்காகி எந்தனிரு கண்ணாகி
தேவர்க்குந் தேவனென வேயாகி-மூவர்க்கும்

ஒப்பார் தலைவனென ஓங்கிடுநல் ஒண்பொருளாய்
மிக்கார் உளத்தெல்லாம் மேவிடுவன்-துப்பாய

நல்லெண்ணங் கொண்டேன் நலமருளும் நற்றலைவன்
அல்லெண்ணங் கொண்டோரை ஆட்டிவைப்பன்-
சொல்லரிய

வேதமாய் நிற்போன் விளங்கும் பொருளானோன்
காதலால் போற்றுபவர்க் காரமுதம்-நீதியுடை

பொய்யாப் பெருவிருந்து பொன்னுலக வாழ்வளிக்கும்
மெய்யாம் விளைநிலத்தின் மேன்மருந்து-உய்வரிய

எவ்வினையும் போக்கிஉயர் ஈடில்லா ஆனந்த
உய்வழியைக் காட்டும் உணர்வாளன்-மெய்புகலும்

அன்பர்க்கு எந்நாளும் அன்பு வழிகாட்டி
இன்புற் றவர்க்கு இருநிதியும்-என்பெறினும்

வள்ளல் பதம்பணிவன் வந்து மலையடைவன்
பொள்ளல் உளவாழ்க்கை போக்குவனென்-
றுள்ளத்தே

எண்ணுபவர்க் கெண்ணியவா றெல்லாப்
பொருள்களையும்
நண்ணும் படியருளும் நற்றேவன்-கண்ணான
வள்ளி யுடனே வளர்தணிகை வாழுமவன்
புள்ளி மயிலேறும் பொற்பாளன்-கள்ளமில்லா
மெய்மைத் தவசியர்கள் மேவும் பெருநலத்தில்
மெய்மை வழியளிக்கும் மேலானன்-கைசெய்து
ஒன்றில் மனம்வைத்து ஒன்றில் செயல்வைத்து
ஒன்றும் புரியாத ஊமர்க்கு-அன்று
அருளும் முறைநீக்கி ஆணவத்தைப் போக்கித்
தெருளும் வழிதருவான் செவ்வேள்-ஒருவா
அறுமுகமாய்த் தோன்றிடுவன் அஞ்சலெனக் காட்டிப்
பெருமுகமாய் ஆனந்தம் பெய்வன்-திருவனைய
செல்வ முயர்ந்தோர்கள் செய்கை பெரிதாயின்
நல்ல நலம்பலவும் நாடுவிப்பன்-இல்லாது
செல்வச் செருக்குடனே தீமை புரிவார்க்கு
நில்லாத வாழ்வளிப்பன் நீணிலத்தே-
சொல்லானை
என்தணிகை மன்னவனை எங்கும் நிறைந்தவனை
உன்தலைவ னாய்நின்ற உத்தமனைப்-பண்ணுதற்கு
ஒண்ணுமோ ஆகாது ஓங்காரத் துள்ளொளியாய்
கண்ணுதலின் நெற்றிக்கண் தோன்றினன்-
எண்ணரிய
வாணவர்கள் ஏத்த வளர்சரவ ணத்தினிடை
மோன உருவாக முன்னின்று-தாணுவாய்
வந்த அடியார்க்கு வாழ்வளித்து இன்பநிலை
தந்து தனைப்போற்றுந் தானவனை-சிந்தையிலே

எண்ணி அருள்புரிய ஏத்த அமரர்களும்
நண்ணிக் கிரவுஞ்ச நாண்மலையை-எண்ணலிலா
நேரத்தில் அட்டதன்பின் நேராய்த்தென் திக்கேகிச்
சூரன் அரசுசெயும் தொன்னகரில்-சீர்கூட்டிப்
போரைப் புரிந்து புகலரிய சூரனது
தீரத் திறமையெல்லாம் தான்கண்டு-ஓரிரண்டு
கூருய்ப் பிளந்ததற்பின் கொண்டுமயில் சேவலென
யேறூர்தி நற்கொடியாய் யேற்றிட்டான்-
ஆதலினல்

நின்றோர்களானாலும் உற்றெழுந்தா ராலும்
என்றாலும் ஏற்றே அருள்செய்வான்-கண்ணோ
நல்வளியே இன்னும் நடக்கும் புகழ்பலவால்
சொல்லவோர் நாதானும் செல்லுமோ-பல்புகழார்
நற்குறிஞ்சி மேவுமெந்தன் நாதன் தணிகைமலை
சொற்பெருக்கி வாழவைக்கும் தோன்றலவன்-
அற்புதஞ்சேர்

செந்திற் கடற்கரையில் தெய்வத் திருவுருவாய்
எந்த வினைகளையும் இல்லையெனப்-
பொன்றுவிப்பன்

உள்ள மதம்பிடித்த ஓயாத குஞ்சரத்தை
மெள்ளத் திருப்பிஅருள் மேவுவிப்பன்-அள்ளிநிதம்
அன்பர் நனிவாழ ஆனந்தத் தேன்சொரியும்
இன்பக் களிவண் டெனநிற்பன்-துன்பமிலா
நல்வாழ்வு நல்குமுயர் நற்காம தேனு அவன்
சொல்வாழ்வே மெய்ம்மைச் சுகமாகும்-எவ்வாயும்
தண்டணிகைப் பேரில்லால் சாமிஅவன் சீரில்லால்
கொண்டுலகில் வாழில் குணமாமோ-எண்டிசையும்

வாழும் உயிரினங்கள் வள்ளல் பதம்பணிந்து
ஆழும் நிலைபெற்ற அன்பினிலே-தாழாது
வேக மயின்மீதில் வேண்டுமடி யாரெதிரில்
பாகம் இருவருடன் பற்றிடுவன்-நீகருதில்
வேண்டும் நலனளிப்பன் மேவி அவனருகே
யாண்டும் பரவியுள எம்காலே-தாண்டவஞ்செய்
செஞ்சடையான் பெற்றருளும் செல்வத் திருக்குமரா
எஞ்சிலிலா நல்வகையில் யானிசைப்பேன்-
துஞ்சலிலா

நல்லறிஞர் போற்றும் நலஞ்சேர்ந்த காஞ்சிதனில்
வல்லவர்கள் வாழும் வளநிலத்தே-உள்ளனவன்
உந்தன் ஒருமகனே உன்றன் பதம்தவிர
சிந்தைதனில் வேறொன்றைச் சிந்தியான்-முந்தி
தணிகைமலை காணஎண்ணித் தன்னுள்ளத்தே
என்றென்றும்
அணிசெய் பதிகங்கள் ஆக்கிடுவான்-துணிவுடைய
பொய்ம்மாய வஞ்சனையாம் புற்றுழ டாவகையில்
மெய்வாழ்வை எண்ணி விழைகின்றான்-ஐவரெனும்
பொல்லாக் கொடியவர்கள் போக்கில் விழுந்தழியா
நல்வாழ்க்கை வேண்டி நலிகின்றான்-எவ்வாறும்

ஒன்றும் உனதுருவே உள்ளம் நினசெயலே
என்றும் எதிர்நின்று ஏத்திடுவான்-நன்மைமிக
வாழ்வை நலஞ்செய்ய வந்துஉனை வேண்டிடுவான்
ஆழ்கலியை நீக்க அருள் விரும்பும்-தோழனவன்

உற்றார்கள் உன்னையன்றி ஒருவருமே இல்லையெனப்
பற்றாக வேபற்றி வாழ்ந்திடுவன்-எத்தாலே

வாழ்ந்தாலும் நீயளித்த வாழ்வென்றே எண்ணியருள்
ஆழ்ந்தே நலநினைந்து அண்டிடுவன்-சூழ்ந்தவினை

போக்கும் வழியற்றுப் புண்ணியனே உன்னடியே
ஆக்கும் பொருளாய் அவாவிடுவன்-நீக்கமிலா

நல்லறிஞர் தம்முறவை நாடி உனைப்புகழ்வார்
இல்லந் தொறுஞ்சென்று ஏங்கிநிற்பன்-பல்வளமும்

பெற்ற திருத்தணிகைப் பெம்மான்பெம் மானென்று
உற்ற விடத்தெங்கும் ஓதிடுவன்-பற்றிநின்ற

உந்தன் இளங்குமரன் உந்தன் அருமைந்தன்
உந்தன் அருங்கொழுந்து ஓர்ந்திடுவாய்-நன்றென்றே

அத்தணிகை மன்னவர்க்கு ஆக்கந்தரு வளியே
உற்றே உரைப்பாய் உவந்திடுவான்-பற்றில்லான்

உந்தன் நலங்காப்பான் ஓடிவந்து காத்தெனைச்
சொந்தமென ஒன்றாக்கித் தூய்மைசெய்வன்-
இந்தநிலை

வேண்டி உனைவிடுத்தேன் வேகந் தனிற்சென்று
ஆண்டே தணிகைவரை அண்டியே-யாண்டும்

மயில்வா கனனாக மன்னும்என் தந்தை
அயல்நின்று அவ்வா றறமே-நியதியுடன்

சொல்ல அனுப்பினான் என்றேநீ தூமனத்தே
வல்லவகை தூதுசொல்லி வா.*

---

* (1940) விக்கிரம ஆண்டு ஆனி 16-ல் தணிகை முருகன் அருள் வேட்டுப் பாடியது.

# பாரதி வாழ்வு

## தமிழகச் சிறப்பு

1. மாமேவு கடல்சூழ்ந்த மாநிலத்தின்
திலகமென மகிழ்ந்து போற்றும்
பூமேவு கன்னியர்கள் பொதுவெனவே
ஒன்றிநிறை புதுமை நாடாம்
காமேவு பலதலங்கள் காணரிய
அற்புதங்கள் கலந்து நின்ற
நாமேவு பாரதத்தாய் நன்னாடு
இதன்பெருமை நவிலற் பாற்றே!

* இருபதாம் நூற்றாண்டின் இயற்றமிழ்க் கவியாய் விளங்கிய திரு. சி. சுப்பிரமணிய பாரதியாரை அறியாத தமிழன் உண்டோ! அவர் வீரம் பொருந்திய பாடல்களால் மனம் மாறாத இந்தியன் உண்டோ! கவிச்சுவையும் பொருட் சுவையும் ஒருங்கே பொருந்தப் பெற்ற தண்டமிழ்க் கவி புனைந்து நம் சிந்தையெலாம் மகிழ்வித்த அன்னார் நம்மை விட்டுப் பிரிந்து பதினைந்தண்டுகள் பறந்தன.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தே, சென்ற ஆண்டில் (1935) நடந்த பாரதித் திருநாளில் நான் கலந்து கொண்டதே இந்நூல் எழுச்சிக்குக் காரணமாயது. இவருடன் ஒருங் கிருந்த திரு. S. சோமசுந்தர பாரதியார் அவர்கள் ஆற்றிய சொற்பொழிவின் குறிப்பும் அவர் எழுதிய சரித்திரக் குறிப்புமே இதற்கு உதவியாயின.

இச் சுப்பிரமணிய பாரதியாரின் கவித் திறன் அதனை அனுபவித்தார்க்கே புலப்படுமேயன்றிப் பிறர்க்குத் தோன் றாது! தண்டமிழ் மக்கள் அவர் கலைகளைப் பயின்று பயன டையவர்களாக. அன்னார் பெற்றியை இந்நாடும் எந்நாடும் உணர்ந்து உவப்புறுக!

ஆக்கியோன்,
11-9-1936

* முதற் பதிப்பின் முன்னுரை

2. இத்தகைய பெருந்தாயின் எழிற்றிலக
மெனத்திகழ்ந்தே யாரும் போற்றும்
வித்தகமைப் புலவர்நிறை வேங்கடமும்
குமரியெனும் விரிநீர்ப் பௌவ
முத்துநிறை தண்கரையும் முடிதலிலா
எல்லையிடை முகிழ்க்குங் கன்னி
ஒத்துரிமை யுடன்வளரும் உயர்தமிழ்நா
டிதன்வளம்தான் உவகை யாமே!

3. அகத்தியனார் வாழ்ந்தமைந்த அரும்பொதிகை
மலையுடைத்தாய் அலைக ளாலே
சகத்துநிறை மணிவளங்கள் தந்தளிக்கும்
காவிரியும் சார்ந்த பெண்ணை
மிகச்சிறந்த பாலாறும் மேலான
பொருனையெனும் நதியும் வைகை
உகச்சிறக்கும் பேராறும் உடைமையதாய்
உம்பருல கொக்கு மம்மா!

4. நற்றமிழை நிலைநிறுத்தி நாட்டினிடை
அறம்நிறுத்தி நவிலும் வாய்மைக்
கொற்றமுறை கைக்கொண்ட கொற்கைமுதல்
மண கொழிக்கும் குறைவி லாத
உற்றபதி மூன்றுடனே உயர்ந்தநிலை
அடைந்துகந்த உறுதி வேந்தர்
பெற்றியுடன் வாழ்ந்திட்டார் பேர்சோழ
பாண்டியராம் சேரர் தாமே!

5. மூவேந்தர் அரசுசெய முத்தமிழாம்
மொழிவளர முகிழ்க்கும் உண்மைப்
பாவேந்தர் பண்டைமுதல் பலவளங்கள்
கண்டுவந்த பாடல் கேட்டால்

பூமேவு மலரோனும் புன்மையினால்
தான்படைத்த புவன மக்கள்
தாமாய்வார் இவைமாயா எனநாணித்
தலைகுனியும் தன்மைத் தாமே!

6. மன்னவர்க ளொருபுறமும் மாகவிக
ளொருபுறமு மகிழ்ந்து ஓங்க
இன்னல்வழி யறியாத இன்றமிழின்
நாட்டகத்தே இலங்கு கன்னி
நன்முனையைச் சேர்ந்தமைந்த நற்பாண்டி
வளநாடு நவிலுங் கூடல்
இன்னினிய தலைநகரை ஏற்றதினால்
இன்பவழி இயைந்த தன்றே!

பாண்டி நாட்டின் பெருமை

7. மணம்புரிந்த தலைவர்பிரி மங்கையரின்
மனங்கலக்கும் மலர்ந்த தென்றல்
நிணம்பகைவர் உடலகல நீண்டஅமர்
புரிந்தமைந்த நிமிர்ந்த வீரம்
கணம்நினைந்து அறிந்தாலும் கரைகாணு
இன்பமளி கன்னித் தெய்வ
உணர்வரிய தமிழ்மூன்றும் ஓங்கிநிலைத்
திடும்பாண்டி உயர்ந்த நாடே.

8. முன்னொருநாள் அமரருடன் அசுரர்களும்
அமர்தொடங்கி முடிவு காண
உன்னினரா லொருதலைவன் வேண்டுமென
உவந்தடைந்த உயர்ந்தோ னுன
மன்னவனும் மலைமகளின் மணமகனும்
அவன்மகனு மகிழ்ந்து கூடி
இன்னியற் றமிழ்வளர்த்த இயற்பாண்டி
வளநாட்டின் இன்பம் இன்பம்!

9. பல்வேறு நம்வளனும் பகர்ந்திடுநற்
சொல்வளனும் பலவுந் தோய்ந்து
நெல்வேலி முதலாய நித்திலஞ்சேர்
பலதலமும் நெருங்கி யிந்த
நல்வேலி யுவராழி சூழ்ந்தகன்ற
நானிலத்து நன்மை யென்னும்
சொல்லாலே உயர்ந்திடுநற் பாண்டிவளப்
பழம்பெருமை சொல்லொ ணாதே!

### எட்டையபுரத்தின் எழில்

10. பாண்டிவள நாட்டினிடை பல்பெருமை கண்டீர்
ஆண்டுநிறை அன்புருவர் அன்பரமர் பதிகள்
காண்டுமுடி யாதெனுநல் கண்ணியசொல் லமிழ்து
ஈண்டுமமர் எவ்வுலகு மெய்திநிறைந் தன்றே!

11. அப்பதிக ளத்தனையி லன்புருவ மாய
மெய்ப்பொருளை மேதினில் மேன்மையுடன் உய்ய
உய்த்தஅருள் பாரதியும் உலகமருள் கொள்ள
சத்தியென வந்தபதி எட்டையநற் புரமே.

### வேறு

12. மெய்வாழ்வுடைய வானவர் மற்றவரும்
மேன்மேலுயர் வேண்டிய சிந்தையரும்
உய்வாமென எண்ணிய பண்ணவரும்
உண்மைக்கருள் உன்னிய வேதியரும்
பொய்வாழ்விடை மெய்ம்மை யறிந்தவரும்
போற்றும்பல தோற்ற முணர்ந்தரும்
எவ்வாயினும் நின்றக லாததிரு
என்றும்உள திங்கள் நன்மையதே.

13. சத்திக்கிட மாகிய திப்பதியே
சத்துக்கிட மாகிய தித்தலமே
பத்திக்கருள் தந்தது இந்நிலமே
பாழுக்கிட மற்றது இந்நகரே
நத்திப்புகழ் தன்மைய தாமிதுவே
நாளும்பல சற்சனர் சூழ்ந்தருள்
வித்திப்பெரு மைத்தரு காவெனவே
விண்ணுடென விட்டொளிர் தன்மையதே!

14. பாவிக்கிட மற்றதுபர்ந் திடுநற்
பண்ணுக்கிட மாகிய தித்தலமே
மேவித்தினம் வாழ்ந்திட வானவரும்
மேவும்பெரு காதல் மனத்துடனே
தாவித்திரி தலைமையினு லவமே
தனியா மமராவதி விட்டுஉடன்
கூவிப்பலர் கூடி யடைந்திடுமிக்
கொள்கைப்பதி கூறிட யிங்கரிதால்.

## பிறப்பும் இளமையும்

15. சிறந்திடு வளம் நிறைந்த
செம்மையாம் பதியில் இந்த
விரிந்திடு புவன முய்ய
வீரமே சிறந்து ஓங்க
அறந்தழைத் தருள் கொழிக்க
ஆண்டவன் அருள் நிலைக்கப்
பறந்திடத் தீமை யாவும்
பறந்திடப் பழியுங் கூடே

16. வந்தவ தரித்தான் நம்மை
வாழ்விக்க வந்த மெய்ம்மைச்
சுந்தர நாதன் சொற்பேர்
சுப்பிர மணியன் மேலே

அந்தரர் முழங்க அன்னை
அரும்வயி றகன்று இந்த
நந்தமி ழுலகம் வந்தான்
நற்சின்ன சாமி மைந்தன்.

17. எட்டைய புரமும் இந்த
இருந்தமி ழுலகம் யாவும்
விட்டிட அடிமை தன்னை
விரித்திட வீரந் தன்னை
ஒட்டிய நலமுந் துய்க்க
உயர்ந்திடு வழி நடக்க
கட்டிய பிணிகள் நீக்கக்
காணவந் தவத ரித்தான்.

18. அந்தணர் குலத்தோ னாக
அவதரித் ததனா லன்னை
தந்தையு மவற்கு வேண்டும்
சாற்றிடு கடன் முடித்தார்
வந்தவன் தமக்கு அந்த
வாய்ப்பட்டம் வேண்டா மென்றே
முந்திவந் தனைவ ருக்கும்
மொழிந்துயர் வழியை ஈந்தான்.

19. கல்வியில் விருப்ப முற்ற
காரண னான போதும்
நல்வழி காட்டும் நூல்கள்
நண்பர் னுடனே சென்று
ஒவ்வழி பலவும் கொண்டு
ஊன்றியே அறிவா னுனன்
கல்வியின் கூடம் ஏகான்
கண்டதன் றந்தை நொந்தான்.

20. தாயினை மூன்றி ரண்டு
தனிப்பரு வத்தே நீத்த
சேயனும் இளமை தன்னிற்
றித்திக்கச் கவிபு னைந்து
மேயின அடிக ளெல்லாம்
வேண்டிய இடத் தமைத்து
ஆயதன் னறிவைக் காட்டி
அருவினை யாடல் செய்தான்,

21. கவிபுனை திறத்தைக் கண்ட
கற்றறி புலவர் பல்லோர்
நவின்றிடு கூட்ட மொன்றில்
நன்றெனப் புவி யிசைக்க
உவகையின் கரையை நண்ணி
உயர்ந்திடு பாரதிப் பேர்
அவன்தமக் களித்தா ரண்ணல்
அன்று தொட்டதைத் தரித்தான்.

22. வயதினை ஒத்த மைந்தர்
வம்பிலே மன மகற்றி
நயமுடன் றனிமை நாடி
நல்லருள் கூட்டக் கண்டு
உயர்ந்திடு இனிய வாண்மை
ஒண்பொருள் கொண்டு மிக்க
நயமுடை நண்பர் சில்லோர்
நன்கறி தரக் குறிப்பான்,

23. கோயிலும் சோலை தானும்
குளிர்ந்திடு இடமுந் தானும்
ஆய நல் லறிவு சேர்ந்த
ஆத்மனை வளர்க்க ஏற்ற

தூயதாய் அமைந்த தென்று
தொடர்பின்றி ஆண்டுச் சென்றே
மாயையை யழிக்க மெய்ம்மை
மார்க்கமுங் கண்டு கொண்டான்.

திருமணம்

24. இவ்வாறு பதினேந்தாண் டெய்தியபின் இவரினிய
மெய்வாய்மைத் தந்தையரும் மிளிர்கடையங்
திருப்பதியில்
உய்வாராய் செல்லப்பா உயர்பெயராய்
உடையவரின்
மெய்வாழ்வின் பயனுய மென்மொழியை
மணம்நேர்ந்தார்.

25. வேதியர்தந் திருமுறையால் வேதநெறி
வழிமுறையால்
ஓதியதோர் நியதியினுல் உயர்மணமு
முவகையுடன்
காதலனுங் காதலியுங் கருத்தமைக்க நிறைவேற்றி
மாதருடன் இவனிருக்க மனங்களித்தார்
தந்தையரும்

26. மனங்களித்த தந்தையரும் மறுவாண்டே
மேலுலகை
மனம்விழைந்து உடனகன்றூர் மனம்வருந்தி
நம்மவனும்
இனம்பொறுக்கக் கடனுற்றி யின்பநிறை
மெய்க்காசித்
தனிப்பதிக்குச் செல்வதற்கே தானுமுடன்
புறப்பட்டான்.



4

## நாட்டுப் பணி

27. சென்றவழி தன்னிலுயர் திருநெல்வே லிப்பதியில்
நன்றவர்கள் பலரிடையில் நலநிறைந்த
கவிமொழிந்து
இன்பமுடன் மூவாண்டு இருந்துதனை அவமதித்த
துன்பஉளக் காந்திமதி நாதனையுந்
துணுக்கறுத்து.

28. வடகாசிப் பதியடைந்து வண்டமிழாங்
கில்லையெனும்
திடமான கொள்லகயினுற் சேர்ந்தபுகழ்
ஆரியத்தை
நெடிதான விரைவதனில் நிகரில்லா வகைபயின்று
தடமான மனதுடனே தன்பதிக்கு
விரைந்தணைந்தான்.

29. எட்டைய புரத்தலைவன் ஈந்தளித்த ஊதியத்தால்
வீட்டகலா இல்லறத்தின் விதிவழியின்
முறைகடந்து
சட்டெனவே மனமாறித் தன்குஞ்சின்
காரணத்தால்
விட்டகன்று மதுரையெனும் வியன்பதியை
வந்தடைந்தான்.

30. ஆண்டுசில நாளிருந்து அழகியமா சென்னைநகர்
வேண்டியகன் றங்குறைந்து விரிந்ததமிழ்ப்
பத்திரிகை
நீண்டதொரு ஆயுளுடை நேர்சுதேச மித்திரனின்
தாண்டியாற் றுணைத்தலைவன் எனச்சின்னுள்
துலங்கினின்முன்

31. அக்காலத் தவன்புரிந்த வருந்தமிழ ரனைவர்களும்
எக்காலும் மறவாமல் இதயத்தே யிருத்திடுவார்
இக்காய மழிந்தாலும் இசையழியாத்
தன்மையினால்
மெய்க்கான வழிபலவும் வேண்டிஉடன்
இழைத்திட்டான்.

## புதுவைக் கேகல்

32. இவ்வாறு நிகழ்பொழுதில் இருஞ்சிறையைப்
பலரடையும்
ஒவ்வாத மாறுதலும் உதித்திடலும் நந்தலைவன்
செவ்வான மதியமெனத் திகழ்ந்திடுதல்
வேண்டுதலால்
இவ்வாழ்வு தனைவிட்டு எழிற்புதுவைப்
பதியடைந்தான்.

33. புதுவைநகர் தனிலமர்ந்து புரிந்தபல
தமிழ்த்தாயின்
விதவிதமாம் இன்னலங்கள் மேவுவண்ணம்
ஆற்றுவித்தான்
மதுவெனவே மனங்களிக்கும் மாண்கவிகள்
மாநிலத்து
இதுயிதுவே நிகர்க்குமென வியற்றியிசை
யியற்றியிட்டான்.

## வேறு

34. கருங்கடற் றிரைகள் கணக்கிலா தனவாய்க்
காண்டொறு மின்பமே பயக்கும்
பெரும்பயன் தருநற் புதுவைமா நகரின்
பேரெழில் கூறின் அடங்கா

திருவமர் பதியிற் செல்வநங் கவிஞன்
தீமையே யற்றதோர் மனத்தான்
ஒருமையும் பன்மை உண்மையு மொருங்கே
ஓங்கிடப் பலகலை வகுத்தான்.

35. பற்பலக் கவிகள் பற்பல விதமாய்ப்
பற்பல பொருளுளே யமைத்து
விற்பன னெனவே வியன்நிலம் விளம்பும்
வித்தகக் தன்மையி லியற்றி
நற்பெய ருடனே நாலிரண் டோடு
இரண்டுமே கூடிய ஆண்டு
சொற்பல பெருக்கித் தூயவன் புதுவைத்
தூநகர் தனிலிருந் திட்டான்.

36. சொந்தநற் பதியைக் கண்டிடல் வேண்டித்
தூண்டிய மனத்துடன் புதுவை
நன்னகர்த் தாண்டி நாடிடக் கடலூர்
நல்லவன் அவனையே கைதி
என்னவே யழைத்தா ரிவனுமே சென்று
னென்னினும் விடுதலை யடைந்து
முன்னிலும் பலவே றின்பமெய்க் கவிகள்
மூடிடத் தன்னக ரடைந்தான்.

### அருங்குணங்கள்

37. ஓர்சில நாட்கள் உறைந்தவ ணகன்று
உயர்ந்திடு சென்னையில் விருப்பம்
மீர்வது கொண்டு மெலிந்தநல் யாக்கை
மென்மையும் நோக்கிடா தன்பு
ஈர்வது தன்றல் இன்பமாய்ச் சென்னை
எய்தியே முன்புரிந் ததுபோல்
சீர்முறைத் தொண்டைச் செம்மையா யேற்று
சிறப்புட னியற்றிடு நாளில்

38. அன்னவ னருமைக் குணங்களிற் சிலவே
அறிந்தயான் கூறுவன் கேண்மின்
உண்ணவே யில்லில் உணவுமே யில்லை
ஒன்றுமே யில்லை யென்றாலும்
எண்ணவே மாட்டான் எதுகிடைத் தாலும்
ஏழைகள் நலமென அளித்துத்
திண்ணமாய் வீடு திரும்புவ னிதனாற்
சிறிதுமே தலைவியும் கவன்றாள்.

39. ஆயினும் அவனும் ஆண்டவன் பணிதான்
அவனியில் மக்களைக் காத்தல்
ஏயின தென்று இன்தொழில் பூண்டு
இருந்தன னின்றமிழ்க் கவிஞன்
தாயினு மினியன்! றனையனென் றிரந்தோர்த்
தாங்குவன்! உண்மையிற் றிளைப்போன்!
தீயினுங் கொடிய பவமகற் றிடுவான்
சென்றதைக் கூறுவன் கேண்மோ!

## இறுதி நாட்கள்

40. ஆயிரத் தோடு ஒன்பது நூறு
அமைந்ததோ டிருபதி னொன்று
மேயதோ ராண்டின் மேலொரு எட்டோ
டாக்கிய மதியமும் சேர
தாயஒன் றோடு துறைந்ததோர் பத்தும்
தோன்றிய நாளிலே கவிஞன்
தீயதென் றுலகை எண்ணியோ ஏனோ
தீர்ந்தனன் தீர்ந்தனன் கண்டீர்!

41. இருபதாம் நூற்றாண் டின்றமிழ்க் கவியாம்
இன்பநல் லூற்றுமா மென்றே
ஒருவரோ பல்லோர் உளத்தமைத் தேத்தும்
உத்தம னுலகினை யகன்றான்!

பெருமையே தந்தான்! பெற்றனள் அன்னை!
பெற்றனர் உயர்ந்திடு மக்கள்!
அருமையாய் வாழ்வாள் அழகுடன் பொலிவாள்
அன்புடன் வளர்தமிழ்த் தாயே!

42. மலரவன் செய்த மண்ணொடு மண்ணாய்
மாய்ந்திடு உடலழிந் தாலும்
அலர்த்திடு தன்மை ஆய்ந்திடு கவியின்
அழகுடன் ஆன்மநன் நேயம்
உலகிடை இந்து நாட்டிடை என்றும்
உலவுவ துண்மையீ துண்மை!
நலமுடை யவனும் நம்மிடை யிருப்பன்
ஞாலமே அழியினும் மெய்யே!

43. வாழியெம் அண்ணல் வண்புக ழென்றும்
வளர்ந்திட கவிகளைப் பயில்வோர்!
வாழியின் றமிழர் வண்மையும் வீர
வளமையும் நலம்பல வடைந்து
வாழியிவ் வுலகிற் பாரத மக்கள்
வாழியே பாரத அன்னை!
வாழிநற் றாய வாழ்வுமே இங்கு
மக்களும் சுதந்திரம் பெற்றே!

# தமிழன்னை

அன்றொரு நாளினில் அசுர ரமரரும்
ஆற்றிய மாபெரும் போர்—தனைக்
குன்ற நலம்செய்த கொள்கைஎம் அன்னையின்
கோதிலாக் கொள்கை யன்றோ

தூங்கும் எயில்தனை வாங்கி அதைவென்று
தூய்மை படுத்தியவள்—எங்கள்
பாங்கு உயர்ந்திடு பண்புடை நற்றமிழ்
பண்ணியல் கின்றிடு தாய்.

ஆரிய நாட்டினர் ஆணவம் பொன்றிட
அவர்தலையிற் சிலையை—நல்ல
வீரியம் தோன்றிட ஏற்றவந்தா ளவள்
வெற்றி துலங்கிடவே.

உலகுக் கொருநூல் .யர்ந்திடு நற்குறள்
உண்டாக்கினு னவவ. யார்?—என்றும்
நிலவும் இளமைசேர் நேர்மைநலம் உறை
நித்திலம் போன்றவள் தாய்.

இமயத்து உச்சியில் ஏற்றிய பொற்கொடி
எவருடை நற்கொடி யே—எங்கள்
அமைவுறு தமிழன்னை ஆர்வத்தோ டேற்றிய
ஆண்மைத் தமிழ்க்கொடி யே.

இயலிசை நாடகம் என்றும் சிறப்புற
ஏத்திடு நல்லவள் தான்—மிகு

கயல்கள் புரண்டிடு காவிரி நாடுடை
கண்ணியத் தமிழ்அன்னை யே!

இயற்கையின் இன்பத்தை ஏத்திப் பலன்பெற்ற
ஏந்திழை யாம்எங்கள் தாய்—அவள்
இயற்கையின் ஓவியம் என்றே உலகினில்
ஏத்திட வாழ்பவ ளே.

தெய்வத்திற் கொண்டவன் தேர்ந்தவன் என்ற
சிறப்புடைக் கற்பற மே—உயர்
உய்வுக் கதிகாரி உத்தமி பொற்கொடி
உற்றிடு நல்லற மே.

மகனை முறைசெய்து மனது மகிழ்ந்திட்டு
மாவர சாண்டவர் யார்?—இன்பப்
புகலிட மாகிய பொற்புடை நலமிகு
பூங்கொடி யெந்தமிழ்த் தாய்!

தோற்றோடில் தன்மகன் துணிந்து முலைசிந்தி
தூய்மை வழியில் நின்றாள்— அவள்
மற்றாற் கிடையாத மாவனை யாகிய
மருவு தமிழன்னை யே!

அறவழியில் நின்று ஆற்றிய போர்முறை
ஆர்முறை ஆர் எனிலோ?—திறம்
சிறந்திடு அருளுடைச் செந்தமிழ்த் தேவியின்
செம்மை முறையல வோ!

ஒன்றேகுலம் தேவன் ஒருவனே யாகுவன்
ஓர்குவீர் என்றிடு சொல்—மிகு
நன்றே செய்யுமன்னை நல்லவள் யாவர்க்கும்
நாவிடை வந்ததன் றோ!

தாமின் புறுவ துலகின் புறக் கண்டு
சாந்த முறுவ ரென்றே—அவள்
நாமின்று வாழ்ந்திட நாடி உரைத்திட்ட
நல்லுரை வாய்மையன் றே.

அகம்புறம் என்ற அரியபொருள் நூலால்
ஆக்கிய செல்வத்தி லே—இந்த
சகமெலாம் போற்றிடத் தாழ்வை அகற்றியே
சத்தியங் கொண்டவ ளே.

—

# தமிழன்னை திருப்பள்ளி எழுச்சி

வேங்கடங் குமரியின் விரிந்திடு அமிழ்தே!
விளம்பிய இனிமையின் சிகரமாங் கொழுந்தே!
பாங்குடைப் புலவர்கள் பயின்றிடு கனியே!
பண்புடன் பாரினில் பரந்திடு பரப்பே!
தீங்ககல் நலனுறு செந்தமிழ்த் தேவி
தீஞ்சுவைப் பாதரு சீருடைச் செல்வி!
ஓங்கிய புகழிடை உத்தம நீதியே!
உயர் தமிழே பள்ளி எழுந்தருளாயே! 1

புலவர்கள் நாவினில் பொருந்திட என்றும்
பொய்யகல் உள்ளத்தில் விருந்தென உணர்வோய்
அலகினில் ஆதியும் அந்தமு மில்லா
அருந்தமிழே உனதழகதே அழகு
பலவெலா மொன்றென உந்தனைக் கண்டோர்
பற்றுவர் உண்மையைப் பார்நிறை செல்வி!
நலமுற அருள்பெற நயமுற இன்றே
நற்றமிழே பள்ளி எழுந்தரு ளாயே! 2

தென்மதுரை நகர்ச் சீர்பெருந் தகைத்தாய்
தெரிந்திடு தலைச்சங்கந் தனிலிருந் தாயே!
உன்னரும் இறைவனும் உடனுனை வளர்க்க
ஓம்பினர் மன்னரும் மக்களும் ஒருங்கே!
பன்னருங் கலையுடைப் பாவையே நீயும்
பார்த்தவர்க் கருள்நிலை பார்த்தனம் மறக்கேம்
இன்னருள் புரிந்தெமக் கேற்றம தளிப்பாய்!
இன்தமிழே பள்ளி எழுந்தரு ளாயே! 3

நற்க பாடபுர நன்னக ரிருந்து
நல்லிடைச் சங்கத்தை நாட்டினர் புரப்பப்
பொற்புடைச் செல்வியே! பூந்தமிழ்த் தாயே!
புண்ணியம் பயந்தருள் இன்னிய முதல்வி!
விற்பனர் கற்றவர் மற்றவர் யாரும்
விரும்பிடும் இன்தமிழ் விருந்தெனு மமுதே!
அற்புதம் அற்புதம் நின்மொழிப் பெருமை
அருந்தமிழே பள்ளி எழுந்தரு ளாயே! 4

இயற்கையில் இறைவனின் ஏற்றம துணர்ந்தே
எடுத்துரைத் தார் அதை இனியநற் றமிழில்
அயற்சியை அகற்றுவர் நின்நிலை உணர்ந்தோர்
ஆண்மையும் பெறுவர்மற் றவனியிற் றிகழ்வர்
மயக்கம தறுத்துமே மாண்பொரு ளுணர்வர்
மற்றவை உற்றெதிர் வருத்தினும் இடரார்
தயக்கமில் இனிமையில் வாழ்குவர் தாயே!
தண்டமிழே பள்ளி எழுந்தரு ளாயே! 5

ஐம்பெருங் காப்பிய அணிநல முடையாய்!
அரும்பெரும் பத்துப்பாட் டாடையு முடையாய்!
நம்புறு பதினெண்கீழ்க் கணக்கினை உடையாய்!
நாட்டிய கலைகளின் நலமெலா முடையாய்!
இன்பத் தொல்காப்பிய இலக்கண முடையாய்!
இனியநல் இறையனார் அகப்பொருள் உடையாய்!
அன்புடைத் தமிழ்மொழி ஆகிய முதலே!
அருளுருவே பள்ளி எழுந்தரு ளாயே! 6

முப்பெரு வேந்தர்கள் ஒருபுறம் புரக்க
முத்தமிழ்ப் புலவர்கள் ஒருபுடை தாலாட்
டொப்பினில் பாடிட உயர்திரு மகவாய்
ஓங்கினை இன்றிவண் உற்றிடு தாயே!

செப்பிடு அகப்பொருட் செறிவினை உடையாய்!
தெய்விகக் காதலைத் தெரித்திடு முதல்வி!
ஒப்புனக் கொருவரு மில்லையீ துண்மை
உத்தமியே பள்ளி எழுந்தரு ளாயே! 7

எக்குலத் தாரெனும் வேற்றுமை யின்றி
எம்மதத் தாரினும் இரண்டென வின்றி
மிக்குடை ஒற்றுமை வழிதனைக் காட்டி
மேன்மைத் தமிழர்கள் எனஉணர்த் திட்டாய்!
ஒக்கலும் நண்பரும் உளமுவந் துன்னை
உச்சரிப்பார் கண்ட வுடனருந் தமிழே!
பக்குவ உணவெலாம் நீயெனப் புகழும்
பைந்தமிழே பள்ளி எழுந்தரு ளாயே! 8

களவெனும் மணமதிற் காணரு மின்பம்
காட்டியே காதலை மீட்டிடுந் தேவி!
உளமுவந் தாரெலாம் ஒண்ணமிழ் தாக
ஓங்குவர் நின்புகழ் ஓங்குக என்றும்!
அளவிலா மக்களும் ஆதும் இயற்கை
அனைத்தும் நின் நிலைத்திறம் ஆதுவ தறிந்தே
உளமடை திறந்துனை ஓடிடக் கண்டார்
உயிர்த்தமிழே பள்ளி எழுந்தரு ளாயே! 9

உன்னரு மக்கள்யாம் உன்னருள் மொழியால்
உணர்த்துவம்! அயர்ச்சியை ஒழித்திடல்
வேண்டும்!
இன்னருங் கலைஅணிந் தினியநன் முகத்தோ
டெங்கள்முன் எழுந்தருள் எமதருட் டமிழே!
மன்னவர் மற்றவர் மாற்ற மொன்றின்றி
மண்ணின்மேல் சமமென வந்துனைப் பணிந்தோம்!
உன்னருள் விழியுடன் கண்டெமைப் புரக்க
ஓங்குமென் தமிழுன்னை உடனெழுந் தருளே. 10

## எனது வேட்கை

முன்னொருநாள் உலகமெலாம் முகிழ்த்து நின்ற
மொழியென்று வல்லுநர்கள் மொழியுஞ் செல்வி
உன்மைந்தர் இன்றிங்கே நின்றே போற்ற
உண்மைவழி தனைக்காண உழைப்போம்
அன்னாய்!
பொன்பெற்று நின்றாலும் அன்றி மற்றைப்
பொருளெல்லாம் உடன்சேர்ந்து புரண்டிட்
டாலும்
என்பெற்ற தமிழ்த்தாயே உன்னை வேண்டி
இன்பநிலை தனைஅடைய எண்ணி னேனே. 1

மூவுலகும் சன்மான மெனவே ஈந்து
முதலான பெரும்பதவி முன்னின் றாலும்
காவலனாய் நின்றிடவே கணித்திட் டாலும்
கற்பகக்கோன் தன்பதமே கண்டிட் டாலும்
யாவுலகும் என்னடிக்கீழ் நின்றிட் டாலும்
இவ்வெல்லாம் எண்ணாது எந்தாய் உந்தன்
பூமலராம் தமிழ்ப்பாதம் போற்றல் செய்யும்
பொற்றொழிலே நற்றொழிலாய்ப் போற்று
வேனே. 2

சங்கமிருந் தாராய்ந்த புலவ ரெல்லாம்
தாயேநின் பெரும்புகழைத் தரணிக் கிந்தார்
பொங்குபெரு வங்கமிசைப் போகி அந்நாள்
பொருள்வளர்த்த வணிகருமே பொருளாக்
கொண்டார்

எங்குமுன தின்னெழிலே இனிமை யாக
இயைந்திருந்த அந்நாளே யாக இந்நாள்
மங்களமாய்க் கண்டிடவே வேட்கை கொண்டு
மண்மீதில் வாழ்கின்றேன் மகிழ்வாய் அன்னாய்! 3

கண்டனைய தமிழ்மொழியே எங்கும் ஓங்கிக்
கருத்துடைய உலகமொழி யாக நிற்கக்
கொண்டஒரு வேட்கைதனை முடிப்ப தல்லால்
குறையொன்று எங்களுக்கும் குறிக்கும்
கொல்லோ!
வண்டிசையில் தீங்குழலில் மகிழ்வில் இன்பில்
மாபொருளில் உட்பொருளாய் மன்னி நின்றாய்!
அண்டிடுவோர் இன்பநலம் பெறுவ தன்றி
அருகிருப்போர் அவருடனே அன்பு சேர்வார். 4

உன்வளர்ச்சி உன்னுவதே எந்தன் இன்பம்
உன்புகழைப் பாடுவதே எந்தன் வேட்கை
மன்னவனும் அடிபணிந்து போற்றச் செய்து
மண்ணுலகில் உன்பெருமை நிலவ வைப்போம்
உன் இனிமை கேட்பதுவே உவகை எந்தாய்
உயர்விதன்மேல் உண்டேபோ உலகை யெல்லாம்
உன்மயமாய் ஆக்குமொரு நன்னாள் இங்கு
உற்றிடுதல் காணுவதே உளத்து வேட்கை! 5

---

## வாழி இசையே நீடூழி

இன்பம் தரும்இனிய இசையே—உனை
என்றும் மறவேன் அருங்கனியே—மனம்
துன்றும் அரிய கலைப்பயிரே—சொல்லச்
சுகமே அருளவைக்கும் நிலையே. (இன்பம்)

பண்ணின் இசையில்நின்றான் பரமன்—உயர்
பண்ணில் மகிழ்ந்துறைந்தான் அவனும்—நிலை
எண்ணில் மனமுருகி எவரும்—நின்று
இன்ப நலம்பெறுவர் கண்டாய்! (இன்பம்)

உலகில் நிறைந்த ஒருகலையே—உனை
உன்னு திருப்பின் பெரும் அலையே—மனம்
நிலையில் இருக்க அருள் தருவே—அன்றி
நேர்மை நலம்பெருகும் நிலையே. (இன்பம்)

எங்கும் நிறைந்தஉயர் இசையே—உனை
எண்ணு திருக்கமனம் வருமோ—நிலை
பொங்கும் புலவர்மன மகலா—உயர்
புண்ணியச் செல்வமே வாழி. (இன்பம்)

துன்பம் நிறைந்தமன மதற்கும்—அன்றித்
துயரே நிறைந்தபெரும் அலைக்கும்—உடன்
இன்பம் அளித்து மனமாற்றி—நிறை
இனிமை பயக்குமொரு இசையே. (இன்பம்)

உன்னை மறந்துஉயிர் வாழேன்—அன்றி
உலகில் நிலைத்தசுகம் காணேன்—பெரும்
அன்பின் வழிஇயங்கும் அன்னாய்—இசை
ஆகிச் சிறந்தஅருட் கடலே. (இன்பம்)

கேளா திருக்கின்நலம் உறுமோ—உனைக்
கேட்டால் வருமோஒரு துயரும்—பொல்லா
மீளா வினைஅகலும் உன்னால்—அன்றி
வேணும் நலமனைத்தும் பெருகும். (இன்பம்)

வாழ்வாய் நலம்பெருக்கும் இசையே—இந்த
மண்ணில் அன்பைவளர் கதியே—நிதம்
சீர்பாய்ந்து வாழ்ந்திடு பல்லாண்டே—உந்தன்
செம்மைப் பதம்பணிந்தேன் வாழி! (இன்பம்)

—

## குயிற் பத்து

நாவிடை இனிமை பயிலும் நற்குயிலே இது கேளாய்
பாவிடைநீ பயின் றிட்டாய் பகரும் அதன்நலம் பாராய்
ஓவிய மாக உருக்கும் உயர்ந்த இயற்கையில் வாழ்ந்தே
தாவித் திரியும்நீ சற்றே சாய்த்தென் மொழிசெவி சாராய்!

செந்தமிழ் மொழிஎங்கும் ஓர்நாள் சிறந்து விளங்கிய தன்மை
இந்த நிலமெலாம் ஓரும் என்பதைக் கண்டிடு வாயே!

பைந்தமிழ்ப் பாடி இசைந்தே பரமன் அருள்பெறச் சென்றே
சொந்த இசைவழி நிற்பாய் தூய்மை உளமுடைக் குயிலே!

வாயிங்கே நீகுயிற் பிள்ளாய் வானவர் யாவரும் போற்றும்
தூய்மை நிறைதமிழ் தானே சொல்லு மிடமெலாம் நிற்கும்
வாய்மை மறந்திடா வாழ்க்கை வாழும் தமிழர் நலமே
ஆயும் பொழுதினி லெல்லாம் ஆனந்த மாகிடக் கூவாய்!

முத்தமிழ் மொழிநலம் கண்டே முகிழ்த்து நிறைந்திடு சோலை
அத்தனை யுஞ்சுற்றி நிற்கும் ஆனந்த மாய்வரு குயிலே!

வித்தகச் சோழரும் சேரர் வியன்நிலைப் பாண்டியர்
யாரும்
ஒத்து வளர்த்த தமிழே ஓங்கி வளர்ந்திடக் கூவாய்!

இயலிசை நாடக மென்றே இந்நிலம் போற்றும்
தமிழை
மயலிடை மாழ்கிடா திங்கே மகிழ்ந்திடு நற்குயிலே நீ
துயிலிலா வாறு நிமிர்ந்து தூய்மை உளமே சிறந்து
அயலுளார் யாவரும் போற்ற ஆனந்தமாய் நின்று
கூவாய்!

உலகுக் கொருகுறள் தந்த உத்தமன் வள்ளுவன்
பேரைப்
பலரும் பயின்றனர் நீயும் பண்புடைநற்குயிலே காண்!
உலவ உரைத்திடு வாயேல் உயர்ந்த நலமெலாம்
பெற்று
அலகில் அரும்புகழ் உற்று ஆனந்த மாகவே ஆவாய்!

செஞ்சிலம் பிசைத்திடு சேரன் சீர்புகழ் கூவிடு நீவாய்
விஞ்சிய புகழுடன் வாழ வேண்டிடின் விளம்புவன்
குயிலே!
கொஞ்சு தமிழிசை பாடிக் குளிர்ந்த மரநிழல் ஓடி
எஞ்சலிலா வழி தேடி இயைந்து வளர்ந்திடு வாயே!

இன்னிசைக் கீத மியம்பும் எழிற்குயிலே இசைப்பாய் நீ
பொன்னின் துளிர்த் தொளிர்கின்ற பூம்புகழ்ச்
செந்தமிழ்த் தேவை
எண்ணி எண்ணி நிதம்போற்றி எய்தலாம் பேரின்ப
வாழ்வே!
உன்னிடு வாய்இதை நீயும் ஓதிடுவாய் தமிழ் என்றே!

வேண்டும் பொருளைப் பெறுவாய் வேண்டியே
பெற்றவர் பல்லோர்
ஈண்டும் பெறுபவர் உண்டு இன்தமிழ்ப் பாட்டிசைத்
திங்கே
கூண்டி லடைபடா தெங்கும் கூவித் திரிந்திடு குயிலே
ஆண்டவன் பாதமும் பெற்றே ஆனந்த முற்றிடக்
கூவாய்!

தோன்றிய கால மறியாத் தாய்மைத் தமிழ்தனை ஓதின்
யாண்டும் புகழ்பெற்று வாழ்வாய் யாதினுக்கும்
அஞ்சல் வேண்டா
பூண்ட நலம்பல பொங்கும் பூந்தமிழ்ச் சோலையிற்
குயிலே
வேண்டியே செந்தமிழ் ஓசை விண்முட்டும்
வரையிலே கூவாய்! *

---

* விக்கிரமப்புரட்டாசித்தமிழ்க்கலை ஆண்டுமலரில் வெளிவந்தது.

## குயிலே நீ கூவாய்!

என்னுடை இன்னிசைக் குயிலே எங்கள் தமிழ்மொழி
கேட்கின்
முன்னம் எந்நாளினில் உலகில் முகிழ்த்தது எனக்
கணக் கியலா
பின்னதன் வளர்ச்சியைப் பார்ப்பின் பேசும் நலம்பல
பெற்றே
மன்னி எந்நாளும் வளரும் மாண்பினை எண்ணிநீ
கூவாய்! (1)

இன்பம் தருவது குயிலே எம்முடைத் தமிழ்மொழி
யாமே
அன்பின் அருள்நெறிய யாலே அனைத்தையும்
செலுத்திடு மொழியே
கன்னித் தமிழ்எனப்பேசக் கான்முளை பலப்பல தந்தே
மன்னி தன்இளமை மாறாது வாழும் மொழியிதைக்
கூவாய்! (2)

ஏர்தரும் ஏழுல கேத்த எம்மொழிக்கும் பிறப் பிடமாய்
ஆர்கலி சூழுல கதனில் அன்றுபோ லின்றுமே என்றும்
பேர்நிலை மாற்ற மில்லாமல் பேச்சிலும் எழுத்திலும்
உயர்ந்தே
சார்பவர் வாழ்வை வளர்க்கும் தனித்தமிழ் நீ இதைக்
கூவாய் (3)

—

# வள்ளுவரை உள்ளிடுவீர்!

கேளுங்கள் தமிழ்மாந்தரே—உங்கள்
கேண்மை மிகுபுலவன் கிளவி யெல்லாம்
வாழுங்கள் வாழ்வினிலே—நீவிர்
வளம்பெற்று வாழ்வதெல்லாம் வழங்கிநின்றான்
உலகிலே ஒருபுலவன்—அவனே
உவமை ஒருவரின்றே ஓங்கிநின்றான்
தெய்வக் குறளிசைத்தான்—அதன்
செம்மை நலமுழுதும் செப்பரிதால்
உய்வை மிக அளித்தான்—தமிழர்
உயர்வுக்கு ஒருநிலை கோலிவைத்தான்
எத்தகை நாட்டினரும்—மற்று
எம்மொழி பயில்பவ ராயிடினும்
மெத்தவும் போற்றுகின்றார்—குறளை
மேலாம் நிலையினிலே ஏத்துகின்றார்
வள்ளுவன் நம்மிடையே—இன்பம்
வளர்க்கவே வந்துதித்தான் வண்டமிழே
சொல்லுவீர் இதை அறிவீர்—மேலைத்
துகளறு நாட்டினர் போற்றுகின்றார்
செல்வமே செல்வமென்றார்—அதன்
செம்மையே தமிழர்க்குச் சீவன் என்றார்
இதை அறி தமிழர்களே!—உங்கள்
இதயம் அவனிடத்து ஏகிடுமோ?
அறம் பொருள் இன்பமென்றே—அவனும்
அளந்து அளந்துபல நிலை யுரைத்தான்
கடவுளைக் காட்டுவித்தான்—பின்னே
கார்நிலை தவநிலை அறநிலையும்

முறைமையே விளக்குவித்தான்—பின்னர்
முகிழ்க்கும் இல்லறவகை மொழிந்துநின்றான்
இருநூறு குறளதற்கே—பின்னர்
ஏகும் துறவறத்தை எடுத்துரைத்தான்
ஒருநூற்று நாற்பதாக—உணர்ந்து
உயர்ந்த அறநிலையை உறுதிசெய்தான்
பொருள்நிலை காட்டவந்தான்—அதிலே
பொங்கு அரசியலும் ஒழிபியலும்
அதன்நடு அங்கஇயல்—முறையே
ஐயைந்து நாலெட்டு பதின்மூன்றும்
அதிகாரந் தொகுத்துநின்றான்—பின்னர்
அடுக்கிய அன்புநிலை காட்டும் வகையில்
களவெனக் கற்பெனவே—இரண்டைக்
காட்டித் தமிழ்மணத்தைக் கூட்டிவிட்டான்
களவுக்கு எழுபதிட்டான்—பின்னே
கற்பிற்கு நூற்றெண்பது குறளமைத்தான்
அனைத்திலும் உயிரமைத்தான்—யாவும்
ஆயிரத்து முன்னூற்று முப்பதென்றே
நிலையினைக் காட்டிவிட்டான்—உலகில்
நிலையாயிருக்கும் நூலை நிறுவிச்சென்றான்
வீட்டினைக் குறிப்பினாலே—விளக்கி
வீட்டினை விழைந்தவன் விரைந்துவிட்டான்
அவன்புகழ் கேட்டீரோ!—தமிழீர்
அவனியில அவன்திருநாள் அமைப்பீர்!
*வைகாசி அனுடமென—அவன்றன்
வளம்பாடும் நாள்தனை வரைந்துவிட்டார்
அன்புடைத் தமிழர்களே—உங்கள்
அருமை மொழிநிலக்க அவதரித்தான்
வள்ளுவன் புகழ்பேசுவீர்—அன்றேல்

---

* தற்போது மாட்டுப் பொங்கலன்று வள்ளுவன் விழாவினை கொண்டாடுகின்றனர்

வண்தமிழர் என்றுரைக்க வாய்கூசுவீர்
உலகெலாம் அவன்பெருமை—ஓர்ந்து
உயர்ந்திடு நிலையில்நாம் ஊமையராய்
நிலவிடல் நீதியன்றே—என்றும்
நிலைத்தபுகழ் தமிழ்க்கு நேர்ந்திடுமேல்
வள்ளுவன் பிச்சையன்றோ!—இதைநீர்
மனத்திடை உணர்ந்தவன் வளம்புகழ்வீர்
வள்ளுவன் புகழ்பேசும்—வாயே
வண்டமிழ் வளர்த்திடும் வாயாகும்!
ஆகவே கூடிடுவீர்—ஒன்றாய்
அனுடநன் னாளில் ஆற்றிடுவீர்!
வள்ளுவன் பெருவிழாவே—அதனால்
வளம்பெறும் தமிழ்மொழி வாழ்வடையும்
குறள்மொழி போற்றிடுவீர்—உங்கள்
குழந்தைகள் இளமொழி குறளெனவே
நிலவிடச் செய்திடுவீர்—என்றும்
நிலைத்திடும் நூலது நேர்மையதே
சாதி மதச் சுழிகடந்து—மற்றச்
சார்புடன் காலநிலை தனைக்கடந்து
ஓதுதற் குரியதுவே—நீவீர்
ஒன்றிய அவன்புகழ் ஓதிடுவீர்!
தமிழ்மொழி தழைத்தோங்கும்—உலகில்
தமிழர்தம் அரசே தலைநிமிரும்
பாடுவீர் அவன்புகழே—இன்பம்
பல்கி அறம்வளர்ந்து பயன்மிகுமே (கேளுங்கள்)

---

விசு, ஆனி, க, (15-6-41)ல் தமிழ்க்கலையில் வெளியானது.

# அன்னையின் அடிமலர் அணிகுவாய் நெஞ்சே!

## [கலைமகள் விழாவைக் கருத்திருத்தியது]

அன்னைப் பணிதனை ஆற்றிடும் நன்னாள்
அவனியில் முகிழ்த்தது அதைஅறி நெஞ்சே!
இன்னலைப் போக்கியே இன்ப ஒளிசெய்
யெம்மன்னை நற்புகழ் எண்ணிடு வாயே!
துன்பம் அகன்றிடும் சோர்விலை கண்டாய்
தூய்மை உளமதே துலங்க விளங்கும்
இன்பம் அவள்உரு இன்பமே செய்கை
இனிமை நலம்தரும் என்அன்னை காணே

பூசைக்கு வேண்டுவ பூவல்ல நீரல்ல
பொற்பார் பலவகைச் சிற்றுண்டி யல்ல
ஆசை வளர்க்குறும் அவல்தேங்காய் அல்ல
அரிய பழவகை அல்லவை அல்ல
நேசம் மனத்திடை நின்றிடல் வேண்டும்
நினைவு அவள்வசம் நிலைத்திட வேண்டும்
ஆசைக் கடிமையை அகற்றி வேண்டும்
அன்புநிலைத் தூய்மை அமைந்திட வேண்டும்.

சொல்லொன்று செயலொன்று துன்னமை வேண்டும்
தூய்மை உளமதே துலங்கிட வேண்டும்
நல்ல அறிவுடை நற்பணி வேண்டும்
நாட்டிலே யாவரும் ஒன்றெனல் வேண்டும்

கல்லிடை மணியிடைக் கனக வெளியில்
　　காரிடை நீரிடைக் கருமை நிறத்தில்
புல்லிடை அவளுரு கண்டிடல் வேண்டும்
　　புன்மைக் குணமெலாம் போக்கிடல் வேண்டும்.

வஞ்சகம் பொய்ம்மை மடிந்திடல் வேண்டும்
　　வானமும் மண்ணுமே வணங்கிட வேண்டும்
எஞ்சலி லாத அறச்செயல் வேண்டும்
　　எவ்விடத்தும் அதை இயம்பாமை வேண்டும்
அஞ்சுபயம் தவிர்த் தன்னையின் துணையே
　　அனைத்தையும் அளித்திடும் என்பதை எண்ணி
விஞ்சிய நிலையினில் விளங்கிட வேண்டும்
　　வித்தகர் உறவையே வேண்டிட வேண்டும்.

நாவிடை மந்திரம் நவின்றிடல் வேண்டா
　　நாடொறும் ஊர்சுற்றித் திரிந்திட வேண்டா
பாவிடை மனமிலாப் பண்ணது வேண்டா
　　பற்றிய புட்பமும் பழமதும் வேண்டா
கோயிலை நாடியே கும்பிட வேண்டா
　　கோபுரம் தனைக்கண்டு வணங்கிட வேண்டா
ஆவியில் அன்பினை அமைத்திடல் ஒன்றே
　　அன்னைப் பெரும்பணி ஆவது கண்டாய்!

அன்னையைக் காணவே அலைந்திடல் ஏனோ
　　அடியவர் உளமதில் அமர்ந்திடு வாளே
பொன்னினில் அழகினில் புந்தியி லெல்லாம்
　　பொற்புடன் விளங்கிடு புண்ணியச் செல்வி

மின்னல் ஒளியென மேகமே என்ன
மேதினி பலவென மேன்மைக ளென்ன
என்னென்ன நன்மைகள் யாவிலும் உள்ளாள்
இன்னதை அறியாது ஏன் உழல்கின்றாய்?

செல்வச் செருக்கதே தீர்ந்திடல் வேண்டும்
தீமை யெனும்பெயர் தீண்டாமை வேண்டும்
கல்விநலம் பலர் கண்டிட வேண்டும்
கற்ற அறிஞரைக் கலந்திட வேண்டும்
எல்லினும் பகலினும் இன்ப அறிவை
எல்லோரும் வம்மின்நீர் என்றே அழைத்து
அள்ளி வழங்கியே அன்புற வேண்டும்
அன்னைக் குயர்பணி ஆற்றிடுஞ் செயலே!

தீமை பலசெய்து தேங்காய் உடைத்தே
தீர்த்திட எண்ணிடில் தீராது கண்டாய்
வாய்மை மிகுந்தவள் எம்அன்னை தானே
வந்து ஏமாறுவாள் கொல்லோ ஈதுணர்வாய்!'
தூய்மை உளம்வேண்டும் சொல்தூய்மை வேண்டும்
தூய செயல்வேண்டும் சொல்வினை நீக்க
ஆயும் பலகலை அவ்வுரு வானாள்
அன்னைப் பதம்பணிந் தின்னிலம் வாழி!

இன்னல் பலஎதிர் மாறிநின் றாலும்
ஈகை இல்லாதவர் கொல்ல வந்தாலும்
துன்னுஞ் செல்வத்தவர் சூழ்ந்துமே நின்று
சொல்லொணாத் துன்பத்தைத்
தோற்றுவித் தாலும்

பின்னர் பலப்பலப் பேய்மை வந்தாலும்
    பித்துச் செயல்பல பேசி நின்றாலும்
ஒன்றும் நினைத்திடாய் ஒன்றுக்கும் அஞ்சேல்
    உன்அன்னை யாவையும் ஓட்டியே காப்பாள்.

அன்னைப் பணியதே அருந்தமிழ்ப் பணியாம்
    ஆனந்தம் அதனிலே அல்லது உண்டோ!
முன்னைச் செயல்களை எண்ணிடா திங்கே
    முகிழ்த்து வருகுவீர் மூளுமே இன்பம்
கண்ணினும் இனியவள் கருத்திடை நல்லாள்
    கற்பகம் போன்றவள் அற்புத அன்னை
எண்ணிலும் உள்ளாள் அவ்வியல்லை அறிந்தே
    ஏத்துவம் இன்பத்தே ஏறிட நாமே.

# வாழ்க இயேசு நாமம்!

கடல்சூழ்ந்த நிலவுலகம் கவினப் போற்றக்
காணரிய பெத்தலகேம் ஊரி லுற்ற
அடல்சேர்ந்த மரியம்மை உதரத் தூறி
அன்புநிலை நற்குழவி யாக வந்தே
மடஞ்சேர்ந்த ஏரோது கொடுமை யெண்ணி
மரக்கலத்தே எகிப்துநா டடைந்துப் பின்னை
நடஞ்சேர்ந்த பருவமது எய்தித் தாய்பின்
நல்லார்வாழ் இஸ்ரவேல் நடந்தாய் வாழி!

யோவானை யெதிர்கண்டு யோகு கூறி
யேவர்க்கு உயர்நிலையை யெய்திப் பின்னைத்
தேவார்ந்த தேவனது மகனே யாகித்
திண்ணியதோர் குன்றின்மேல் திகழ்ந்து தோன்றி
நாவார்ந்த உபதேச மொழியைச் சாற்றி
நாடனைத்தும் நின்புகழே நடக்கச் செய்து
மேவார்ந்த தலைவனென நின்று என்றும்
மிக்கோனாய் மிளிர்ந்திட்ட இயேசு வாழி!

ஊரிடத்தும் நாடிடத்தும் உற்ற பல்லோர்
உடற்றியதீ நோய்களையே உதறித் தள்ளிப்
பாரிடத்தும் இறையருளை பரந்து நிற்கப்
பரஞானங் கொடுத்துதவும் பரம வள்ளால்!
சீருறவே படகிருந்து சீட ருக்காய்ச்
செயற்கரிய செயல்காட்டித் தெய்வ அன்பே
யாரிடத்தும் நிலைநிற்க உழைத்து நின்று
யாண்டும் அருள்நிலை விளக்கும் இயேசு வாழி!

நோய்நீக்கி நோய்பெற்றார் விசுவா சிக்க
நோன்மைபெறு வலிகாட்டி நுழையும் வண்ணம்
வாய்மைமொழி இயம்பிஐயா யிரவர்க் கன்று
வண்மையுடன் ஈரப்பம் வழங்கி நின்றாய்!
தூய்மைநிறை உள்ளமதே இறைவற் கென்றும்
துன்பமது அவர்பொருட்டுத் தூய்மை யென்றும்
பேய்மையெலாம் அடியவரைப் பிழைக்கு மென்றும்
பெருநெறியே புகுத்திட்ட பெரியோய் வாழி!

உவமைகளால் பலஅறிவு விளங்கங் காட்டி
உற்றபெரும் பாதகங்கள் உலவ வாட்டி
பவமகலும் மனத்திடத்தைப் பரக்கக் காட்டி
பரஞ்சுடரின் உண்மைநிலை பாரிற் காட்டி
தவமுயலும் அறிவுடையோர் தன்மை காட்டி
தாரணியை அன்புமய மாகக் காட்டி
அவதியெலாம் அற்றிடுநல் வழியைக் காட்டி
ஆனந்த நிலைகாட்டி ஆண்டாய் வாழி!

ஆசிரியர் குருவென்பார் உயர்ந்தோ ரென்று
அறிவழிந்து நின்றிட்டார் அல்லல் செய்தார்!
மாசிறிய ராகிஅவர் இழைத்ததெல்லாம்
மாதேவன் பொருட்டேற்று மகிமை காட்டி
காசியினில் பாவிகளின் பொருட்டு வந்து
காணரிய பவம்நீக்கிக் கருணை காட்டி
ஆசில்பல அறமாற்றி அன்பு காட்டி
அடியவர்கள் பலர்கொண்ட அண்ணல் வாழி!

சத்துருவை நேசிக்கும் தன்மை காட்டி
தனிநிலையாம் இறையருளின் தயவைக் காட்டி
சுத்தமிலா அற்பர்களைத் தூர ஓட்டி
தூய்மையதே இறையென்று துளங்கக் காட்டி

வித்தகமாய்ச் சீடருக்கு விளைவு காட்டி
விண்ணிடத்தும்மண்ணிடத்தும் விழிப்புக் காட்டி
எத்திசையும் இறையருளே காட்டிக் காட்டி
இன்பநிலை எய்திட்ட இயேசு வாழி!

கொல்லுதலே சிந்தையென வந்த பல்லோர்
குமைந்திடவே அருள்நோக்கங் கொண்டு நின்று
ஒல்லையிலே வருந்துன்பம் உணர்ந்து சீடர்
உடனிருக்க ஒருவனது உளவைக் காட்டி
வல்லையிலே முப்பதுபொன் பெறுவா னென்று
மறக்கருணை அவண்காட்டி மற்றெல் லோர்க்கும்
சொல்லறிய சகிப்புநிலை துளங்கக் காட்டி
துயர்தீர்க்க வந்துதித்த தூயோய் வாழி!

பேரரசன் பிலாத்துடனே சேர்ந்த பல்லோர்
பிழைபடவே உனைப்பிடித்துப் பெரிது மாழ்ந்து
பாரிடத்துக் கொலைசெய்ய நின்றார் அன்னாள்
பராபரனே பாரமெனப் பார்த்து நின்றாய்!
ஆரிடத்துஞ் சினங்கொள்ளாய் சிலுவை யேறி
அந்நிலையில் அன்பெனுநற் குன்ற மேறி
காரிடத்தும் ஒளியிடத்தும் கலங்கா தீண்டு
கர்த்தர்வழி காட்டிநின்ற கருத்தே வாழி!

உலகத்தார் உய்வதற்காச் சிலுவை யேறி
உயிர்அடக்கி உற்றதொரு மூன்றாம் நாளில்
பலகற்றார் என்றும் போற்று மாறு
பாரிடத்து உயிர்த்தெழுந்த பரமன் மைந்தா!
நிலைபெற்ற உன்அன்பு மார்க்கமென்றும்
நீணிலத்துத் தழைத்தோங்கி நிலவி வாழ்க!
மலமற்று உயிர்களெல்லாம் அன்பு பற்றி
மாதேவன் நல்லருளில் மகிழ மாதோ!

## பொய் வணக்கம் போக்குவீர்

செந்தமிழ் நாட்டுறைவீர்-நீங்கள்
சேர்ந்து நலம்பெறுவீர் சாந்தமுடனே
வந்ததிவ் வாடியிலே-மக்கள்
வாயில்லா உயிர்களை வாட்டுகின்றார்
அந்தோ மிகக் கொடுமை-அவர்
அனியாயமாகத் தெய்வ வழிபாடென்று
சிந்தையில் ஒன்றெண்ணித்-தினமும்
செம்மறி யாடுகோழி பன்றிகளைக்
கொன்று மிகக்குவிப்பர்-அவர்தம்
கொடுமைகளை அடக்க ஒருவரில்லை
நந்தமிழ் நாட்டினிலே-தெய்வம்
நாடி ஒன்றாகக்கொண்டு வாழ்ந்திட்டனர்
இன்றோ இச்செயலால்- அந்தோ
என்னுகின்றார் பிறர் விள்ளுகின்றார்
தமிழர்கள் செயலிதுவோ-பொல்லாத்
தயவிலா மனத்துடன் சாய்கின்றனர்
வாயில்லாப் பிராணிகளை-பூசாரி
வயிற்றில் நிரப்புவதற்கு நடப்பதுவே
அம்மம்ம எங்நாட்டில்-இந்த
அநியாயம் நடந்திடும் அடக்கிடுவீர்!
பத்தினித் தெய்வமொன்றும்- அதற்குப்
பாங்குடன் கணவர்கள் ஐந்துபேராம்

வித்தகமாய் உதவ-அருகில்
வேண்டுமொரு தெய்வமாய் நாடிடுமாம்
இத்தகைத் தெய்வமதைத்-தமிழர்
ஏனோ வணங்கி நலன் இழக்கின்றனர்
செங்குட்டுவன் அளித்த-சீர்சால்
தெய்வக் கற்பின் தலைவி கண்ணகியின்
பொங்கிடு மாவணக்கம்-இந்தப்
பூமியெங்கும் ஓர்கால் புகந்ததுவே!
கற்புடைத் தெய்வமென-அவளைக்
காணரும் அரசர்கள் வேண்டி நின்றார்
அற்புதம் அவள் பெருமை-தனது
அரிய கணவனுடன் வானடைந்தாள்
பொற்றொடி அவள் பெயரால்-நின்ற
பொய்யில் பத்தினித்தெய்வ வழிபாடு
இப்பொழு திந்நிலத்தே-தமிழர்
இடையிலே கொடுமையாய் இரிந்ததுவே!
எங்கோ ஒருமகளாய்-அவட்கு
இருந்த கணவர் ஐவர் மனமகிழ
அதிசயம் இதுவல்லவோ-நமது
அரிய தமிழர்நிலை சீர்கெடவே
இடையிலெப் பாவிகளோ-இதை
இந்தநன் னாட்டினில் ஏற்றிவிட்டார்
பொய்க்கதை பலபாடி-ஒன்றும்
புகலாத மாக்களை ஏமாற்றி
துற்குணம் நிறைந்தவனாய்-பூசாரி
சொல்லொணாப் பொழுதினைப் போக்குகின்றான்

நந்தமிழ் மக்களுமே- அவர்கள்
நயமறியா வழியில் மதிமயங்கி
விந்தையாய் நாடகமும்-கண்டு
வீணாகக் காலமதைப் போக்குகின்றார்
தெய்வப்பேர் கொலைநிற்குமோ-மற்றைச்
சீரில்லாத் திரௌபதி செயல் நிற்குமோ
வாருங்கள் தமிழர்களே-நாமும்
வழிபடு தெய்வமொன்றாய் வாழ்ந்திடுவோம்
இன்பத்தின் கரையெய்துவோம்-என்றும்
இறைவன் பதம்பணிந்து நிலையுறுவோம்
தெய்வத் தமிழ் மொழியும்-எங்கும்
சீர்நிறைந் தோங்கிடும் செப்பரிதால்
உய்வைப் பெற்றே மிளிர்வீர்-என்றும்
உயர்நிலை பெற்றேமிக ஓங்குகவே. (செந்தமிழ்)

---



6

## மரணத்தின் மாட்சி

ஓ ஓ மரணமே உன்னரும் மரணமே
பேருல கதனில் பெயர்த்திடாப் பொருளே
உன் செயல் உன்னில் உளம்நடுங் குறுமால்
என்னென் றிசைப்பேன் என்உளம் நடுங்குறும்
நேர்மை உடையை! நீதியும் பெருமையும்
ஆர்கலி யுலகில் அழியா ஆண்மையும்
பெற்றனை நீயே பிறங்கிடு வாயே!
வேறுபா டொன்றும் வேண்டக் காணாய்
கூறுபா டாகக் குறிப்பாய் உயிரை
உன்எதிர்ப் பட்டோர் உய்வரோ சொல்வாய்
நின்பெருஞ் செயலை நிறுத்துவோர் உண்டோ!
மரணம் என்னும் மாபெருந் தலைவ!
இரணம் செய்வோர் இல்லைநீ காண்பாய்!
கற்றா ராயினும் உற்றா ராயினும்
மற்றா ராயினும் மாறுபா டுண்டோ!
மணிமுடி சூடி மாபெருந் தலைவனாய்
அணிசெங் கோல்கொண் டவனியை ஆளினும்
மதிசால் தலைவன் என்னினும் மற்றெக்
கதிசேர் உரிமைக் கருத்தமைத் தேற்றினும்
உன்வழிப் பட்டால் உய்வதும் உண்டோ!
நின்பெருந் தன்மையில் நேர்மையே சிறக்கும்
அரசினை இயற்றும் அண்ணலும் உன்தன்
பெருமைசேர் அடியில் பெயர்ந்து அங்கிருக்கும்

அற்றைக் கூழுக் கலமரும் ஏழையின்
உற்ற றெனவே உன்னப் படுவான்
ஆதலான் மரணமே ஆகுமோ வேற்றுமை!
தீதிலா இச்செயல் செம்மாப் புறுவோற்
கேற்றதோர் பாடமாய் இயைகின் றதுவே
மாற்றார் இல்லா மாபெருந் தலைவ!
ஒளி முடிசூடி உலகினை யாண்ட
தெளிவுடை அரசர் சென்றனர் உன்னிடம்
இறவா தொழிந்தார் இந்நிலத் துளரோ?
கரவா உன்வழிற் கடந்தோர் உண்டோ!
முன்னறி வித்தால் மோசம் வருமோ!
என்றோ யார்க்கும் இயம்பா வழியில்
வந்துயிர் கொள்ளும் வளஞ்சால் செல்வ!
மக்கள் ஒருபுறம் மடிய மற்றவர்
ஒக்கல் ஒருபுறம் உளநடுங் கிடுவார்
தாயினைப் பிரிப்பாய் தந்தையைக் குலைப்பாய்
மேயநின் செயல்கள் விளம்பலும் உண்டோ!
எப்போ தீண்டு ஏகுவாய் என்று
இப்புவி தன்னில் எண்ணப் படுமோ!
உன்பெரு மாயம் என்மொழிக் கடங்குமோ!
கூடிக் குவிக்கக் கொடும்போர் வகுப்பாய்!
வாடும் மக்கள் வாட்டம் தவிராய்!
அந்தோ நீதான் ஆளா தொழியில்
இந்த மாநிலம் இடம் பெற்றிடுமோ!
உன் விருப்பாக உயர்ந்தோர் கொண்டு
மன்பதை தன்னில் மற்றைத் திப்பியாம்

பொல்லார் தம்மைப் பொலிக பன்னுளென
நில்லா வாழ்வில் நிறுத்துவாய் இதுகேள்
அத்தகைக் கொடியர் அவனியில் திகழின்
வித்தக ரெல்லாம் வீணில் கெடுவர்
ஆகவே உன்செயல் அவர் மீதிரங்கிப்
பாகம் வேருகப் பண்ணுதல் வேண்டா.
நல்லோர் வாழ அல்லோர்க் கருளின்
ஒல்வா நின்செயல் உயர்வுடைத் தாகும்
அன்றேல் உலகில் அநீதியும் அவதியும்
ஒன்ருய்த் தீங்கை உறுவித் திடுங்கொல்
வேற்றுவை யாக்கும் மேதக் கோயே!
சாற்றும் என்மொழி ஏற்றுநீ ஈண்டு
நல்வழி கொண்டு நல்லோர் வாழ்ந்து
நல்லுல காக்க நாடிடு வாயே!
உன்செயல் உன்னி உள்ளத் திடையான்
என்பெறி னும்தான் இல்லார்க் கிட்டு
வாழ்ந்திடச் செய்து வாழ்வினில் சிறக்க
ஆழ்ந்திடத் தியதே! அவனிஒங் குகவே!

# இன்பக் கோயில் துன்பப் பீடம்

உலக மெங்கணும் ஓங்கிய அறிவெனும்
உயர்ந்திடு நல்லோனே
இலகு மாந்தர்கள் மற்றுள யாவையும்
இருந்திறந் துழல்வானேன்?
அலகி லாததோர் பிறவியென் றெண்ணியே
அல்லலும் அறுநோயும்
மலமும் மூப்புமே மற்றுள யாவையும்
மல்கிடல் நிலையென்னே?

துன்பம் என்பதோர் பெயருடன் ஒன்றினைச்
சொல்லுவர் அதுதானே
இன்ப ஆக்கமாய் இயங்கிடும் என்பதை
எண்ணுவர் யார்யாரே!
வன்பும் தீமையும் வாய்மையும் இல்லதோர்
மனமதும் கொண்டிங்கு
என்புந் தோலுமாய் இயங்குவர் அவர்செயல்
எண்ணவும் படுங்கொல்லோ!

நாளும் இன்பமே இன்பமே எனவுளம்
நாடியே திரிகின்றார்
மூளும் இன்பமும் மூட்டிய துன்பமும்
முடிவிலா துடனாகும்
ஆளும் எந்தையாம் அண்ணலின் அருளிது
அப்பதம் நினையாதே
மாளும் மாந்தரை மண்ணிடைப் பதரென
மதிப்பது மதிப்பாமே!

துன்பம் ஏற்றத்தைத் துணிவுடன் கொள்பவர்
துயவர் இறையன்பில்
என்றும் உள்ளவர் என்பதை அறிந்துமே
இன்னமும் நலங்காணு
தொன்றை யொன்றென உணர்ந்துமே
மாந்தர்கள்
ஊழ்வினை யென்றேகி
நன்றி அற்றன புரிந்திவண் நலிவினுல்
நாடொறும் சாகின்ருர்

தொடங்கு துன்பமே இன்பமாய் உலகினில்
சுகமெலாம் அருள்செய்யும்
அடங்கி யாவரும் அத்துயர் ஆற்றியே
ஆண்மையின் வழிநின்ருல்
திடங்கொள் உள்ளமே தீமையை அகற்றிடும்
திண்ணிய மனங்கொண்டு
மடங்கல் ஏறினும் மற்றெது மாறினும்
மாறிடா திருப்பீரே

மொழிகொள் வாசகன் முட்டினன் பற்பல
மொழிதரு துன்பத்தே
பழிகொள் பாவியர் பல்துயர்க் கடலிடைப்
படுத்தனர் நபிதன்னை
அழிவிலாதநல் இயேசுவை அற்பர்கள் அறை
சிலுவையிற் கொன்ருர்
விழிகள் கண்டுமே விளம்பியும் அவர்கள்தம்
வினையறுக் கொண்ணுரே!

இறைவன் மக்களாய் இந்நிலத் துள்ளவர்
எய்தினர் பெருந் துன்பம்
பறைகொள் நாவினர் பண்புடை யவர்களைப்
படுத்தினர் படுதுன்பம்

அறையின் அப்பெருந் துன்பமே அன்னவர்க்
கடைதரு மானந்த
நிறையை தந்தது ஆதலால் நெஞ்சமே
நீதுயர்க் கஞ்சாதே!

துன்பம் உற்றிடில் அன்றியே சுகமுறல்
சொல்லவும் கூடாது
இன்ப மாளிகை துன்பமாம் அடியின்மேல்
ஏற்றிய உயர்கோயில்
அன்பில் ஆண்மையில் ஆண்டவன் உடைமையின்
ஆவன இவையாவும்
என்ப தோர்குவை இன்பமும் துன்பமும்
இடைவிடா தன கண்டாய்.

ஆகையால் இதை அமைத்திடு உளமதில்
ஆற்றுவாய் வருந்துன்பம்
ஓகையே யென உளத்திடை உன்னியே
உஞற்றிடுவாய் நன்றே!
சாகை யாகிய கொடுந்துயர் சாரினும்
சற்றுநீ தளராமல்
ஓகை ஓகையென் றேலமே விட்டினி
உயர்ந்திடு நல்நெஞ்சே!

துன்ப ஆக்கமே சுகமதற் கடிப்படை
சொல்லிடில் பலகோடி
இன்ப உண்மைகள் எண்ணலாம் இவைகளே
எண்ணியே நல்லோராய்த்
துன்ப நேரினும் சுகமது அருளினும்
சொல்லொழித் தொன்றுதும்
என்று வாழ்வதே மாந்தரின் கடமையாம்
என்பதால் வாழ்வோமே!

*விசு, ஆடி, க, (5-7-41)ல் தமிழ்க்கலேயில் வெளியானது

# சோதனையும் சாதனையும்

## (கும்மி)

வாழ்க்கை நாம் வாழ்வதற் கிந்நிலத்தே வந்து
வலியப் பிறந்தனம் கேட்டிடுவீர்-பொல்லா
வாழ்க்கைச் சுழலிடை நாம் சுற்றிநின்றுமே
வழியை அறியாது வாடுகின்றோம்

பொய்தனை மெய்யென்று யெண்ணிடுவோர் பலர்
பூமியில் நின்றெமைப் புண்படுத்தி-உயர்
மெய்ம்மை வழிகளை மூடிடுவார் அவர்
மேலாஞ் செயல்தனை நாடுகின்றோம்

இன்பம் இன்பம் என ஏங்குகின்றோம் எனில்
எல்லா வகைத் துயர் உந்துகின்றோம்-பல
துன்பச் செருக்குகள் சூழ்ந்து வருத்திடு
துயரை உடன் கொண்டு துவள்கின்றனம்

சோதனை வாழ்க்கையில் தோன்றிடுமே-பல
துன்ப நிகழ்ச்சிகள் கான்றிடுமே-மிக
வேதனை தந்துமே வாட்டுவதால் மனம்
வீணில் மடிவது கண்டிலீரோ!

சோதனை வெல்பவன் வீரனவன் புகழ்ச்
சொல்லுவ தென்றாலும் இன்பமதே-மனச்
சாதனை வேண்டுவ துங்களுக்கே பின்னர்
சாதித்தல் யாவையும் கூடுவதே!

இயேசுவின் சோதனை எத்துணை தான் அவர்
எல்லாம் இறையருளாலே வென்றார்-மிக
மாயம் பல செயல் மறைத்திட நின்றாலும்
மாபெரும் புத்தரே வளமடைந்தார்.

ஆண்டவன் அடியவராகி நின்றார் உயர்
அன்பு மழைபொழி வாசகனார்-மிக
ஆழ்ந்திடு சோதனை தாண்டிடவே பல
அல்லல் வழிநின்று மீண்டனர் காண்

ஆண்டவன் அடியவர் எத்தனைபேர் பல
அல்லலாம் சோதனை தாண்டிநின்றார்-நிதம்
வேண்டிய சோதனை நம்மிடை வருவதை
வீணென எண்ணியே வாடுகின்றோம்

சோதனை வென்றிடல் தூய்மைதாம் உயர்
சாதனை யென்பதே சாந்தியதாம்-இனி
வேதனை அற்றுமே வித்தக ராகவே
விளங்குவீர் சாதனை வேண்டு மென்றே

சாதனை பெறுதற்குத் தக்கதொன்று இந்தத்
தரணியில் உண்டெனச் சாற்றிடுவேன்-என்றும்
நீதியால் மனத்தூய்மை யெய்திடிலோ இன்பம்
நீடிடும் உண்மையே நேர்ந்திடுவீர்.*

---

* விசு, ஆவணி, க, (15-8-41ல்) தமிழ்க்கலையில் வெளிவந்தது

# அன்னையின் அருள் நலம்

உன்னை நினைக்கையிலே—என
துள்ள முருகுது கள்ள மறையுது
அன்னை பராசக்தியே—இந்த
அவனியில் எனை ஒரு மகனென ஆண்டிடு
கன்னியே பெற்றவளே—எங்கும்
காணற் கரியஉன் பொன் திரு மேனியை
முன்னியே காட்டினையே—இனி
முத்தி அளித்தருள் சத்திய அன்னையே (உன்னை)

வாழ்வெனும் வெள்ளமெலாம்—இனி
வற்றிடப் பற்றிலாச் சுற்றமே அற்றிடத்
தாழ்வுடன் நாள் கழிப்பேன்—எனைத்
தாங்கி அருளவே தண்ணளி காட்டினை
ஆழ்கடல் வந்தவளே—என் றன்
அன்னை பராசக்தி ஆனந்த வெள்ளமே
வாழ்ந்திடச் சொல்லுவையே—நானும்
வற்றல் மரமிக்கே 'வாழ்ந்திடு'என்றிடும்
(உன்னை)

காஞ்சியில் வாழ்ந்திருந்தேன்—அங்கே
காத்து வளர்த்திட்ட அன்னையர் இருவரைக்
காஞ்சிநிலே உணர்த்தி—உன் றன்
கட்புலம் காண்கிலா விட்புலம் கொண்டனை
ஓங்கிடு சென்னையிலே—வந்து
உற்றபணி செய உள்ளத்து எண்ணிப்பின்
வாங்கியே 'வாழ்' வகற்றி—எனை
வற்றல் மரமாக்கி இற்றைவந் தருள்செயும்
(உன்னை)

கண்மணி யானவளே—இந்தக்
காருல கதனிலே கதியற்ற பாவியேன்
உண்ணவுந் தருவாரில்லை—இனி
உலகினில் வாழ்வதால் ஒருபயன் எனக்கில்லை
என்றினைந் தேங்கிநின்றேன்—எனக்
இன்ப நிலைதர எங்கிருந்தோ வந்து
தண்ணளி செய்தனைத்தாய்—என்றும்
தாங்கி அருள்செய ஓங்கிய உள்ளத்தாய்
(உன்னை)

இளமையில் வாழ்விழந்தேன்—பின்னர்
இடையிலே பெற்றதை ஏனோகொண் டோடினை
வளமையெலா மிருந்தும்—வெறும்
வற்றல் மரமெனப் பற்றிலா வாழ்வினை
அளவிலா தெனக் களித்தாய்—நான்
அஞ்சி அஞ்சிமிக நெஞ்சம் உருகிட
உளன்என ஓடி வந்தாய்-எனை
உன்றன் பொருளாக்கி ஓங்கிடச் செய்திடும்
(உன்னை)

வஞ்சனை செய்தறியேன்—பிறர்
வாழ்விடைப் புக்குமே தாழ்வினைத் தந்திடேன்
அஞ்சி அறவழியே—என்றும்
அன்னைஉன் அருள்நெறி இதுவென வாழ்ந்தனன்
மிஞ்சியான் சென்றதில்லை—இது
மேலான உன்னுளம் தானறி யாததோ
வஞ்சிக் கொடிஅன்னையே—இன்று
வந்து எனக்கருள் செய்த நற்றெய்வமே
(உன்னை)

தைத்திரு நாளதனில்—உன்றன்
தனயன் திருச்செந்தில் தலைவாயில் நின்றுமே
உத்தமி உளமுருகி—என்றன்
ஒருதலைவன் அவன் அன்னைய ருடன் அருள்
சத்திய காட்சி கண்டேன்—அதன்
தனிப்பெரும் பயன் எனத் தளிர் ஒளி முகத்துடன்
புத்தொளி காட்டி வந்தாய்—உன்றன்
புண்ணிய அருளிலே என்னை மறந்தனன்

(உன்னை)

ஆண்டதன் முதல் நாளில்—எங்கோ
அப்பாலே சென்றிட்ட என்னை அருகிலே
வேண்டி அழைத் தெனக்கு—இரு
வித்தக அன்னையர் தம்முடன் நின்றெனை
ஆண்டருள் கோலத்தையே—அவன்
அள்ளிப் பருகென உள்ளத் தனித்தனன்
வேண்டிய பயனிதுவோ—இன்று
மேன்மைவழி அன்னாய் மிக்கிட வந்தனை

(உன்னை)

நாக ஒளி துலங்க—அன்று
நல்லருள் தானாகக் காட்டி வந்தாளினும்
சோக மனத்தவனாய்—ஏனோ
தொடர்ந்தோடிக் காணாது நின்றிட்ட என்னிடம்
வேகமாய் மீண்டுவந்து—உள்ள
வேதனை தீர்த்திட அருட்காட்சி நல்கிய
பாக மமர்ந்தவளே—எனைப்
பாரினில் நல்லொளி பற்றிடச் செய்தனை

(உன்னை)

ஆடியின் முதல் நாளில்—நல்ல
அரும்வெள்ளி நாளினில் அகிலாண்ட ஈஸ்வரி
தேடிவந் தெனக் களித்தாய்—களி
தெள்ளு இசைத்தமிழ் வெள்ளத்திலே உயர்
பாடல் அருள் புரிந்தாய்—உளம்
பற்றி அதைஎனை உன்வழி யாக்கியே
கூடி மகிழ்ந்து நின்றேன்—இன்றுன்
குளிர்அருள் நெறியேனும் கூட்டிலே
மயங்கினேன் (உன்னை)

புத்தொளி பிறக்குதம்மா—உன்றன்
பொன்னொளி அணைப்பிலே புகுந்தஎன்
அகத்திலே
மெத்த நலம் அரும்பும்—இந்த
மேன்மைத் தமிழ்நலம் மிக்கெனக் காக்கிடும்
சித்தத் தெளிவடைந்தேன்—இனிச்
சிந்தையில் உனையன்றிச்சேர்த்திடேன் மற்றதை
நித்தம் உடனிருப்பாய்—என்றும்
நிலைபெறு வாழ்விலே நீள்புகழ் தரஅருள்*
(உன்னை)

---

* வாழ்வில் பெற்றபல அனுபவங்களின் அடிப்படையில் எழுந்த பாடல்

## சைவ இளைஞர்களுக்கு வேண்டுகோள்

கற்பக மோங்கும் நற்புக ழுடைய
கவிஞர்க ளெங்குமே பரவிப்
பொற்புடன் பொலியும் புண்ணிய நாட்டிற்
புராந்தகர் பொற்பதம் போற்றும்
நற்குலத் துதித்து நன்னலம் பொலிந்து
நாட்டினில் யாவரும் வியக்க
விற்பன ரெனவே விளங்கிடுஞ் சைவ
வித்தக இளைஞரே கேளீர்!

நீரணி நிருத்தர் நின்மல வடிவை
நித்தமும் கருத்திடை நினைத்தே
ஓரணி கலமாம் உண்மையைக் கொண்டு
உழன்றிடும் மயக்கமே நீத்துப்
பாரணி சைவப் பற்றதைப் பரப்பிப்
பன்னெடு நாட்களாய்ப் பயின்ற
பேரணி கலன்கள் பிள்ளையார் முதலாம்
பிள்ளைக ளேயென அறிவீர்

புகலியிற் றோன்றிப் பொன்நகர்க் கூடல்
புறச்சம யங்களைப் போக்கி
இகலில்சீர் பெற்று யாண்டுமே பயின்று
இறையவன் பதமலர் ஏத்திப்
புகலிது வென்று புராந்தக ரடியைப்
பூவுல கினிற்புலப் படுத்தித்
தகவுட னின்ற சத்திய புருடர்
சம்பந்த ராமிளை யவரே

வெண்ணெய் நல்லூரில் விளங்கிடு வேளாண்
மேதகு குலத்தினில் தோன்றி
எண்ணலில் சைவம் இனிதுநின் றோங்க
ஏற்றமாம் ஞானபோ தத்தைக்
கண்ணுத லருளால் காசினிக் குதவிக்
கன்மமாம் புன்மல மவித்த
புண்ணிய முதல்வர் போற்றிடு மிளைய
புதல்வரே யென்பதை யுணர்வீர்

சுந்தரர் முதலாம் சொல்லரு மிளைய
தொண்டர்கள் தோன்றியே தூய
சந்திர னணிந்த சடைமுடிக் கடவுள்
தனிப்பெருங் கருணையை நிறுவி
அந்தர முதலா மனைத்துல கேத்தும்
அண்ணலா ரடிமல ரடைந்து
சந்ததம் நிலைத்துத் தனிப்புகழ் பெற்றார்
சாற்றிடின் அளவில ரம்மா!

ஆதலாற் சைவ இளைஞராய் இன்று
அவனியிற் றோன்றிய நீவிர்
மாதொரு பாகன் மலரடி போற்றும்
மாசிலா மதமதை நிறுவிக்
கோதிலா உண்மைக் குணங்குறி கடந்த
கொற்றவன் பதமல ரடைய
ஆதர வாகி அனைவருஞ் சேர்ந்து
ஆனந்தத் துடன்வரு வீரே.

---

சீமுக ஆண்டு சித்திரைத் திங்கள் (1933 ஏப்ரல்) சித்தாந்த இதழில் வெளியானது

## தெய்வீகக் காதல்

தோட்டத்தில் மாலையி லோர்நாள்—நல்ல
சுந்தர வாலிபன் வந்து இருந்தான்
பாட்டுகள் பாடிய வாயால்—எந்தன்
பைங்கிளியே கண்ணே வாராயோ என்றான்

'ஜில்ஜில் ஜில்'என் றோசை தோன்ற—பசுந்
திரையாம் செடியினைத் தாண்டியே நின்று
மெல்லிய கொடியினை ஒத்த—உயர்
மேலாம் அழகுடை மேனகை வந்தாள்

கண்டே கனிரச மென்றான்—எந்தன்
காதலரே உள்ளத் துள்ளவ ரென்றாள்
அண்டிடு வாய்அரு கென்றான்—நான்
ஆண்கள் அருகினில் அண்டிடேன் என்றாள்

ஏதுக்கிவ் வாதென் றிசைத்தான்—அவள்
எல்லா முன்காதலால் ஏற்பட்ட தென்றாள்
வாதுக்கு முன்னே நிற்கின்றாய்—அடி
வையகம் யாவும்உன் வாய்சொற் கெதிரோ!"

என்றெழுந்தே கிட்டே சென்றான்—அவள்
எட்டிஎட்டித் தூரே ஏகிட நின்றாள்
நன்றிதோ உந்தனுக் காமோ—அடி
நானேஉன் சேமத்தை நாடித் திரிவேன்

கூடி மகிழ்ந்திட லாமே—நம்மில்
கூடாதிந்தப் பெருங் கோடிப் பிணக்கும்
நாடி உனைப்பற்றி விட்டேன்—இனி
நானும் விடுவேனோ நங்கையே உன்னை

என்றே மலர்க்கரம் தொட்டான்—ஆ!
இன்பம் எல்லாம் ஒன்றாய் எய்தியதன்றோ
அன்பின் திருஉரு வானார்—அவர்
ஆனந்த நிலைதனை ஆர்சொல வல்லரார்

இன்பம் தரும்எந்தன் துரையே—நீ
என்னைவிட் டென்றுமே ஏகா திருந்து
உண்மை நலமருள் புரிவாய்—இனி
உலகினில் உனையன்றி உயர்வெனக் குண்டோ!

காதல! வாழ்தவம் ஒன்றாய்—எனக்
கன்னி இசைத்து மகிழ்ந்திட நின்றாள்
மாதனை என்றும் பிரியேன்—இந்த
மண்ணிலும் விண்ணிலும் கண்ணிலும் என்றான்

உள்ளத் துவகையைக் கொண்டாள்—கை
உயர்த்தி அவன்உரு ஓங்கி அளந்தாள்
வெள்ளத்தனை இன்பம் உற்றாள்—உயர்
வேகமாம் காதல் விளக்கிடப் போமோ!

கண்ணே மணம்செய்து வாழ்வோம்—உடன்
காணரு மின்பத்தில் நாமும் இருப்போம்
பண்ணும் இசைமொழி யும்போல்—மற்றும்
பாலும் அதிலுள்ள வெண்மையும் போல

இயற்கையைக் கண்டு மகிழ்வாய்—நான்
ஏகி உடன்வந்து இங்கே இருப்பன்
மயக்கமில் குறிதவ ருமல்—கண்ணே
மன்னி இன்பம் அளி மாதவன் ஆணை

என்றவன் ஏகினன் இவளும்—தன
திளநல இன்பத்தின் இனிமையைக் கண்டு
நின்றனள் சந்திரன் தோன்றி—அவன்
நேர்மையைக் கண்டு நகைத்தனன் சென்றாள்

தெய்வீகக் காதல் சிறந்தார்—அவர்
தெய்வீகக் காதல் சிறந்தினி தோங்க
மெய்மையும் வீறும் பெறுக—உண்மை
மேவும் நலன்சிறந் தோங்குக மாதோ.*

---

* (1939ல் வெளியான கவிதை)

## கடலும் காதலும்

எங்கும் பரந்துடை மெய்க்கடலே உன
தின்ப நிலை எதுவோ—மனம்
பொங்கிய எண்ணம் பலப்பலவாம் அதன்
போக்கை விளக்கிடவோ

காதலெனும் பெரு வெள்ளத்திலே அது
கவிழ்ந்து புரளு தையோ—எந்தன்
மாதவள் காதலி கண்டிட ஓடியே
மாழ்கித் திரும்பிடு மால்

நீயுமுன் வானமும் நேர்ந்து கலந்திடு
நேர்மையில் என் மனதும்—உயர்
காதல் தலைவியைக் கட்டி அணைத்திட
கருத்திடை எண்ண முறும்

ஓயாது தோன்றிடு மோங்கு மலையைப்போல்
ஓர்கோடி எண்ண மெல்லாம்—இவண்
சாயாது என்னிடம் தாண்டவம் செய்துமே
சஞ்சலம் மூட்டு தையோ

பொன்னு மணியுநீ புதைத்து வைத்தாற்போலப்
பொற்புடைக் காதலியும்—அவள்
உன்னருங் காதலை உள்ளத்தி லேகொண்டு
ஒளித்தெனை வாட்டு கின்றாள்

சந்திரன் கண்டு தலைதூக்கி நிற்கின்றாய்
தன்மை மிகு கடலே—அவள்
சிந்தையில் என் உரு கண்டதும் இன்பத்தின்
சீர்தலை தூக்கிடு வாள்

உன்னிடை மீன்கள் உருளும் செயலது
உயர்ந்திடு காதலி தன்—நல்ல
இன்னிய விழிபிறழ் வேடிக்கை தன்னையே
இதயத்தில் தோற்று விக்கும்

கருமை நிறங்கொண்ட கார்க்கடலே அவள்
கடிமணக் கூந்த லுமே—என்றன்
அருமை மனதினில் அந்த நிறத்துடை
அழகினைத் தோற்று விக்கும்

கடலே உனதொலி காதடைக் கின்றது
காதலி தன் னுரையோ—என்றன்
உடலையும் உயிரையும் உள்ள அனைத்தையும்
ஒன்ருய் அடைப் பதுவே!

நேரம் கழிந்தது நேரிழையும் வந்து
நின்றெனைத் தேடிடு வாள்—நான்
ஆர மணிவித்து அணைத்தின்பங் கண்டபின்
அடுத்தநாள் வந்திடு வேன்

சென்று வருகின்றேன் சீர்க்கடலே அவண்
செல்வி எனை அழைப்பாள்—நீ
என்று மிவண்நின்று இன்ப மளித்திட்டு
ஏற்ற முற வாழி!

# கிள்ளை விடு தூது

சென்று சொல்லிடுவாய்—கிளியே—சென்று
சொல்லிடுவாய்
ஒன்றிய மனமுடன் உத்தமன் உறவெண்ணி
உழன்று வருந்தியே ஓலமிட்டே னென்று (சென்று)

இளமைப் பொழுதினிலே—வந்து
எந்தன் அருகிலே இயைபுட னேநின்று
வளமை வழங்கி நின்றான்—அவன்
வந்து அருளுவன் என்றே அகன்றிட்டான் (சென்று)

அந்த நாள் முதலாக—நான்
அவன் வருவானென்று தவநிலை கொண்டுமே
சிந்தை மகிழ்ந் திருந்தேன்—இன்னும்
சேரவந் தின்னருள் ஈந்திலனே நீயும் (சென்று)

என் பின்னர் சூழ்ந்திடுவார்—பலர்
ஏதேதோ சொல்லிப் பிதற்றுகின்றார் மனம்
கன்றி வருந்தி நின்றேன்—அவன்
கண்ணைத் திறந்துஎன் அண்மையில் வந்திட
(சென்று)

சுற்றியே நின்றிடுவார்—பல
துன்மார்க்கச் செயல்புரி வன்மார்க்க வழிபுகு
அற்பர்கள் பலரிருப்பர்—அவரிடம்
தப்ப வழியுன்றித் தயங்குகின்றே னென்று (சென்று)

வருவர் இன்பம் தருவார்—மற்று
வராது ஏனோ மறைந்து அங்கேநின்றார்
அருமை அற்றவராக—அந்தோ
அவர்புரி செயலெல்லாம் ஆற்றுகிலே னென்று
(சென்று)

உனைப் பிரிக்க எண்ணுவார்—தலைவா!
உற்றஎன்மேல் பல கற்பனைகள் செய்வார்
நினைத்திடில் அவை கொஞ்சமோ—உந்தன்
நெஞ்சிலே வைக்காது வந்திடுவாய் என்று (சென்று)

பாவம் பல புரிவார்—கொடும்
பாவிகளைநின்று ஆவி துடித்திட
ஆவன ஆக்கிடுவார்—அவர்
அதிகாரங் கெட்டு அகந்தை அழிந்திட (சென்று)

எந்தன் தலைவனுவன்—அவன்
எல்லா விடத்திலும் எண்ணி நிரம்புவான்
கந்தனெனப் படுவான்—உயர்
கட்டழகமைந்தவன் சட்டென்று வருதற்கே
(சென்று)

ஊரில்லை காணியில்லை—மற்று
உறவினர் ரென்பவர் ஒருவரு மிலையவர்
பேரினைச் சொல்லி இங்கே—என்றும்
பிதற்றியே நிற்பதைப் பேசி உடன்வர (சென்று)

வாழ்க்கையில் ஒன்றிடுவேன்—எந்தன்
வாழ்நாள் முழுவதும் தாழ்ந்திடுவே னவன்
வாழ்க்கை உயர்த்திடுவேன்—என்றன்
வாழ்க்கைக் குயர்வருள் பாலித் திடுவென்று (சென்று)

உண்ணும் செயல்மறந்தேன்—அவன்
உருவெந்தன் கண்முன்னே உற்றிருக் கின்றதால்
எண்ணமெலாம் அவனே—எனை
என்றும் உடன்வைத்து ஆண்டுகொள் ளென்றுமே
(சென்று)

அன்பால் என் உள்ளமெல்லாம்—தொட்ட
அன்று முதற்கொண்டு ஆறுய் உருகுதே
இன்ப நல னளிக்க—அவனை
இதயத்தே எண்ணிடில் ஏக்கமுண்டோ மற்றே
(சென்று)

அவனுடன் சேர்ந்தவுடன்—கிளியே
அரிய பொருளுனக் களித்து மகிழ்விப்பேன்
தெளிவாக அவனிடத்தே—உடன்
தேடிவந் தேமணம் நாடிப் புரிந்திட (சென்று)

———

# உருவெளித் தோற்றம்

செல்வா னிளம்பருதி தெற்றெனவே மேற்கிளம்பி
எவ்வாயினும் ஒளியை இன்னினிதாய் வீசிடவும்
காலைப் புள்ளினங்கள் கண்ணியநற் றீங்குரலில்
சாலப் பலபாடித் தாவிக் குதித்திடவும்
உற்றதொரு வேளையிலே உள்ளம் பறிகொடுத்து
மற்றப் பொருள்மறந்து மாமயலி லாழ்ந்து
விட்டேன்
உள்ளத்திற் காதல்கொண்டேன் உண்மைவழி
[தன்னில்வரும்

வெள்ளத்தனை அன்பை வேண்டி மனங்கரைந்தேன்
கண்டேன் இன்பநிலை கட்டுரைக்க மாட்டாதே
கொண்டேன் மாமயலும் கூசாமற் கூறுகின்றேன்
காமக் கண்ணியவள் காணரிய கட்டழகி
நாம இனியவள் நாடியெனை வந்திடவும்
பற்றி வளைக்கரங்கள் பக்கல் உடன்இருத்தி
உற்ற நலம்வினவி உள்ளம் ஒன்றுபடக்
கண்டோம் இருவருடல் கட்டிடவே இன்பநிலை
கொண்டோம் குளிர்கொன்றைச் சடையனெனவே
யானும்

மாற்றி உயர்முத்தம் மகிழ்வாகப் பெற்றபின்பு
சாற்றரிய அன்பின் தனிக்கடலி லாழ்ந்துவிட்டோம்
பிரிந்த நிலைஅறியோம் பேசா மௌனநிலை

புரிந்தோம் அதன்பிறகு 'போய்வருவேன்'
என்றகன்றாள்
அந்நாள் முதலாக ஆசையதே பாசமதாய்
இந்நாள் தொறும்விழைந்தும் என்முன்பு காணவில்லை
பேதை மனத்துடன் பெண்ணவளும் எங்குசென்றாள்?
ஓதைச் சிலம்புடைய ஒண்டொடியாள் காணவில்லை
பாழும் மனம்வருந்திப் பதைத்துயான் தேடுகின்றேன்
நாடும் தமிழறிவீர் நாட்டினில்நீர் கண்டீரேல்
கூறிடுவீ ரப்போதே கொள்வேன் அவள்நலத்தை
மாறி இருந்தறியாள் மங்கையவள் கண்டவுடன்
கண்ணாலம் செய்வேன் கட்டாயம் கூறிடுவேன்
பண்ணாலே பாடிப் பல்லாண்டு வாழ்த்துவீரே! *

* 1837ல் பாடியது.

## முத்தமே முத்தம்

*மாலைப் பொழுதிலொரு மிகுமயக்கிலே*
*மனது குளிருமொரு மகிழ்ச்சியிலே*
*மேலைக் கடலினிடைச் செங்கதிரோன்*
*மேனி மறைத்துஉள்ளே சேர்கையிலே*
*பாலைப் பழிக்கும்உயர் தண்மதியோன்*
*பக்கல் குணக்குதிசை வந்திடவே!*
*சாலப் பலப்பலநற் றன்மையிலே*
*சலனக்கடல் மீதிருக்கும் தன்மை*
*உரைப்பேன்*

*வெண்மை மிளிரும்ஒளி வெள்ளலைகள்*
*மேன்மேல் கிளம்பித் துளிவீசிடவே*
*அண்மைக் கடற்கரையின் அழகியதோர்*
*அருமைப் படகினிலே அமர்ந்திருந்து*
*பெண்மைக் குணம்நிறைந்த பெற்றிமையாள்*
*பேணும் வடிவழகி உற்றிடவே*
*உண்மை வழியில்வரும் இன்பமதை*
*உள்ளம் அறிந்துமிகத் துள்ளியதே*

*இயற்கை அழகிற்சென்ற எங்களுள்ளம்*
*இந்தக் கடலைவானம் முத்தமிடும்*
*மயக்கமிலா வழியைக் கண்டிடவே*
*மனத்தினில் காதலினைக் கண்டுகொண்டோம்*

முயக்கில் அகன்றிருந்த இருவருடல்
முன்னமே ஒன்றாய்வந்து உற்றிடவே
அயற்சி அகன்றுடனே இன்பவெள்ளம்
ஆறாய்க் கடலினிடை ஓடியதே

காதற்பெருக்கினிலே கட்டி அணைத்து
கன்னஞ் சிவக்கஉயர் முத்தமே கொண்டோம்
ஓதற் குரியர்இனி இவ்வுலகிலே
உண்டோ இதசரதம் எங்களின்பத்தை
ஆதரங் கொண்டதொரு ஆசைமுத்தமே
அடியேங்கள் இன்பமதை ஆண்டதுவே
ஓதற்குரிய புகழ்முத்தமே முத்தம்
உயர்அன்பின் வழிவரு முத்தமே முத்தம்.

# வருவதும் போவதும்

அன்ெறாருநாள் மாலை ஆறுமணி இருக்கும்
தென்றல் இளங்காற்றுச் சில்லென்று வீசியதால்
மாலைப் பொழுது மனத்துக் கினியதுவால்
சாலப்பல நலத்தைச் சார்ந்துநின்ற நேரமது
எந்தன் தமிழ்த்தலைவி என்னுயிரின் வைப்பிடத்தாள்
சொந்தமனை தன்னில் தூதுபல சொல்லிடுவாள்
வேகத்தே செல்ல விரைவாய் நடக்கையிலே
மோகாந்த மாலை முழுமதியென் காதலியின்
பொற்பார் முகமே போற்கிழக்கே தோன்றியதால்
அற்புதங் கண்டு ஆழ்ந்தநிலை தனில்இருந்தேன்
எங்கிருந்தோ வந்தாள் எல்லாவெண் பற்களையும்
இங்கென்முன் காட்டி எழில்மிகுந்து நின்றவள்போல்
என் இடது பக்கம் எட்டி வடக்கிருந்து
கன்னிறைந்த காடு கடுகி நடந்தவள்போல்
தோன்றினாள் ஆனாலும் தூய்மைஅங்கே காணவில்லை
கான்றும் கொடுஞ்செயலைக் கண்ணிரண்டும்
காட்டினவே

என்னருகே வந்தாள் ஏதடா சனியனென்று
பின்னுமென் வழிபார்த்துப் பெயர்ந்திட்ட வேளையிலே
வழிமறித்து என்முன் வார்த்தைபல சொல்லிநின்றாள்
நான்ஓர் வடஜாதி நாட்டிலெனைப் போன்றவரைக்
காணக் கொடுத்துவைப்பார் காசினியி லுண்டேயோ?
என் அழகு உன்கண்முன் ஏன்று தெரிவதைப்போல்
உன்முன்னர் இதுவரையும் ஒருவரையும் கண்டதில்லை
என்றே மொழிந்தாள் ஏபேதாய் யாரென்றேன்

இங்குவந்து என்னை இன்னலிலே விட்டிடல்ஏன்?
என்ற ஒருமொழியை ஏற்று அவள் பேசுகின்ருள்
கண்டே கனிரசமே கற்பகமே சர்க்கரையே
கொண்டே எனதுமொழி குலவிடுவோம் வாரீரோ!
ஆசை அழகா ஆண்களிலே தோளழகா
நேசம் மிகுந்தாய் நிறைந்த பொறையுடையாய்
என் அழகைக் கண்டு இளகமன மில்லைகொலோ
உன்அருகே என்றும் உற்றகதை உரைப்பேன்
மொழிகள்பல பேசிடுவேன் மோகமாய்ப் பலநாட்டு
வழிகளறிந்திடுவேன் வந்தால் உனை அழைத்து
எந்நாடும் காட்ட ஏற்ற வழிஅறிவேன்
கண்ணளா என்பேர் கண்ணுட்டி தானுகும்
மோகனப் பார்வையிலே முத்தந்தனைச் செய்வேன்
ஏகுநீ என்னுடனே என்றுரைத்தாள் நானுடனே
வஞ்சகமே பேயே வனத்தின் கொடும்பாவி
சஞ்சலமேன் எங்கட்குத் தாவிநீ ஓடிடுவாய்
என்றிசைத்து முடிவதற்குள் எந்தன்மேல்
சாயவந்தாள்
அந்தோஎன் றப்புறத்தேன் அலறிநின்றேன்
அவளுடனே
கோபம்ஏன் கொண்டீர் கொண்டால் எனைப்பலனும்
வேகமாய் மிக்கிடும்நீர் வேண்டியதைச் செய்திடுவேன்
வீட்டிற்கு பொட்டிட்டுப் வேலைபல செய்து
வாட்டம் அகற்றி வளர்ப்பேன் பணிப்பெண்ணய்
உன்கால் செருப்பாக உள்ளநா ளத்தனையும்
என்வாழ்வை ஆக்கி இருப்பேன்நான் இன்னுங்கேள்
தோசைக்குச் சட்டினியாம் தோகைக்கு நற்கண்ணும்
ஆசைக்கு நானும் அருகிருக்க வேண்டாவோ
நான்வாழும் நாட்டில் நல்லவர்கள் உந்தனைப்போல்
ஏன்ஒருவர் இல்லை எனஏங்கி வாடுகின்றேன்
கண்ணளா என்னைக் கலியாணம் செய்தக்கால்

எண்ணாத தேசம் எல்லாமும் சுற்றிடலாம்
என்னைப் பலரறிவார் யானறிவேன் அவர்பேச்சு
உன்னை உடனழைத்து உற்றநலம் பற்றிடுவேன்
என்றே பலமாய் எடுத்த மொழிபேசி
சிந்தை திரிக்கச் செய்தபல ஜாலங்கள்
ஒன்றுக்கும் ஏங்காமல் ஓர்நிலையாய் நான்நின்று
பெண்ணெனவே வந்த பெரும்பூத மாஉருவே
உன்னழகில் என்னை ஒளியிழக்க எண்ணினையே
நாங்கள் உயர்குலத்தார் நற்றமிழ்ப்பால் உண்டவர்கள்
தீங்கை அறியோம் செய்யோம் கொடுஞ்செயல்கள்
வாழ்வுக்கும் பொருளுக்கும் வாழோம்நாம் மானத்தே
வாழ்வை அமைக்க வழிவகுப்போம் ஆதலினால்
உந்தன் மயக்கம் ஒன்றும்எனைச் செய்யாது
எந்த நிலையும் எனை மருட்ட முடியாது
நீவாழ வேண்டில் நீங்கு உடன் எனையே
போவாய் வெளியே பொல்லாங்கு தேடாதே
நின்றால் உயரிழப்பாய் நில்லாது ஓடிவிடு
என்றே இசைத்தேன், ஏதேது மிஞ்சுகின்றாய்
கணத்தே உன்மதத்தைக் கட்டுகின்றேன் என்
அண்ணன்
மனத்தே உனை நினைத்தால் மாள்வாய்நீ இக்கணத்தே
கூப்பிடுவேன் என்று கூக்குரலிட்டாள் கண்டேன்
ஆட்டம் நடப்பதைப்போல் அங்குகண்ட தென்
[சொல்வேன்
ஒருவன் எதிர்நின்றான் உற்றவனைப் பற்றினராய்
அருகில் ஐந்தாறுபேர் ஆட்டம் பல இசைத்தார்
ஏதடா பெண்ணிடத்தே என்னவாது செய்கின்றாய்?
பாதகமே அன்றோ பார்உன்னை வாட்டுகின்றோம்
என்றார்நான் புன்சிரிப்பால் யாதொன்றும் கூறாமல்
நின்றேன் அவன்பலவாம் நீண்டமொழி யுரைத்தான்
மாயப் பொய்காரி மயக்கிஎன்தன் சோதரரைக்

காயப் படுத்திக் கட்டிஉடன் வைத்திட்டாள்
என்றே அறிந்தேன் ஏகிஉடன் வந்தவர்கள்
நன்றேஎன் சோதரர்கள் நானறிந்தேன் நற்றமிழர்
வீரர் குலத்தே விளங்கப் பிறந்தவர்கள்
சாரல் அவள்பக்கல் சாருமோ என்றிட்டேன்
எல்லோரும் சேர்ந்தே எனைஎதிர்க்க வந்தார்கள்
நல்லோரே நான்கூறும் நன்மொழியைக் கேட்டிடுவீர்
பொல்லாத வஞ்சகமே பொய்உருவாய் வந்ததோ
வில்லாது நின்ற நெடுமரத்தோ டடன்வந்தான்
இந்தக் கொடியோன் இவர்கள் வழிநின்று
சொந்தச் செயல்மறந்தே சோதரர்கள் நம்குடியில்
இக்கொடுமை உண்டோ இதற்கும் பலன்யாதோ!
மிக்கான நம்மை விரட்டி வதைப்பாரோ!
உங்கள் பழம்பெருமை உன்னி அப் பேய்விட்டு
நங்கள் இடம்வந்து நல்லவராய் மாறிரோ
என்றே உரைத்தேன் எந்தன் மொழிகேட்டு
நன்றுய்ந்த பொய்மை கலவாத நற்குலத்தோர்
ஓரிருவர் வந்து உற்றுஎனைச் சேர்ந்தார்கள்
காரிருளில் வெண்ணிலவும் கண்ணியமாய்ச்
சிரித்ததுவே!
குலம்கலந்த கோடாரிக் காம்புகளாய் நின்றிட்டார்
நலமில்லா அப்பேயை நாடியுடன் எங்களுக்கு
அவள் தமையனோடே ஆற்றஇனர் முன்னின்றார்
பலபலவாய் வசைமொழிகள் பலபலவாய் ஆயுதங்கள்
விதவிதமாய் எம்மை விளையப் பொருதிட்டார்
உண்மைக் குடிபிறந்தார் உத்தமர்நாம்
பேரொளியில்
எண்ணும் இறைவன் எண்ண முளத்தமைத்து
வீரத் தமிழர் விளம்பும் குலம்வந்தோம்
தீரச் செயல்புரிவோம் செல்லாதுன் மாயமெல்லாம்
ஓடுவீர் எம்மைவிட்டு ஓர்சொல் கிளம்புமுன்னே

சாடுவோம் என்றும் தனி அரணே தாம் அமைப்போம்
என்றே மார்தட்டி எழுந்து கிளம்புகையில்
நின்றே சமர்புரிய நேராத கோழைகள் தாம்
கண்ணுக்குத் தெரியாது காதவழி மறைந்தார்
நண்ணிஉடன் சென்றவரை நட்டாற்றிடை இட்டார்
அந்தோ என்றவர்கள் அழும்ஒலியே கேட்டதுவால்
எந்தத் துயரும் இல்லோம் எனநின்றோம்
எங்கள் குலம்விளங்க இன்றிருந்த மாதவத்தீர்
நங்கள்மதி இழந்து நாடிட்டோம் அப்பெண்ணை
என்றே மொழிந்தார் இனமிகுந்த சோதரர்கள்
இன்றே உயர்ந்தோம் எல்லோரும் நம்மரபில்
மோசம் போகாமல் முழுநிலத்தில் நம்குடியில்
வாசம் புரிந்து வாழ்ந்திடுதோம் சோதரரே!
நம்மைக் கெடுக்க நாடும்பல கொடியர்
பொய்மைமொழி கேட்காது புவியதனில் புகழுறுவீர்
என்றே கூறிட்டேன் ஏகிடுவோம் என அகன்றார்
அந்நேர வேளையிலே ஆள்எனக்கு வந்ததுவால
வேகமாய்ச் சென்றேன் வீணைக் கரத்துடனே
மோகச் சுதிகூட்டி மேன்மைத் தமிழ் இசையைப்
பாடி மகிழ்வித்தாள் பைங்கிளியாள் அச்செயலில்
நாடி முன்வந்த நாட்செயலை மறந்திட்டேன்
காதலிலே கண்டேன் கற்புத் தமிழறத்தை
மீதுலகில் வாழும் விதம்உணர்ந்து கொண்டேனே
செந்தமிழர் வீரம் சிறக்க எனவாழ்த்தி
இந்நிலத்தில் இயைக நலம் என்றே
போற்றி மகிழ்ந்து பொய்மை மடிந்தொழிய
ஆற்றல்மிகப் பெற்று ஆனந்த ஊற்றெடுக்க
நின்றேன்என் காதலியும் நேர்மை விருந்தளிக்க
அந்த உணவருந்தி ஆனந்தத் தாழ்ந்தனனே!

(விக்கிரம—1940—புரட்டாசி தமிழ்க்கலை ஆண்டுமடலில் வெளியானது)

## கனவு நிலை உரைத்தல்

சொல்லரிய மாருதமும் தூய்மையுடைக் கந்தமுமே
சுகமாய் வீச
அல்வருமுன் மாலைதனில் ஆண்டொருசோ லையி
[னிடத்தே
அழகாய் நிற்க
நல்லமுத மொழியுடைய நாயகியும் எனையணுகி
நண்பா என்ன
வெல்லரிய இன்னலெலாம் ஒழித்திட்டேன்
வினையும் தீர்ந்தேன். [அக்கணத்தே
கற்கண்டு வெறுக்குமொழிக் கன்னிகையையும் பல
[விதமாம்
கனிகள் கொண்டு
நற்கந்த வாசமுடன் எனைநாடி நிற்கையிலே
நவில லாமோ
சொற்கொண்டு அளந்தாலும் முடியாது யாவருக்கும்
தூய்மை யுள்ள
விற்கொண்டு மன்மதனும் எய்திட்டாய் விடாய்மிக்கு
விரும்பி நிற்க!
கன்னிகையும் எனையணைத்து முத்தமிட்டாள் யான்
களிப்பு மிக்கு [தானும்
என்னினிய ரத்தினமே என்றேத்தி இதழ்சுவைத்தேன்
இம்மட் டோதான்



8

மன்னியநற் கலவியினும் மகிழ்வெய்தித்
[திளைத்திட்டேன்
மகிழ்ந்த பின்னை
இன்னியநற் கருவியுட னிசைபாட யான்கேட்டு
இருக்கின் றேனல்!

அப்பொழுது யாரோவந் தெனையழைக்க அலறிமிக
எழுந்து காண
எப்பொழுது மிருக்குமிடம் கல்லூரி விடுதியென
யேங்கிக் கண்டேன்
செப்புதற்கு மறியாமல் தேடிவந்த நண்பனுடன்
தின்றும் போல
அப்புறஞ்சென் றென்கடனைக் கழித்தண்ணல்
[அடியுன்னி
அமர்ந்து நின்றேன்.*

1934-ல் பாடியது

# இயற்கை இறைவன்

தூய்மை உள்ளம் துலங்கியே நின்றிட
துன்பம் யாவும் அகன்றிடக் கண்டதோர்
வாய்மை தன்னை உணர்த்துவன் கேண்மினோ
வான ஓடையில் வந்தொளிர் சந்திரன்
சேய்மை நின்றுநற் பாலோளி வீசினான்
தீந்தமிழ்த் தென்றல் சேர்ந்துடன் சூழவே
ஆயும் ஐம்புல ஆக்கமும் பெற்றனன்
அன்பெனும் வெள்ளத் தாழி மிதந்தனன்

இன்பமே ஒளியாய தென் கண்ணிற்கே
எங்க ணும்புகழ் ஈசன் அருள் கண்டேன்
பண்பு சார்மட மங்கையைச் சேர்பவர்
பாரில் இன்பம் பருகுவ ராவரோ
நண்பர் தம்முடன் கூடிப் பழகுவோர்
நாட்டின் இன்பம் நவிலுவ ராவரோ!
அன்பெனும் அருள் சேர்ந்திட யானுந்தான்
ஆர்வங் கொண்டு அடைந்தனன் இன்பமே!

இயற்கை இன்பத்தை எந்தையும் ஈந்தனன்
ஏங்கும் காணரும் ஈசனருள் உரு!
மய்க்க மற்றதவ் வியற்கை வடிவமே
வானு மண்ணுமவ் வின்பத்தின்
தோற்றமே!

செயற்கை கண்டுளம் சேவிக்கும் தன்மையீர்!
  இத்திப் பானவன் முத்தியும் நல்குவன்
மயக்கம் நீங்கும் இயற்கை வடிவிலே
  வந்து காட்டுவன் தன்னொளித் தோற்றமே!"

உண்மை இன்பம் உலகினில் வேண்டிடில்
  உயர்ந்து வாழ்ந்திட உள்ளம தோடிடில்
வண்மை கொண்டு நலம்பெற நாடிடில்
  வையந் தன்னிடை வாழ்ந்திடு மாந்தர்காள்
அண்மை சேய்மைஎன் றில்லதோர் ஆதியான்
  அண்ணல் தோற்றம் இயற்கையிற்
கண்டுமே
எண்ணும் எண்ணம் பலஅற்று என்றுமே
  இன்பத் தின்கடல் எய்திக் குளிப்பீரே!

# அழகே காட்சி

நீலவானில் நின்றொளிரும் நேர்மையழகே-உயர்
நித்தில ஒளியில் நிற்பாய் நல்ல அழகே
கோலமாய் விளங்குமொரு கோதில் அழகே-இந்தக்
குவலயம் நினதாகுமே குணவழகே.

நேர்மைநிறை உள்ளமதில் நின்றொளிருவாய்-மற்று
நேரிழையார் இன்முகத்தில் நேர்ந்திடுவாய்
சீர்மைநிறை ஓவியமும் உன்பொருளாம்-அதன்
சிறப்பை விரித்திடுதல் செயலல்லவோ!

கடலின் ஒலியினிலே கார்நிறத்தே-மற்றும்
காணரும் இன்பமளி மலரினிலே
உடலிலே உயிரென ஒன்றிநின்றாய்-உனை
உன்னி வணங்கிடுவோம் அழகணங்கே!

கொடியில் விளங்கிடுவாய் நல்லழகே-அந்தக்
கொடியின் துளிரும்உன தழகல்லவோ
விடியும் பொழுதினுமே மாலையினும்-யாண்டும்
விளங்கும் அழகணங்கே வெற்றியடி!

கதிரவன் ஒளியிலும் கண்டிடுவேன்-உனைக்
கார்நிறை மழையிலும் கொண்டிடுவேன்
அதிரும் சிலம்பொலியும் நின்ஒலியே-அன்றி
ஆடவர் அருட்செயல் நின்செயலே.

பால்நிறை நல்லமுதுன் சுவையே-பின்னும்
பால்ஒளிச் சந்திரனும் நின் உருவே
மேல்படும் காற்றின திண்செறிவே-உந்தன்
மேலாம் அழகதின் செறிவல்லவோ!

ஆற்றினில் தோன்றிடும் ஓடையுமே-அதில்
அழகுடன் ஆடிடும் மீனினமே
சேற்றில் விளையும்நல்ல செங்கழுநீர்-இன்னும்
செப்பும் பயிர்கள் யாவும் நின் செயலே.

இயற்கையில் நின்றிடும் எழில்விளக்கே-உனை
எண்ணு திருப்பின் உயிர் இயங் கிடுமோ
செயற்கை நிலையெல்லாம் உன்நினைப்பில்-வந்து
செகத்தில் திரிவதுவே ஆகுமடி.

அறத்தின் பயனாகவும் நின்றிடுவாய்-மற்று
அருளின் திருவுருவும் நீயே யன்றோ
திறத்தின் வலியவீரர் செய்கையெல்லாம்-நிந்தன்
செம்மை வழியதனால் செயமல்லவோ!

மானுடற் புள்ளியாக மயக்கிடுவாய்-காணும்
மரகதப் பச்சையாக மாறிடுவாய்
பேணும் அடியர்களுக் காண்டவனாய்—நின்று
பேதமகற்றி அருள் செய்திடுவாய்!

இன்சொல்லாய்த் தோன்றுவதும் நின்வடியே—இனி
இந்நிலத் தெப்பொருளும் நீயலவோ
உன்செயல் உலகத்தை ஓங்குவிக்கும்—இதை
உணர்ந்தவர் இறையருள் உற்றவரே!

பொன்னில் ஒளியாய்நின்ற புண்ணியமே—உயர்
பொருப்பின் சிறப்பாய் நின்ற கண்ணியமே
மண்ணில் கலந்துநின்ற நற்றிறமே—உந்தன்
மாண்பு இம்மட்டோ நிற்கும் சொல்லுவமே!

தெங்கங் காயாய்த் திரண்ட செவ்வழகே—அன்றித்
தெவிட்டாத தேனாய் வந்த நல்ருசியே
பொங்கு கடலலையில் புரண்டிடுவாய்—உனைப்
போற்றிடின் உற்றிடுவோம் புகழ்நிலையே.

குழவிகள் ஓசையிலும் பாட்டினிலும்—மற்றக்
குழல்ஒலி யாழொலி யாவையிலும்
அழகினைக் காட்சியொன்று அஞ்சலித்து—நிதம்
அன்புடன் அவனடி போற்றிடுவோம்.

# காலைக் கதிரவன்

அன்பர் மனத்தா மரைஅலர வந்தருளும்
செம்மல் இறையவனூர் திருக்காட்சி தந்ததுபோல்
காரிருள் எவ்விடத்தும் காணுமலே ஓடி
சீரிய தாமரைகள் செந்தேன் தலையவிழ
இதழ்கள் தலைவிரிந்து இன்பநலம் பரப்பி
நிதமும் அலர்விரிந்து நேர்மைநலங் கொடுப்ப
இன்பத் திருந்த இணைபிரியாக் காதலர்கள்
துன்பத்தின் எல்லை தோன்றிற்றே எனமாழ்க
அன்புற்ற அன்பர் ஆண்டான் அடிபணிய
இன்பதேன் சொட்ட இளம்பொழுது வந்தெனப்
புட்கள் பலவும் புலரும் பொழுதிரவு
விட்டுஉடன் தோன்றிற்று வேடிக்கையாய்ச்
செல்வோம்

என்றுமே கூட்டைவிட்டு எழுந்து புறப்படவும்
நன்றே எனநல்லார் நற்குடங்கள் கைக்கொண்டு
குளத்தின் கரைகளிலும் குறுநீர்ச் சுனைகளிலுல்
வளத்தின் நதிகளிலும் வாய்வம்பு தனைவிச
அவராத் திரியாகா தன்றிராப் பொழுததனைச்
சிவராத் திரியாகச் சிற்றின்பம் தாம்நுகர்ந்த
காதலர்கள் ஒருசார்பில் காதல் விடிந்ததென்று
வேதனையைப் பெற்றிடவே வேண்டுங் கணவன்றான்
வங்கமிசை சென்றான் வரவில்லை எனஎண்ணிக்

கங்குல் முழுதும் கலங்கிநின்ற காரிகையார்
காலைப் பொழுததனைக் கண்டு மகிழ்ந்திடவும்
சாலச் சிறந்த தவசியர்கள் தண்டுடனே
தத்தம் கடனாற்றச் சார்பிடங்கள் நாடிடவும்
புத்தம் புதிய புதுமைகளே தோன்றிடவும்
தனது ஒளிபரப்பித் தமனியமாம் நீள்காத்தால்
மனது மலர்விரிய மாநிலத்தே தோன்றிற்று
செங்கரத்தால் மக்களது தீத்துயிலைப் போக்குவிக்க
எங்கும் விளங்க இன்கதிரோன் மேலெழுந்தான்
பார்க்கு மிடமெங்கும் பால்கதிரோன் தன்னொளியே
நோக்கு மிடமெல்லாம் நுகரும் பெருவெளியே
வாழிய செங்கதிரோன் வாழ்கஅவன் றன்கதிரும்
வாழ்ந்திடுக அவன்தோற்றம் வாழ்ந்திடுக அவன்
நிறமும்
வாழிநன் நெஞ்சமே வளர்கதிரோன் அருள்போங்றி
வாழிநீ பன்னாள் வாழ்ந்திடுக கதிரோனே! *

* 1938ல் எழுதியது

# மாலையும் மகிழ்ச்சியும்

இன்பம் நிறைந்த இனியதொரு நாளினிலே
அன்பில் எனதுள்ளம் ஆழ்ந்திருக்கும் காலமது
பொங்கும் எழில்எங்கும் புகுந்து நடமாடத்
திங்கள் ஒளிபரப்பும் செம்மைப் பொழுதுவர
உலக இருள்நீக்கும் ஒண்கதிரோன் மக்களுக்கு
நிலவும் அமைதிதர நெஞ்சத்தில் எண்ணிமிகு
செம்மை ஒளிபரப்பித் தீஞ்சுவையின் நலமளித்து
மெய்ம்மைப் பொழுதாக்கும் மேலாகும் நேரமதாம்
மாலைப் பொழுது மகிழ்ச்சிக் குரியதுவால்
சாலப் பெருமக்கள் தண்ணீர்த் தடம்நடந்தார்
செங்கதிரோன் தன்கதிரின் செம்மை ஒளியடக்கி
எங்கும் இருளடைய எழில்மேலைக் கடல்புக்கான்
தண்கதிரை வீசும் சந்திரனும் தன் ஒளியாம்
கண்கொண்டு நோக்கிக் காணக்கீழ்த் திசைஎழுந்தான்
கன்று தமைப்பிரிந்துக் கான்சென்று புல்லருந்தி
நின்று அசைபோட்ட நேர்மைப் பசுக்களெல்லாம்
அம்மே என அழைக்கும் அழகுமிகு கன்றெல்லாம்
தம்மையே நோக்கி நிற்கும் தன்மையினைக்
காண்பதற்கே
அம்மாஅம்மா என்றும் ஆவலுடனே திரும்பும்;
பள்ளிக்குச் சென்று பயின்ற சிறுவர்களும்
துள்ளிக் குதித்ததற்பின் சூழ்ந்துவிளை யாட்டிசைத்து
கூ கூ கூ வென்று குதித்து எதிரொலியைக்
கா கா கா வென்று காக்கைக்கு மாறிட்டு
இளமை நலம்நிறைந்த எழிற்சிறுர் வீட்டினிலே
வளமை நலம்கனிய வளரும் செயல்புரியும்
அன்னையை எண்ணி அவள்தருநல் பண்டம் எண்ணி

உன்னியே ஓடி உயர்வீடு நாடிடுவர்;
குளத்தின் கரைகளிலே குலத்துதித்த பெண்டிரெல்
[லாம்
வளத்தின் செயல்பேசி வாரிநீர் கைக்கொண்டு
குடத்தை இடுப்பணைத்துக் கொம்பனையார் கரை
ஏறித்
திடத்தின் மனத்தினராய்ச் செல்வர்தம்
வீட்டுனுக்கே;
உழுவர் வயல்வளத்தை உயர்வாய் மதித்திருந்து
உழவுத் தொழில்புரிந்து ஓய்ந்து திரும்பிடுவர்;
பல்வகையாம் புள்ளினங்கள் பார்ப்பின் நலம்காண
நல்வகைசேர் இரையுடனே நாடிஉடன் கூட்டையும்;
மாலைப் பொழுது மனத்துக் கினியதுவே
சால நலமிக்கத் தமிழ்த்தென்றல் வீசுவதால்
செவ்வானும் தண்ணொளியும் சேர்ந்ததமிழ்த்
தென்றலுமே
எவ்வாயினும் இனிய இன்ப நலம்அளிக்க
மனமொத்த காதல் மகிழ்ச்சிக் கடல்குளித்தார்
மனமொத்து மாலை மதியம் தனைக்காண
உல்லாச மாக அவர் உற்று நடந்திடுவார்
செல்வார் இயற்சை நலம் சேரும் கடலருகே
உலகத்து எவ்விடத்தும் உற்றஒரு மாலையதே
நிலவும்படி என்றும் நின்று பெருமைபெற
ஓங்குகவே நன்மை உலவுகவே இன்பமே
தேங்கும் இறைவனருள் தித்திக்கும் அவனன்பு
அத்தகைய மாலைதனில் ஆனந்த மேலீட்டில்
வித்தகனும் ஆண்டவனின் வியன்சேர்ந்த
நல்லெண்ணம்
உண்டாகி ஓங்கும் உயர்வான ஆனந்தம்
கண்டாகி நிற்கும் காண்போம் இன்பநிலை

வையத்து வாழ்வீர் வளர்மதியம் கீழ்ப்புறமும்
வையந்தனைப் புரக்கும் வெய்யோன் மறுபுறமும்
இடையில் தமிழ்த்தென்றல் இசையும் பெருநலமும்
உற்றவரே நல்லோர் உறுதவரே பிணியுடையோர்
பெற்றவர்கள் மக்களுக்குப் பேணுவீர் இந்நலத்தை
மாலைப் பொழுது மனதுக் கினியதுவாம்
சால உடல்நலத்தைத் தானும் அளிப்பதுடன்
உயிர்க்கு உற்றசுகம் ஓம்பிடுமே ஆதலினால்
அயிர்க்கா வழிவாழ ஆண்டவனார் நன்மாலை
என்றும் அளித்து இன்ப வழிசெலுத்தி
அன்பிலே வாழ ஆசி அருளுகவே!

# இயற்கை அன்னையின் இன்மதி கொழுந்து

பாலா றென்னும் பாக்கிய நதியில்
சாலவே மாலைத் தனி அமர்ந் திருந்தேன்
ஆங்கே
இயற்கை அன்னையின் இன்மதி கொழுந்து
எனக்குவந் தடுத்தது என்னென இசைப்பேன்
செங்கதி ரண்ணல் தன்கதி ரடக்கி
எங்கும் இருள எழுகடல் அடைந்தான்
அக்கா லத்தின் அந்திப் பொழுது
மிக்கவே இன்பம் விளைத்தெனக் கீந்தது
மானிட வாழ்க்கை மாயமென் பதனைக்
காணவே அறியக் கண்ணிமைப் பொழுதில்
மேலைப் பக்கம் மின்னலும் இடியும்
சாலவே கொண்டு சாய்ந்தன முகில்கள்
உலகம் உண்ணும் ஒருதனி ஊழி
கலகம் விளைவிக்கக் கருகிடல் போன்று
அச்சமும் பயமும் ஒருங்கே அளித்து
உச்சியை ஒட்டி ஓங்கி வளர்ந்தது;
கீழ்த்திசைத் தன்மையை கிளர்த்தலும் நன்று
சாந்தங் கொண்ட தவசிதான் எனவே
எந்தோர் மருவும் இல்லா தமைந்தது
இத்தகை இயற்கை என்னுடை மனக்கு
நற்பய னளிக்கும் நன்மதி ஈந்தது
மேலைப் பக்கல் நோக்குவோ மாயின்
கொலைமுதல் தீத்தொழில் கொண்டோன் மனது
கவலையி னாலும் கபடத் தாலும்

அலைவது போன்று அமைந்தது மேகம்
இருளுடைய மனம்போல் இருண்டது ஆங்கண்
அவனுடை மனது அழிந்து முடங்கல்போல்
பலமுடை யிடியும் பயனனித் ததுவே
குணபால்.
தீமை என்பதைச் சிறிதும் அறியா
தூய்மை யுள்ளம் துலங்கி நின்றது
காண்போர் யாவரும் காமுறு வண்ணம்
தீஞ்சுவை ஈத்த திறமென் னிசைப்பேன்!
எனினும்,
கண்ணிமைப் பொழுதே கருங்கொண் டலுமே
நண்ணியெம் மருங்கிலும் நாட்டமுற் றமைந்தது
தூய்மை மறைந்தது துன்பம் தொடர்ந்தது
சேய்மையை விட்டுச் சிறியனில் சென்றனன்
இத்தகை யியற்கை இவ்வுல கியல்பைத்
தெற்றெறன விளக்குந் தேற்றம் என்னே!
நல்லவர் தீயவர் நானில மதனில்
மல்கியே இருவரும் மருங்குறை கின்றனர்
நல்லவர் மனதோ தீமை பறப்பது
கீழ்த்திசை விரும்பல்போல் கேள்வியோர் உதவியை
வாழ்த்தியே நாடுதல் வளமுறற் கழகு
மற்றும்,
தீயவர் சேர்ந்தால் திறத்தகு நலத்தோர்
மாயம தாகி மாணழி படுவர்
ஆதலால் நாமும் ஆணவ முள்ள
தீயவர் கண்ணில் தென்படா தோடி
இயற்கையை ஈந்த இறைவண தடிகளை
மயக்கம தறுக்க வழுத்திடல் புரிவோம்

* 1935ல் எழுதியது

## காலத் தேவா! காக்க வாவா!!

காலமென்று இந்நிலத்துக் கணக்கிட்டு நாள்நீக்கும்
கடவு ளானேய்
காலமெனும் கதியாகிக் கணப்பொழுதாய்
நாழிகையாய்க்
கழியச் செய்வாய்!
காலமென்று பேர்தாங்கி வாரமுடன் மாதமெலாம்
கடந்து நின்று
காலமென்றே ஆண்டகல ஆயுளையும் அடைவிக்கும்
கால காலா! 1

நற்காலம் ஒன்றென்றும் நன்மையெலாம் மிக அளிக்கும்
கால மொன்றும்
பொற்கால மொன்றென்றும் பொன்கொழித்து
வாழ்ந்திடுநற்
புதுமை என்றும்
அற்பர்களின் ஆதிக்கம் அதிகமென ஓங்குவதோர்
கால மென்றும்
துற்காலம் இதுவேயோ? தூயோனே இப்பஞ்சம்
தோற்றி நின்றாய்! 2

நீர்நிலைகள் எனும்பெயரை நிறுவி இவண் நின்றிட்ட
நிலைக ளெல்லாம்
நீர்சிறிதும் இல்லாது நிலமாகிப் பருக்கைகளே
நிறைந்த தையா!

பார்நிறைந்த பஞ்சமதைப் பார்ப்பதற்கும் எண்ணு
தற்கும்
பண்ப தாமோ
ஆர்புரிந்த கொடுமையிது ஐயாவோ காலமெனும்
அரிய செல்வா! 3

தீக்காலம் இதுவேயோ செல்வர்களின் நல்லறமும்
செத்த தேயோ
கோக்களது நீதிமுறை குன்றியதோ அன்றியேன்
கொடிய பஞ்சம்
மிக்கான நிலையினிலே மேதியினில் நிலைத்திட்டு
மிடிமை தந்து
சாக்காட்டைப் பலர்க்களித்துத் தவிர்த்திடவே
செய்வதிது தக்க தாமோ? 4

ஏரிகுளங் காவெல்லாம் இல்லையே நீர்சிறிதும்
இதுவே யன்றிப்
பாரினிலே கால்நடைகள் பகர்உணவுஞ் சிறிதுமின்றிப்
பதறி நின்று
ஓரிரவை ஒருயுகமாகக் கழித்திடவே உயிர்க்கொடுமை
உண்டு செய்தாய்
ஆருடன்நீ கொண்டிட்டாய் அடங்காத கோபம்இது
அரிது மாதோ! 5

தாவரங்கள் நீரற்றுத் தலைகுனிந்து தருக்கழிந்து
தாழ்ந்து போக
மாமிருக வகையெல்லாம மயலுற்று நீரற்று
மயங்கி நிற்க
சாமினிநாம் என்றிட்டே தாழ்வடைய மக்களுமே
தாங் கோணுதை
தீமின்னும் கொடும்பஞ்சம் செய்திட்டாய் காலமேனும்
செம்மைத் தேவா! 6

அப்பப்பா இவ்வாண்டில் அரசியலார் மக்களுக்கு
ஆக்கம் செய்ய
இப்பொழுதும் எண்ணிலரே இறையிலியா நிலங்களையும்
இயற்றி டாரே!
எப்பொழுது இப்பஞ்சம் எமைநீங்கும் காலமெனும்
எழிலோய் உன்னை
இப்புவியில் யாவருமே பழிப்பதுவும் உன்செவியில்
ஏறி டாதோ! 7

மக்களது வருத்தமிகு கண்ணீரும் மனங்கசிந்து
மடிந்து வாடும்!
துக்கநிறை பசுக்களது கண்ணீரும் தூயநலச்
செடிக ளெல்லாம்
புக்குநிலை உயராது புலம்பிமடி கண்ணீரும்
புவியி லின்று
மிக்கபெருந் தண்ணிராய் ஓடுவதே அன்றிபிற
உண்ணீ ருண்டோ! 8

ஆவணியாம் மாதத்தில் அரியவயல் நிலைகளெல்லாம்
அந்தோ அந்தோ
பூவணியும் விழாவினைப்போல் பொலிந்திருக்க வேண்டுவது
போயே இங்கு
வாவிகளும் சோலைகளும் வளமற்று வாடுவதும்
வருத்தம் ஐயா!
தேவர்களிற் றேவனது செருச் செயலோ
அன்றிஇவர் செய்த தென்னோ! 9

சாண்பயிரும் முழப்பயிரும் தரையினிலே விழும்பயிரும்
சற்றும் ஈரம்
காண்பரிய பெருமரமும் கலங்கிஇவண் வாடுவது
கண்டிலாயோ!
மாண்புடைய மக்களுடன் மாக்களுமே ஆயிரத்தில்
மடிய உன்னை
வீண்பழியில் ஆழ்த்திடுவார் வேண்டாம்நீ நற்பயிரை
விளைய வைப்பாய்! 10

பஞ்சமொரு புறம்வருத்த பார்கொள்ளும் ஆசையினால்
பதைத்துச் சீறி
வஞ்சமிகு மேனாட்டு மன்னர்களும் மாபெரும்போர்
வகுத்து நின்றார்*
பஞ்சமதில் வாடாது பரகதியில் மக்களையே
படுத்தற் கென்று
விஞ்யதோர் பேர்யுத்தம் வெடித்தனையோர் விதிகடந்த
கால வேலோய்! 11

உள்நாட்டில் இந்நாளில் ஓங்கியதோர் கொடும் புயல்கள்
உரிய தாமோ
கள்ளரக்கன் வீழ்ந்தாலும் காணாத தீயரக்கன்
காண நின்றான்
பொள்ளலுடை வஞ்சகமும் பொய்மை நிறை அரசியலும்
புலம்பி ஓட
விள்ளிவிலா எங்களது விடுதலையைப் பெறுநாளே
விழைவோம் ஐயா!

*நற்காலம் உடனளித்து நன்மழையை நிலத்தளித்து*
*நாட்டி லெங்கும்*
*பொற்பான சாந்தமெனும் பொறையளித்து இன்பநிலை*
*பொங்க வைத்து*
*உற்பாதச் செயலகற்றி உயர்வான நிலைஇயற்றி*
*உயிரைக் காத்து*
*பொற்காலத் தேவாநீ பூவுலகில் எங்களையே*
*புரக்க வாவா!* 13

*பொல்லாத பஞ்சத்தைப் பொருத்தரிய*
*பெரும்போரைப்*
*போக்கி யெங்கும்*
*எல்லாரும் இன்பநிலை எய்திடவும் இருநிலத்தில்*
*மண்ணுக் காக*
*வல்லாளர் இடுஞ்சண்டை வற்றிடவும் வளம்பலவும்*
*வளரவுந் தான்*
*நல்லானே காலமெனும் நற்றேவா நங்களையே*
*காக்க வாவா!* 14

---

இக்கவிதை 1940ல் உலக இரண்டாம் போர் தொடங்கிய காலத்தில் எழுதியது.

## ஓ ஓ தென்னை உயர்மரமே

ஓஓ தென்னை உயர்மரமே உந்தன் பயனே உயர்நலமே
இளமையில் மகிழ்வாய் வளர்ந்தேபின் ஈவாய்
[வளமைத் தேங்காயே
தாளால் உண்ட நன்னீரைத் தலையால் தருவாய்
[இளநீராய்
வேளா வெய்யில் வேளையிலே வேண்டித் தவிர்ப்பாய்
[விடாய்நீயே.
தென்னைமரமே உன்பெருமை செப்பும் தகைத்தோ
[இந்நீர்மை
மட்டை கீத்தாய் உதவிடுவாய் மட்டில்லாத
[வீடமைப்பாய்
இளநீர்க் காயாய் இன்பளிப்பாய் இறுதி முற்றி
[நெற்றுவாய்
தேங்காய் பண்டம் மிக இனிக்கும் தின்றால் மணமே
[தித்திக்கும்
மக்கள் உனக்கு உழைப்பார்கள் மாற்றித் திருப்பித்
[தந்திடுவாய்!
மக்கள் உன்றன் செயலதனை மனத்தால் எண்ணு
[நிலைஎன்னே!
நன்றி மறவா நயம்பற்றி நல்ல பலன்கள் நாடிடுவாய்
ஆனால் அந்தோ மானிடர்கள் அனியா யம்மே
[அறிந்தார்கள்

நன்றி கெட்டு நலமிழந்து நாளும் இழைப்பார்
[கொடுமைதனை
மட்டை உதவும் நாராக மற்றைப் பொருளும் சீராக
எத்தா லும்மே உதவார்கள் ஏமாற் றத்தே
[மிகுவார்கள்
வீடுகள் கட்டலும் உன்னாலே வீதி பெருக்கலும்
[உன்னாலே
நாடிள நீரும் உன்னாலே நற்பல காரம் உன்னாலே
எல்லா வழியும் மக்களுக்கு இதமே செய்வாய்
[எந்நாளும்
பொல்லாங் கேசெய் மாக்களவர் புந்தியில்
[உன்செயல் கொள்ளாரே!
நன்மை செய்தால் தீதிழைப்பார் நலமே உள்ளத்
[தெண்ணார்காண்
என்றும் உன் றன் வழிபற்றி இன்பத் திருக்க
[ஏற்றமுடன்
ஓங்கிப் பலவாய் உபதேசம் உற்றிட வேசெய்
[உயர்நலமாய்
தாங்கி எம்மை மகிழ்விப்பாய் தழைத்த இன்பம்
[நுகர்விப்பாய்
பாங்கில் உள்ளார் நின்செய்கை பற்றி வாழ்க
[அறத்தாலே!

---

விசு, சித்திரை, க (15-4-41) தமிழ்க்கலேயில் வெளியானது

# சேர வரும்

*அருமைத் தமிழர் கலைபயின்று*
*அன்புப் பயிரும் தலைநிமிர்ந்து*
*பெருமை பிறங்கிப் பேருலகில்*
*பெறுதற் கரிய பேறுபெற*
*உரிமைத் தமிழின் சுவையுணரும்*
*உயர்ந்த பெரியீர்! இதுகாணும்*
*மறுமை தனக்கும் மகிழ்வளிக்கும்*
*மருவி வாரும் சகத்தீரே!* 1

*அன்பு பெறுவோம் கலை பெறுவோம்*
*அரிய நாட்டின் விடுதலையாம்*
*இன்பம் பெறுவோம் நலம் பெறுவோம்*
*யாவும் பெறுவோம் இந்நிலத்தே!*
*வன்பு அகற்றி வெறுப்பகற்றி*
*வேரும் பகைகள் விளைவகற்றி*
*துன்ப மகற்றிச் சுகம் பெறவே*
*சூழ வாரும் சகத்தீரே!* 2

*சாதி பேதம் எத்தனை தான்*
*சமயப் பிணக்கு பலகோடி*
*நீதி அறியா மடமையெலாம்*
*நீக்கி நன்மை நிலைநாட்ட*
*ஓதும் கலைகள் நலனுணர*
*ஒருமை வாழ்வின் பயனடைய*
*யாதும் பெறவே இந்நிலத்தே*
*இயைய வரும் சகத்தீரே!* 3

நமக்குள் பிளவு வேண்டுவதேன்
 நாமே நம்மைக் கொடுமைசெய்து
சுமைக்கு ஆளாய் நின்றிட்டால்
 துன்பம் துடைப்பார் யாருளரோ!
இமைக்கும் பொழுதில் எல்லோரும்
 இன்பத் திருந்தோம் எனஎண்ணி
நமக்கு உரிய விடுதலையை
 நாட வாரும் சகத்தீரே!

ஒன்றே குலமும் நம்மவர்க்கே
 உணரும் இறையும் ஒன்றுமே!
என்றே நம்மை இவ்வாறு
 யாரோ பிரிக்கக் காத்திருந்தார்
இன்றே நமது துயரெல்லாம்
 இரியுங் கால மாதலினால்
நன்றே வருவீர் விடுதலையை
 நாடி வருவீர் நானிலத்தீர்!

ஒருமை வாழ்வே இந்நிலத்தில்
 உயர்ந்த வாழ்வு ஆதலினால்
அருமை நாட்டின் அல்லலெலாம்
 அஞ்சி ஓட ஆண்மையுடன்
பெருமை பெறவே எந்நாளும்
 பெறுதற் கரிய நலமடைந்து
உரிமை வாழ்வில் உயர்ந்தோங்க
 ஒன்றாய் வருவீர் உலகத்தீர்!

## புத்தாண்டு வாழ்த்து!

புத்தாண்டு பிறந்ததிவண் பூவுலகில் நலம்பெறவே
எத்தாலும் இன்பநலம் எய்துவதற் கியைந்ததுவே!
சத்தாகிச் செல்வமுடன் சாற்றுமொரு உண்மையுடன்
புத்தான நலம்பலவும் பொருந்திஉயர்ந் தோங்குகவே!

எவ்வுயிரும் இன்பநிலை எய்துவதற் கையமிலை
எவ்வுயிரும் தம்முயிர்போல் எண்ணிநலம் பெற்றிடுக!
எவ்வுயிரும் இவ்வுலகில் எய்துபல நலன்களெல்லாம்
உய்வழியில் பெற்றென்றும் ஓங்குகவே உயர்நிலத்தே!

தமிழன்னை தன்னருளால் தமிழ்மக்கள் எல்லோரும்
அமிழ்தெனவே அருஞ்செயல்கள் ஆற்றிஉயர் ஆகிடுக!
தமிழ்மொழியும் தனிப்பெருமை தாரணியில் உடன் [கொண்டு
நமதென்றே எல்லோரும் நாடிடவே ஓங்குகவே!

உள்ளத்தில் உண்மைஒளி உற்றுநலம் பெற்றிடவும்
கள்ளத்தைக் கொள்ளாத கருத்துடைய நன்மொழியால்
பள்ளத்தில் சென்றிடுநற் பாய்புனல்போல் அன்புடனே
விள்ளற்கு அரியபுகழ் மேவிஉயர்ந் தோங்குகவே!

பிரமாதி எனுமாண்டு பிறந்ததுகாண் பெருநிலத்தீர்
உரமான செயலியற்றி உயர்பணிகள் பலபுரிந்து
பெருமானும் எங்குநிறை பெரியோனின் அடிபணிந்து
திறமான நல்வாழ்வில் சிறந்தினிது ஓங்குகவே!

சாதிகுலப் பேதமின்றித் தாழ்வுஉயர் எனுமவற்றை
நீதிஅல வெனவகற்றி நேர்மையுடன் வாழ்ந்திடுக!
ஓதுமுயர் தமிழ்வளர்க! உண்மைஅரசியல் நிலைக்க!
கோதிலமு தாயஉயர் கொற்றவன்தாள் போற்றுகவே!

உண்ணுதற்கு உணவுபெற்று உடுப்பதற்கு
உடையுமுற்று
எண்ணுதற்கு நல்லெண்ணம் யாவுமுடன் கலந்திடுக!
மண்ணுலகில் துயர்மறைக மதிநிறைந்த செயல்சிறக்க!
எண்ணரிய தமிழ்க்கலையும் ஏற்றமுற வாழியவே!

## நமக்குள் பிணக்கேன்?

அருமைத் தமிழ் மக்களே—நாமே
அன்னைத் தமிழினுக்கு ஆக்க மாவோம்
பெருமை மிகுந்த நாடு—பரதம்
பேசரும் புகழால் நிலைத்த நாடு
முதன்மையில் நின்ற நாடு—அதன்
முன்னைச் செயல்களெல்லாம் உன்னவே இன்பம்
நிலத்தினில் மேன்மை பெறும்—இங்கே
நேர்மை நிலவும் பெருஞ் சீலமுடனே
இந்தியர் ஒரே இனத்தார்—இதை
ஏசித் தனியே பிரித்தால் வாழ்வுறுமோ
இனிமைசேர் தமிழ்மொழியே—நமக்கு
என்றும் நிலைக்குமொரு தாய்மொழியாம்
சாதிகள் நமக் கில்லை—பண்டைச்
சாதிப்பெயர்கள் தானும் காணவில்லை
ஆதியில் நாம் ஒன்றே—இதற்கு
அருஞ் சங்க நூல்களே ஆதரவாம்
பலபெருந் தமிழ்ப் புலவர்—சங்கம்
பாவித் திருந்தனரே அவருள்ளே
நிலவுமோ வேற்றுமை தான்—எண்ணம்
நீதி ஒன்றே அவர்கள் நேர்மை யன்றோ
சாதிமத பேத முண்டோ—பலரும்
சமண பௌத்த சைவ சமயத்தார்
ஓதியே ஒன்றி நின்றார்—உடனும்
ஓர்சாதி வேற்றுமையும் காண வில்லை
மத உரிமையு முண்டே—இளங்கோ
மனதிற் கினிய சமணம் கொண்டார்

அண்ணனே செங்குட்டுவன்—தனக்கு
அன்புக் கடவு ளரனென நினைந்தான்
மங்கையர்க் கரசியரும்—சைவ
மார்க்கத் திருக்கஅவள் மன்னவனும்
நாட்டுடை மக்களுமே—சமணம்
நலனுறு மதமென நாடி நின்றார்
ஆதலால் நம் மிடையே—முன்னால்
ஆகுமிந்த பேதங்கள் அண்டிய தில்லை
இடையினில் யார் யாரோ—இங்கே
ஏறி நமைப்பிரித்துக் கூறு செய்தார்
அந்தோ அவர் கொடுமை—நம்மை
ஆட்டிப் படைக்க ஒரு சாதகமாகச்
சாதி யென்றே பிரித்தார்—அதற்குத்
தனித்தனிச் சடங்குகள் பல விதித்தார்
நீதியுந் தோற்று வித்தார்—விட்டால்
நீங்கா நரகமென்று காட்டி விட்டார்
இத்தனைக் கொடுஞ் செயல்கள்—இங்கே
இழிந்த நிலையில் சேர்ந்து நிலைத்தனவே!
அப்பா மிகக் கொடுமை—நாட்டில்
அரிய குடிநிலையும் அவதிப்பட
செய்தவர் மிகக் கொடியவர்—அவர்
தீமையை நம்மவர் தெரிந்திட்டனர்
அருமைத் தமிழர்களே—நீங்கள்
அன்னைக் கொடி நிழற்கீழ் அமர்ந்திருப்பீர்
நம் குலம் ஒன்றுமே—நமது
நற்றமிழர் குடியுமே ஒன்றுகும்
கும்பிடு கடவுளுமே—ஒன்றும்
கூடி மகிழ்ந்திடுவீர் கூடுமின்பம்
நமக்குள் பிணக் கெதற்கு—வீணே
நாமே கொடுமை செய்து மாண்டிடவோ

வேண்டாம் இக் கொடுமை—உடனே
விழித்தெழுந் தாவன வேண்டிடுவீர்
குலங் குடி ஒன்ருகக்—கொண்டு
குவலயத் தோர் நமது புகழ் கேட்க
வாழ்குவீர் வண்மையுடன்—தமிழன்
வளம்பல நாட்டினில் ஓங்கிடவும்
தமிழரின் முயற்சி யெல்லாம்—தரையில்
தக்கதொரு செயலெனத் தங்கிடவும்
பிணக்குகள் நீக்கி உடன்—என்றும்
பெறலரு மின்பத்தில் வாழ்ந்திடுவீர்
வாழ்கவே நற் றமிழர்—நாளும்
வளம்பெறு மின்பத்தில் வாழியவே!

## பந்தயக் கொடுமை

பந்தயக் கொடுமைதனை—அந்தோ
பற்றி நினைந்திட்டாலும் பதைக் குதையே
விந்தையே கலியுகத்தே—அம்மம்மா!
வேண்டியே பந்தயத்தை நாடுகிறார்
எத்தனைக் கற்றவர்கள்—மற்றும்
எண்ணரும் மானிடர்கள் நண்ணுகின்றார்
வித்தகம் எனவிழைவார்—அவர்
விதிவழி மதிசெலும் என இசைப்பார்
ஆ! ஆ! மிகக்கொடுமை—அந்த
ஆடும் பந்தயமெனும் பாழ்ங் குழியே
சொல்லவும் திறமற்றதே—கிண்டி
தோற்றமே உள்ளமதில் வாட்ட மளிக்கும்
என்னே அதன் செயலே—பலரும்
எண்ணியே பணங்களைக் கொட்டிவிட்டு
வாடியே திரும்புகின்றார்—நிதமும்
வருத்தத்தால் திரும்பிய மறுதினமே
கூடியே ஓடுகின்றார்—அவர்தம்
கொடிய செயலதனைக் கூறிடிலோ
உள்ளமும் அஞ்சுதப்பா—ஓடி
உற்றநகை மற்றபொருள் விற்றுவந்தே
அள்ளியே கொட்டிடுவார்—அடிமை
ஆகிஅப் பந்தயத்தில் மாய்ந்தொழிவார்
என்னென்பார் ஒருவரில்லை—இதை
இல்லையெனச் செய்வதற்குஞ் சட்டமுமில்லை
பூமியிலே இதனையொத்த—வேறு
பொல்லா எமனொருவன் இல்லவே இல்லை

எத்தனை மனைவிமக்கள்—இதனால்
இன்னல்பல அடைந்து ஏக்கமே பெற்றார்
பித்தனை போலச் செல்வான்—பொல்லா
பித்தனை யாகிப் பெரும் துயரடைவான்
அம்மம்மா இதன் கொடுமை—என்றால்
அளவிட முடியாது ஆயினும்
எண்ணற்ற மக்களிதை—நிதமும்
எண்ணியே சென்றுபணம் கொட்டிடுவார்
வஞ்சகம் வஞ்சகமே—இதை
வரவொட்டாமற் செய்யவே வழி இலதோ
ஈசனே உன் செயலேன்—இன்னும்
இக்கொடுமைதனை ஒழிக்க இரங்கவில்லை
ஆசையெனும் பேய்தானும்—பலரை
ஆட்டிவைக்க நிற்பதுவும் அறியவில்லை
பந்தயக் கொடுமையெல்லாம்—இறைவா
பற்றி எரிந்திட நீபார்த் தருள்வாய்
உய்ந்தனம் அப்பொழுதே—உனது
உயர்ந்த அருள்நிலையே உன்னி நிற்போம்*

**(பந்தயக்)**

* 1940ல் எழுதியது

## தொழிலாளர் துயர் துடைப்பீர்!

தொழிலாளர் துயர் துடைப்பீர்—துன்ப மறைப்பீர்
(தொழி)

அழியாத துன்பநோயில்
அண்டிப் பிழைக் கும் வாயில்
மயலெல்லாம் கொண்டுநின்றதே—மாநிலமதில்
(தொழி)

நாட்டினில் எந்தநாளில்
நாடினர் நல்லவாழ்வு
வாட்டமே குடிகொண்டதே—வரம்புமுண்டோ
(தொழி)

நாள் முழுதும் உழைத்தும்
நன்குபயன் அளித்தும்
ஏழ்மை அகன்றதில்லையே—இந்நிலத்தில்
(தொழி)

நாட்டிலே உள்ளகட்சி
நாட்டமே வைப்பதில்லை
வாட்டமாய் வாடுகின்றனர்—வளம்பெறவே
(தொழி)

நெயிலிடை வெண்ணெயென
வெந்து உருகிநிற்பார்
ஓய்வெனக் காப்பாரில்லையே—ஒன்றுகூடியே
(தொழி)

ஓடி ஓடி உழைத்து
உடம்பை மிகவருத்தி
பாழுக்கிறைத் தாராகுரர்—பார்மீதினிலே
(தொழி)

நல்ல உழைப்புகொண்டு
நாடும் பணிசெய்தாலும்
இல்லையே கூலிதானுமே—இக்குறைபோக்க
(தொழி)

தொழில்முறை ஏற்றமென்று
சொல்லுவார் வாய்ச்சொல்வீரர்
செயலிடைத் தாழ்த்தி வைத்தார்—
தீமையறுத்தே (தொழி)

கூலி குறைத்து விட்டார்
கொடுமை இழைத்துவிட்டார்
வாழ்க்கை கெடுக்கநின்றார்—அவர்வாட்டமற
(தொழி)

அருந்தவே கூழுமற்று
அணியவே ஆடையற்று
பெரும்பிணி வாழ்வையேற்றார்—பிரியநண்பீர்
(தொழி)

வஞ்சக மற்றாரவர்
வழியைக் கெடுக்கச்சிலர்
மிஞ்சியே மேல்வீழ்ந்தார்—அவரகற்றி (தொழி)

தொழிலாளர் சங்கமெங்கும்
துலங்க அருள்புரிய
வழிவரு இறையைப் போற்றியே—வாழ்ந்திட
என்றும் (தொழி)

## வளர்க!

வளர்க நம்நாட்டு வளமெலாம் ஒன்றாய்
வளர்கவே வண்டமி ழெங்கும்
வளர்க நல்லறங்கள் வளர்க பன்னிலைகள்
வளர்கவே அறமெனு மனைத்தும்
வளர்க செந்தமிழர் வளம்மிகு கலையே
வளர்கவே வாணிபம் பிறவும்
வளர்கவே உழவு வளர்கவே உழைப்பு
வளர்கவே வாழ்க்கையின் இன்பம்! 1

பிறவுயிர்க் கின்னா இயற்றிடா தினிமை
பிறங்கியே வளர்க இந்நிலத்தே
மறமெலாம் மடிக மன்னுயிர் யாவும்
மாநிலத் தின்பமாய் வளர்க
அறநிலை உயர்க அருள்நிலை வளர்க
அரியநல் உடல் உரம்பெறுக
பெறலருஞ் செல்வப் பெரும்பயன் வளர்க
பிறங்குக இன்ப வாரிதியே! 2

முத்தமிழ் எனவாம் மொழி இயல் இசையும்
முகிழ்க்கும்நல் நாடக நிலையும்
இத்தரை யதனில் இனிமையாய் வாழ்க
எப்பொருள் களும்நலம் துய்க்க

வித்தகர் அறிவும் விளைந்திடு பயனும்
விண்ணென விளங்கு தண்டமிழே
உய்த்திடு நாடும் ஒன்றியே வளர்க
உயர்கவே அறம்பொரு ளின்பம்! 3

செந்தமிழ் வளர்க்கும் செல்வர்கள் வளர்க
செந்தமிழ் நாடினி துயர்க
விந்தைசேர் இயற்கை விளங்குக உலகில்
விரிகவே ஒன்றெனும் உணர்வு
சொந்தமாய் நிற்போர் யாவரும் என்னும்
துணிபொருள் துலங்குக முடிசேர்
நந்தம தரசும் நாட்டினில் உயர்க
நலமெலாம் வளர்க பல்லாண்டே! 4

பிறரையும் தமபோல் பேணிடும் பெருமை
பிறங்கியே வளர்க இந்நிலத்தே
திறமைசேர் வீரம் செறிக மேல்வளர்க
திகழ்கவே செம்மைசால் அன்பும்
அறமெனு மாக்கம் அயர்விலா தோங்க
ஆண்மையும் அறிவுமே வளர்க
உரனுடைச் செயல்கள் உயர்கவே என்றும்
ஓங்குக நல்லவர் உறவே! 5

நல்லவர் பெருமை நாடோறும் வளர்க
நலஞ்சிறந் தின்பநன் நெறியில்
வல்லவர் வாழ்வும் வண்டமிழ்க் கலையும்
வளமெலாம் பெற்றுயர்ந் திடுக

செல்வமும் அறமும் சேர்ந்தினி துயர்க
　　தீமையே அற்றநல் வாழ்வு
பல்வளத் தோடு பாரிடைப் பரக்க
　　பழந்தமிழ்ப் பெருமையும் பயக்க! 6

இறையருள் வளர்க இன்பமும் சிறக்க
　　இயங்குக இனியநல் வாழ்வு
பொறையுடன் மலர்க புகழ்நிலை புரக்க
　　புண்ணியச் செயல்பல புரிக
நிறைவளம் பெருக நீணிலம் நிறைக
　　நிலமெலாம் நெற்பயிர் நிலைக்க
அறைகழல் இறைவன் அடிபணி அன்பு
　　அவனியின் ஆகுக அழகே! 7

---

விசு, வைகாசி க, (15-5-41)ல் தமிழ்க்கலையில் வெளியானது.

## பொங்குக!

பொங்குக இன்பம் பொங்குக செல்வம்
பொங்குக புவிமுழு தினிமை
பொங்குக பொங்கல் பொங்குக நலங்கள்
பொங்குக அறச்செயல் யாவும்
பொங்குக தமிழும் பொங்குக புலமை
பொங்குக அறிவெனு மிரவி!
பொங்குக கலையே பொங்குக நல்லார்
பொங்குக இறையருட் பொலிவே.

## மனிதன் வாழ்... ...

காலமெனும் பேரெல்லைக் கணக்கிடவும் முடியாது
கடத்தல் இல்லை
நீலஒளி நெடுவான அண்டமுக டதனில்ஒரு
நிலையில் புள்ளி
சாலும்எனும் உலகமதில் தருக்குமிகு உளத்துடனே
தான்மேல் என்றே
கோலமெலாம் பெற்றனமென் றிறுமாக்கும்
மனிதகுலம் கொண்ட தென்னே? (1)

வாழ்நாளும் ஒருநிலை வளரிடமோ ஒருபுள்ளி
வாழும் வாழ்க்கை
பாழ்நாளாய்க் கழியாது பயனளிக்கும் வகைஉலகின்
பண்பு காப்பீர்!
வீழ்நாள்தான் என்றெனவே விளக்கிடவும் முடியாது
வேண்டில் இன்பம்
வாழ்நாளில் நலம்புரிவீர் வாழ்த்திடுமே மனிதகுலம்
வண்மை காண்பீர்! (2)

உடையாலும் உணவாலும் உற்றபல பொருளாலும்
உயர்ந்தோ மென்னும்
நடையாலே நானிலத்தில் நாசமது அல்லாது
நல்ல துண்டோ
கடையானே யானாலும் காசினியில் அவனுநமக்
கமைந்தா னென்ற
தடையில்லா நல்உளத்தால் தழுவிடலா நலம்தருதல்
தளரா இன்பம்! (3)

வாய்மைநெறி சொல்லாலும் வழுவாத செயலாலும்
உள்ளத் தாலும்
தூய்மையுடன் போற்றிட்டு துன்பமிலா இன்பநெறி
தோன்றச் செய்து
செய்மையிலே அனைவோரும் சேர்ந்திடுவோம்
நல்உளத்தால் வாரீர் என்றே
தாய்மையுளம் கொண்டுலகில் தழைத்தொன்றாய்
வாழ்வதுவே தனித்த இன்பம்! (4)

இன்பநெறி வாழ்க்கையினில் எத்தனையோ இருக்குமது
எண்ணி எண்ணித்
துன்பமிலாப் பேரின்பச் சுகம்வேண்டில் மற்றவர்தம்
துயரம் மாற்றி
வன்பகற்றி வாய்மைதனைக் கடைபிடித்து
தியாகமெனும் வளமைச் சேற்றில்
அன்புநெறிப் பயிர்விளைத்து அதன்போகம்
அனைவருக்கும் அளித்தல் வேண்டும். (5)

சாதிகுலம் பிறப்பென்னும் தனிவேறு பாடுகளால்
சக்கை யானோம்
நீதியினால் வேறானோம் நிலைத்தபெரு இன்பநிலை
நிலையா தந்தோ!
வாதமிட்டும் வலிதொடட்டும் வழக்கிட்டும் வாடியது
போதும்! போதும்!!
வேதனையொன் றில்லாத வித்தகராய் உளமொன்றி
வாழ்தல் இன்பம்! (6)

எல்லோரும் இன்பநெறி யெய்துவதும் மக்களுளே
எண்ணொ ணாத
பொல்லாத மாறுதல்கள் பொசுங்குவதும் பூமியதில்
பொலியும் இன்பம்

வல்லார்கள் தமக்கெனவும் வாடுபவர்க் கிலேஎன்னும்
வறுமை நீக்கி
நல்லராய் நாணிலத்தார் ஒருகுலமாய் வாழ்வதுவே
நல்ல இன்பம்! (7)

தோற்றியவர் எத்துணையர் அத்துணையோர்
தம்மில் ஒரு துளியும் வேறு
தோற்றுவதற் கிடமில்லை துன்பமிலா நல்வாழ்வு
சொந்தம் என்றே
காற்றுநிலே தனேப்போலக் களிஇன்பம் அனேவருக்கும்
கருதில் வேறு
மாற்றமிலே என்றுளத்தால் மகிழ்ந்தொன்ருய்
வாழ்வதுவே
மகிழ்ச்சி அம்மா! (8)

எல்லோரும் குலமொன்றே என்பதுவும் இந்நிலத்தில்
மண்ணுக் காக
வல்லாளர் இடும்சண்டை வற்றுவதும் வளம்
செல்வம் எங்கும் [கொழிக்கும்
பல்லாறு நிறைவதுவும் பாரிடத்தே மகிழ்தூங்கப்
பரந்த அன்பு
வல்லாராய் மக்களெல்லாம் வாழ்வதுவும் அன்றிஒரு
மகிழ்ச்சி யுண்டோ! (9)

வாழ்ந்திடுவோம் எல்லோரும் வளர்த்திடுவோம்
அன்புநெறி வளமை கண்டு
ஆழ்ந்திடுவோம் இன்பமதில் அணேத்திடுவோம்
உயிர்களேயே அண்ட மெல்லாம்
சூழ்ந்துமிகு நல்லறிவு துதைந்திடுவோம் செல்வநிலே
துளங்கி மேலே
வாழ்ந்திடுவோம் அறிவொளியாம் மாதேவன்
புகழ்நிலைக்க மகிழ்வோம் யாமே! (10)

## மனிதனுக வாழ்!

1. வளரும் உலகின் உயிரினத்தின் வளமார் உச்ச
நிலையதனில்
வளரும் பொருளாய் மானுடமாய் வயங்கு
மறிவின் உறைவிடமாய்
களவும் பொய்யும் அகலிடமாய்க் கல்வி சேரும்
புகலிடமாய்
நிலவும் வகையில் வாழ்வதற்கே நிலத்தில் வந்த
மனிதாகேள்

2. உலகம் தோன்றிப் பல்லூழி உயிர்கள்
தோன்றிப் பல்லூழி
அலகில் வகையாய்க் கழிந்தொழிய அவற்றுள்
உயர்ந்த மனிதனென
குலவு பெயரால் தண்ணளியும் கொடையும்
இனிமை கலந்துரைக்கும்
நலமும் பொங்க வாழ்ந்திடவே நாட்டில் உலகில்
வந்தவனே!

3. எல்லா உயிர்க்கும் உயர்ந்தவன்நீ என்றே எண்ணி
வாழ்வமைத்து
நில்லா உலகில் புகழ்நிலைக்க நீடும் அறிவே
துணையாகச்
சொல்லால் செயலால் தொல்லுளத்தால் தூய்மை
நிறைவே கொண்டிருந்து
எல்லா உயிரும் இன்புறவும் ஏற்றம் காணும்
செயலுனதே

4. எனினும் இன்று உன்போக்கு எங்கோ செல்லும்
நிலைஎண்ணி
மனமே உளைந்து முறையிடுவேன் மதித்து
ஏற்பாய் எனநினைந்தே
கணமே உன்றன் எதிர்நின்று கற்றோர் முன்பே
கூறியநல்
அறமே உரைப்பேன் மேற்கொண்டு
அல்ல லகற்றி வாழியவே!

5. மாட்டைக் காட்டி மரம்காட்டி மற்றைப்
பொருள்கள் பலகாட்டி
வீட்டை நாட்டை நலம்புரக்கும் விதியை
ஆன்றோர் உணர்த்திட்டார்
மாட்டின் கீழாய் விலங்கினமாய் மற்றோர் இழிக்கும்
செயல்செய்து
கேட்டின் வாயில் செலும்நிலையைக் கேட்டேன்
கண்டேன் கிளர்த்துநின்றேன்.

6. கொல்லாப் பொய்யா நல்லறங்கள் கொடுமை
இழைக்காப் பல்லறங்கள்
எல்லாம் எல்லா நலன்களுமே எய்த உழைக்கும்
நற்செயல்கள்
பல்லோர் முன்னர்ப் பணிவுடைமை பண்பார்
உள்ளம் பகைஇல்லா
நல்லோர் உறவே இவைகொண்டு நடத்தல்
மனிதன் வாழ்வாமே!

7. கூடப் பிறந்தார் தமைப்பகைத்தும் 'கோர்ட்டும்'
வழக்கும் கைக்கொண்டும்
வாடப் பலரே தன்வாழ்வை வளர்த்தும்
சீரற் றொருவாழ்க்கைத்

தேடித் திரிந்தும் தீங்கிழைத்தும் தேய்த்து
அறமே போர்விளைத்தும்
நாடிக் கொடுமை இழைக்குமிந்த நாளில் மனிதன்
செயலென்னே!

8. விண்ணில் பறக்கும் பறவையென விரிக்கும்
கடல்செல் மீனுமென
மண்ணில் விரைந்தார் விலங்கெனவே வாழ
வழிகள் வகுத்தமைத்தான்
கண்ணின் மணியில் சிறந்ததெனக் கற்றூர்
கொள்ளும் களங்கலமிலா
எண்ணின் மனித வாழ்வதனை எங்கோ விட்டான்
ஏனோதான்!

9. வாழ்வாங் கிங்கே வாழ்ந்திட்டால் வற்று வளமும்
மறுமையிலே
தாழ்வொன் றில்லாப் பெருநலமும் தட்டா
தியையும் என அறிந்தும்
வீழ்வே விரும்பி வினைவிளைத்து வேண்டாக்
கொடுமை பலபுரிந்து
தாழ்வே தேடும் தருக்குமிகு தரணி வாழ்வு
மனிதனதே!

10. உற்றூர் வாழ உளமொட்டான் ஊரார் சிறக்க
மனமொப்பான்
கற்றூர் போற்றக் கருத்தெண்ணுன் கல்லார்
உறவே களித்திட்டான்
மற்று ரிவற்கு உடன்வருவார்? மாவாய்ப்
புள்ளாய் வாழ்ந்தாலும்
சற்றே உயர வழியிருக்கும் சரிந்தான் மனிதன்
தரணியிலே!

11. எனவே இந்த இழிநிலையில் இருக்கும் மனிதா!
தலைநிமிர்ந்து
உனையே நினைந்து அறமுரைத்த உரவோர்
சொல்லை உளத்தெண்ணி
அறவே கொடுமை தீமையெலாம் அகல அருளார்
உரம்பெற்று
உறவே கொண்டு பல்லுயிரை ஓம்பி வாழ்வாய்
உய்வதற்கே!

12. மனிதனாக வாழ்வதற்கே மண்ணில் பிறந்த
நீதானும்
மனித உணர்வால் பிறர்நலத்தை மதித்தே
தியாக வழிநின்று
மனிதப் பண்பே உளநிறைய மாற்றமில்லா
வகைசிறந்து
மனிதனாக வாழ்ந்திடுவாய்! மரபே அதுதான்
மகிழ்வாயே!

# திருத்தொண்டர் அண்ணா.

காரோங்கும் தமிழகத்தில் கவினோங்கும் வளம்
பெருக்கிக் கற்றோர் வாழும்
சீரோங்கும் எம்காஞ்சிச் செல்வமென வந்தவனே
சிறக்க வாழி!
பாரோங்கு தொண்டதனால் பகலவனின் உதயத்தைப்
பற்றி இன்று
பேரோங்கு தமிழகத்தின் முதலமைச்சராய்ப்
பிறங்கிடுநல் பெரிய அண்ணால் (1)

கற்றாரும் கல்லாரும் காணாரும் உன்மொழியைக்
கருத்தில் வைத்தே
உற்றாராய்ப் போற்றுவதும் உயர்மொழியாய்
ஏத்துவதும் உணர்ந்த தன்றோ!
மற்றாரும் நினைத்தறியா வகையதனில் தம்பியர்தம்
வலமும் பெற்றாய்
கற்றானே! நீபயின்ற பச்சையப்பர் கல்லூரி
களிக்கு தம்மா! (2)

இனமையிலே தமிழ்த்தொண்டு இளமையிலே
கலைத்தொண்டு இனிய வாழ்க்கை
வளமையெலாம் தொண்டாலே வரல்வேண்டும்
எனக்காட்டி வாழ்ந்த அண்ணால்!

உளமதனில் இருமையிலா உற்றபெரு நல்வாழ்வு
உன்னை தன்றோ!
களமதனில் நீவென்ருய்; கருதரிய தமிழ்நின்று
களிக்கு தம்மா! (3)

வருங்காலத் தமிழகத்தில் வற்ருத பாரதத்தில்
வளமே ஓங்கும்
பெருங்கால மண்ணகத்தில் பேணரிய
மொழித்தொண்டால் பெரிய ரான
அருங்காலத் 'திருத்தெண்டர் அண்ணு'வே
என்றென்று அவனி போற்ற
ஒருங்கார்வத் தமிழ்வளர்த்த உத்தமரே!
உன்செயலால் உலக்கின் றேமால்! (4)

உன்ஞட்சி தனில்மக்கள் உற்றபெரு
நலன்களெல்லாம் ஒருங்கே பெற்றும்
மன்ஞத அறம்நிலைக்க வழிவகுத்தும் வாய்மைமொழி
தவரு வண்ணம்
எந்நாளும் செயல்புரிந்தும் எந்நிலத்தும் தமிழ்நாடே
இன்பச் செல்வ
நன்ஞடென் றனைவோரும் நனியேத்த அரசோச்சி
நாளும் வாழி! (5)

# முருகன் என் முதல்வன்

சின்னஞ் சிறுவயதாகும்—அப்போ
செய்கை தெரியாது வாழ்ந்திட்ட காலம்
முன்னம் பலவாண்டு தாண்டி—நான்
முடியாது ஐந்தாண்டு பருவத்தோ டிருந்தேன்

ஓடி விளையாடி வருவேன்—எனை
உற்றவர் அன்புடன் கட்டி அணைப்பார்
பாடுவ தாடுவ தன்றி—நான்
பயமென்ப தறியாது வாழ்ந்திட்ட காலம்

தெருவினில் விளையாடி நிற்பேன்—எனைச்
சேர்ந்த மற்றவர்களும் சார்ந்துமே நிற்பார்
நிறைமன முடையவர் நாங்கள்—நல்ல
நிலவினில் மணல்வீடு நிறுவியே நிற்போம்

ஒன்றாகக் கூடியே நாங்கள்—தினம்
உயர்வீடு கட்டி மணற்சோறு அடுவோம்
அன்பாய் விருந்தமு தளிப்போம்—அதை
அறிய நினைத்தாலும் ஆனந்தம் அம்மா

மாலைப் பொழுதினில் ஓர்நாள்—நாங்கள்
மகிழ்வாய் மணல்வீடு மாண்புடன் செய்து
சாலப் பலப்பல பண்டம்—மிக்க
தாயாரித்து வந்துமே தனிமையாய் நின்றோம்.

எங்கிருந்தோ வந்தான் ஒருவன்—அவன்
எல்லார் வீட்டையும் விட்டு என்வீடு வந்தான்
பொங்கியே துள்ளிக் குதித்தான்—உயர்
பொற்புடன் எனைக்கண்டு போடுசோ றென்றான்

ஒன்றும் அறியாது நின்றேன்—அவன்
ஓகோ இதேது மயக்கமே என்றான்
துன்றும் உறவினன் நானே—உடன்
சோறு அளிப்பாய் துணையாய் இருப்பேன்

என்றவன் கூறினன் இப்பால்—நானும்
எண்ணுத தெல்லாமும் எண்ணிட நின்றேன்
நன்றிவன் கூறிய தென்னே?—நான்
நாடி விளையாடும் காலத்தில் வந்தான்

சுற்றி இருந்தவர் கண்டார்—அவர்
சொல்லாமலே செல்லச் சூழ்ச்சியும் செய்தார்
பற்றி இழுத்தான் சோறென்று—அதைப்
பார்த்தவர் கண்டு நகைத்துமே சென்றார்

ஏதடா இச்செயல் என்றேன்—அவன்
என்னைநீ அறியாயோ உன்துணை என்றான்
வாதுகள் செய்வது நன்றே—நல்ல
மனமகிழ் உணவெனக் களித்திடு என்றான்

ஒன்றும் தெரியாது நின்றேன்—அட
உன்பெயர் உரைத்திடு ஓர்குவன் என்றேன்
நன்றென் பெயர் முருகன்தான்—நான்
நாடி மலைகளில் வாழ்பவன் என்றான்

அன்றுன் அறிந்திட்ட உள்ளம்—ஏதோ
அறிய நினைத்தது ஆனந்தம் கண்டேன்
தின்னும் பண்டங்களை வாரி— அவன்
சென்று வருவேன் எனமறைந் திட்டான்

ஆண்டுகள் பலசென்ற திப்பால்—என
தாசை முருகனை அன்புடன் காண
வேண்டுவ தென்மனம் அவற்கு—அன்பு
வேண்டுவர் தமைக்கண்டு வேண்டுவன் வழியே

முருகன்என் முதல்வனே ஆவன்—அவன்
முழுமதி முகத்தையே எப்போதும் எண்ணி
அருமைநலம் வேண்டி நின்றேன்—ஓர்நாள்
அவசியம் வருகுவன் என்றே வாழ்கின்றேன்

சொல்லுவீர் அவன் தனைக் காண்பீர்—நல்ல
தூய்மை மலைதனில் வேடுவ னாக
நில்லுவன் இங்கேவா வென்று— என்
நேர்மை மொழிதனை நிகழ்த்துவீர் வாழ்வேன்

முருகன்என் உடல்பொருள் ஆவி— அவன்
முழுமுதற் றலைவனே ஆகினன் கண்டீர்
அருமையின் அன்பினைக் கண்டேன் —அவன்
அருகி லிருப்பதே ஆனந்தம் அம்மா!